வி. கிருஷ்ணஸ்வாமி ஐயர்

(சுருக்க வரலாறு)

கி. சந்திரசேகரன்

கலைமகள் காரியாலயம்

மயிலாப்பூர் :: சென்னை - 4

முதற் பதிப்பு: மே, 1963

விலை ரூ. 1/50

Printed at The India Printing Works, Mylapore, Madras-4.

பொருளடக்கம்

குறிப்பு

1945–ஆம் ஆண்டில் ஏற்கனவே பெரியதொரு வரலாற்றுத் தொகுப்பை என் சிற்றறிவைக்கொண்டு உருவாக்கி, தமிழ் மக்களின் ஆதரவையும் பெற்றுள்ளேன். அப் பிரசுரத்திற்கு இரண்டாம் பதிப்புத் தயாராக வேண்டுமென்பது பலருடைய விருப்ப மாயினும், தற்சமயம் சிறியதான புத்தகத்தைக் கொணர்வதில் முரண்பாடு ஒன்றுமில்லை என்பதால் இதனை வெளியிடக் 'கலைமகள்' காரியாலயம் துணிந்துள்ளது. என் நன்றி அவர்களுக்கு என்றென்றும் உள்ளது.

மேலும் கலைமகள் அதிபர் ஸ்ரீ ராமரத்தினம் தமது தாத்தாவின் அரிய வரலாற்றைச் சிறுவர்கள் அறியவேண்டுமானால் அவர்களுக்குச் சலிப்பேதுமின்றிச் சீக்கிரம் வாசிக்கும் அளவில் ஒரு சிறு புத்தகமும் தேவை என்றே பலகாலமாகக் கூறிவந்துள்ளார். அவருடைய ஆசையையும் பூர்த்தி செய்யவே இம்முயற்சி எழுந்தது.

கி. ச.



வி. கிருஷ்ணஸ்வாமி ஐயர்

(நீதிபதி உடையில்)

1910



வி. கிருஷ்ணஸ்வாமி ஐயர்

(நிர்வாகசபை அங்கத்தினர் உடையில்)

1911

முகவுரை

இந்தியா தேசம் இன்று சிறிது சுருங்கியே பாரதம் என்ற பெயருடன் தனி அரசு செலுத்துகிறது. ஒப்பற்ற தலைவர்களெல்லாம் நூற்றாண்டுகளுக்குச் சற்றுக் குறைவான காலத்தில் பிரிட்டிஷ் ஆட்சியினின்றும் விடுதலையடையப் போர்தொடுத்துச் சுயராஜ்யம் பெற்ற கதை சுவாரஸ்யமானது. காங்கிரஸ் இயக்கம் 1885–ஆம் ஆண்டு தொடங்கிச் செய்துள்ள பல சேவைகளை அழியாத விதம் சரித்திர ஏடுகளில் பொறித்துள்ளது. இனி வரும் சந்ததிகளும், இங்கு மட்டும் அல்ல உலகம் முழுவதுமே, படிப்பினையாகக் கருதக்கூடிய உத்தம புருஷனைப் பாரத நாடு பெற்றது.

மகாத்மா காந்தி என்ற பெயரை உலகம் போற்றிப் பெருமைப் படும் விதம் நம்மிடையே தோன்றிய ஒருவர் சமீபகாலம் வரையில் வாழ்ந்திருந்தார். நம்மில் சிலராவது மகாத்மா வாழ்நாட்களில் வாழ்ந்தவர்களென்று மார்தட்டும் பேற்றைப் பெற்றவர்களாயும் இருப்போம். ஆயினும் அவருடைய மூச்சுக் காற்றாக விளைந்த சத்திய ஒழுக்கமும், அன்பு இதயமும் உயர் விடுதலைக்கான பண்புகள் என்பதை மறந்து தான் வருகிறோம். ராமபிரானும் கிருஷ்ண பரமாத்மாவும் மனித சமூகத்தில் தோன்றியபொழுதும் இவ்விதமே முதலில் அளவிலாப் பெருமைப்பட்டும், வரவர ஞாபகக் குறைவினாலும், சரியானபடி அவர்களைத் தொழாததாலும், பண்பாடும், சீரும் அகன்றுகொண்டு வந்தன போலும்.

அன்று வால்மீகியும் வியாசரும் உள்ளத்தையே உருவாக்கிய மொழிகளில் உத்தமபுருஷர்களை நிலைக்கவைக்கப் பாடுபட்டு, இலக்கியப் பேழையிலாவது அவர்களைப் பத்திரப்படுத்திவிட்டனர். காந்தி அடிகளும் சுயமாக அளித்த ‘சத்திய சோதனை’யில் வாழ்க்கைத் தருமத்தை மனிதன் உணரும் முறையில் விளக்கிவிட்டே தமது கதையை முடித்தார். எல்லாம் காலவெள்ளத்தில் சிறு சுழல்களே யன்றி இன்னும் அவை முழுமை எய்தாமலே மறைவதும் தோன்றுவதுமாகக் காணப்படுகின்றன.

வரலாறுகள் செய்யக்கூடிய பயனும் சொற்பமே. உள்ளம் உருவானவர்களுக்கே இதர உள்ளங்களின் தன்மையும் தவச்சடங்குகளும் விளங்கும். இலக்கியங்கள் செய்யும் நன்மையை வரலாறுகளும் செய்யவல்லன. தகுந்த அத்தாட்சிகளுடன் எழுதப்பட்டவையாயின் இன்னும் சற்று அதிகமாகவே மக்களிடம் இவை அதிகச் சலுகை பெறலாம். மற்றப்படி மனிதர்கள் மறைவதைப் போலவே அவர்களுடைய வாழ்க்கைச் செய்திகளும் மறையத்தான் மறையும். எங்காவது இரண்டொரு பெயர்கள் ஞாபகம் நிலைக்கும் வரையில் வாழலாம்.

ஞாபகம் நிலைக்கும் வரையில் வாழக்கூடிய தேர்ந்த சில உயர்ந்தவர்களில், சென்னை வி. கிருஷ்ணஸ்வாமி ஐயரும் சேர்க்கப் படவேண்டியவர்தாம். சிறிய ஆயுட்காலத்தில் நூறுண்டுகள் வாழ்ந் தவன் செயலாற்றும் பணிகள் பலவற்றை இவர் நிறைவேற்றினுர். சூழ்நிலை முழுவதும் சரியானபடி இன்றுள்ளதுபோல் பக்குவப்படாத காலத்தில், அடிமை வாழ்க்கையை மக்கள் பேணியபொழுது, ஒருவ ரால் செயற்கரிய பொதுத் தொண்டுகளைத் துரிதமாக ஆற்ற இயன் றதைச் சூழ்நிலைக் காரணங்கள் கூறித்தான் நியாயமாக ஏற்பதன் நியதியை விட்டுவிடவேண்டும். ஏனெனில் இவருடைய மனமும் முற்போக்கும் தாமாகவே பரிணமித்தவையாகவே தோன்றும்.

சிலரே, பிறக்கையில் பிறவிப் பயனைப் பூர்த்தி செய்ய உலகில் தோன்றுவது புலனுகும். படைத்தவனுடைய அவசியத்தைப் பொறுத்தே அவர்கள் மண்ணில் வாழ்வதும், கண் இமை மூடித் திறப்பதற்குள் தாங்கள் வந்த காரியத்தை ஒருவாறு முடித்துக்கொள் வதுமாய்க் காண்கிறுர்கள். எதை அவர்கள் தொடங்கினுலும் அதில் வெற்றியும்; எதை அவர்கள் சிந்தனைக்கு உவப்பானதாக மதித் தாலும், அவையே பிற்பாடு மற்றெல்லோருக்கும் உதவியாய் வளருவதும், இறைவனுடைய எண்ணம்போல் ஒன்றையுமே ஆதாரமாகக் கொள்ளாதவைதாம். வி. கிருஷ்ணஸ்வாமி ஐயருடைய உள்ளம் தனிச்சிறப்புடன் திகழ்ந்ததும், அவருடைய செயல்கள் பிறரை உய்வித்ததும் எல்லாமே ஒரு காரணத்தையும் முன்னிட் டவை அல்ல.

இவர் வாழப்பிறந்தார்; மக்கள் இதயங்களில் இன்றும் வாழ்வ தால் மட்டும் இவர் வாழ்வதாய்க் கொள்ளவேண்டும். தமது உறவினர் களையும் கண்காணித்தார். உலகையும் கவனித்தார். ஸ்ரீராமன் ஜீவலோகத்தைக் காப்பாற்றுவதன் பொருட்டுச் சொந்த ஜனங்களை மறக்கவில்லை. அன்புக்கு ஆள் வித்தியாசமே இல்லை. ஆயினும் பகுத்தறிவுடன் உலகை நோக்குவதன் இலட்சியம் மனிதனுய்ப் பிறந்தவனுடைய தனி உரிமை. இதர ஜீவராசிகளுக்கு இது இல்லாததால், மனிதன் மனிதனுக ஆவது, தன்னையும் மற்றவர்களை யும் ஒன்றுபோல் பாவிப்பதால்தான் உண்டாகிறது. இதையே இவர் வாழ்க்கை மெய்ப்பித்தது.

இவர் வாழ்க்கையின் பெரிய வரலாறு ஒன்றை ஏற்கனவே தமிழ் நாடு பெற்றுள்ளது. இது அதனின்றும் சிறிதாக்கிய முயற்சி; அவ் வளவே. நேயர்கள் இதை அங்கீகரிப்பதும் கிருஷ்ணஸ்வாமி ஐயர் பிறந்த நூறுண்டு முடிவடைவதைப் பெருமையுடன் ஒருவாறு குறிப்பதாகும்.

கி. சந்திரசேகரன்.

I. பிறப்பு

உயர்ந்த தொண்டுகளாலும் நற்பணிகளாலுமே மனிதன் நீண்ட காலம் உயிருடன் வாழ்கிறுன். காலத்தினுல் மட்டுமே அவன் வயதை நீண்டதாக நினைப்பதை அறிஞர்கள் ஒப்பமாட்டார்கள். யோகாவாசிஷ்டம் என்ற அரிய நூலில் சொல்லியதையும் ஞாபகப் படுத்துவோம் :

மரங்கள் வாழ்கின்றன ; மிருகங்களும் பறவைகளும்
கூட இருக்கின்றன;
ஆனுல் மனசு ஒன்றைப் பெற்ற மனிதன் வாழ்வது
அதை நன்கு சிந்தனைக்கு உள்ளாக்குவதில்தான்.

பண்பட்டவர்கள் எல்லோருமே ஆயுட்கால அளவினுல் ஒருவனைப் பெரியவனுகக் கருதமாட்டார்கள். சிறந்த பண்புகள் இருந்து பயனுடன் வாழ்ந்தவனையே வெகுகாலம் உலகம் போற்றும். அதுவே கூட அவனுடைய ஆயுசை வளர்த்தும் வழியும் ஆகும். 'காக்கையும் நீண்ட நாட்கள் வாழ்கிறது ; பலியைத் தின்றுதின்று உடல் வளர்க்கிறது.'—இச்சொல் எங்கும் உலவி வருவதை அறிவோம். காக்கையைப்போல் வாழ்க்கையைக் கேவலம் உயிர் வைத்திருப்பதற்காகவே வளர்ப்பதைப் போன்ற பயனற்ற செயல் வேறெதுவும் இல்லை.

சிலருடைய புகழுடல் மட்டுமே அவர்களுடைய ஆயுளைப் பலகாலம் உள்ளதாகச் செய்துவிடுகிறது. சிறு வயதில் அவர்கள் இறந்திருப்பினும், கீர்த்தியினுல் பலகாலம் வாழ்வதுடன், வரும் சந்ததிகள், அவர்கள் உலகில் உடலுடன் வசித்த அவகாசம் குறைவென்பதைக்கூட அறிய இயலாது ஆகிவிடுகிருர்கள்.

மனித சக்திக்கு உட்பட்டவை எவ்வளவோ! நீண்டபொழுது இங்கு இருப்பதொன்றே சக்திகளை வளர்ப்பது என்பதும் ஒரு பிரமை. ஏனெனில் இறைவன் அருளால், சிறிய வயதில் அரிய சாதனங்களைப் பெற்றுப் பெரிய காரியங்களைச் செய்தவர்களையும் நாம் அறிவோம். செயலாற்றும் திறனை ஆயுள் பெருகுவதால் மனிதன் பெறுகிருன் என்பதெல்லாம் சரியானபடி ஒருவருடைய வாழ்க்கை வரலாற்றை அறியாததால் ஏற்படுகிறது.

இந்த நாட்டை மட்டும் எடுத்துக்கொண்டால், மேதாவிகள் எல்லாம் போற்றிய ஆதிசங்கர பகவத்பாதர் முப்பத்திரண்டு

ஆண்டுகளே மண்ணுலகில் உயிருடன் இருந்ததாக மரபு கூறுகிறது. வியக்கத்தக்க மதி நுட்பமும், பரந்த அறிவும் அநுபவமும் ஒருங்கே சேர்ந்த வேறொரு பிறவியை இங்குள்ள அறிஞர்கள் ஒப்புவதில்லை. சமீப காலத்தில், வைராக்கியமும் ஒழுக்கமும் கொண்ட சந்நியாச ஆசிரமத்தில் நாற்பது ஆண்டுகள் முடிவதற்குள் தமது வாழ்க்கையை அரிய பெரிய காரியங்களால் மிகவும் புகழ்பெற்றதாய் நிகழ்த்திய சுவாமி விவேகானந்தரும் இப்படித் தோன்றியவர்தாம். ஆன்மீக வாழ்க்கையில் மட்டுந்தானா இவ்விதமுள்ளவர்களை நாம் அறிகிறோம்? இல்லை; இதர துறைகளிலும் பேரறிஞர்களாயும் புத்திவன்மை படைத்தவர்களாயும் இருந்த சிலரை இந்நாடு சீக்கிரத்திலேயே இழந்திருப்பதை நினைவுபடுத்திக்கொள்வோம்.

கவிதைக்கென வாழ்ந்த சுப்பிரமணிய பாரதி நாற்பது வயதில் இறந்தார். ஆயினும் அவருடைய வாழ்க்கைப் பயன் இன்றும் புதிது புதிதாக மக்களிடையே சுடர்விட்டே திகழ்கிறது. அரசியலில் மகாத்மா காந்தியடிகள் தமது குருவாய்ப் பூஜித்துவந்த கோபால கிருஷ்ண கோகலே என்ற பெரியாரும் எவ்வளவோ சுயநலமற்ற பணிகளைத் திறமையுடன் செய்தும், அதிக நாட்கள் வாழ்க்கையை நடத்த இயலாது வியாதியினால் பீடிக்கப்பட்டு முடிவடைந்தார். இன்றும் அவரை நினையாதவர்களே நாட்டில் இருக்கமாட்டார்கள். நாற்பத்து ஒன்பதுகூட நிறையாதுதான் அவர் மறைந்தார் என்பதை உலகம் அறியவே திணறுகிறது.

அதே நிலையில்தான் மற்றொரு தென்னாட்டுப் பெரியாரைப் பற்றியும் நாம் நினைக்கத் தோன்றுகிறது. பிரிட்டிஷ் ஆட்சியின்கீழே சென்னை மாகாணமாக இருந்த தென்னாடு கடந்த ஒரு நூறாண்டுகளுக்குள் வி. கிருஷ்ணஸ்வாமி ஐயரைப் போன்ற தரும சிந்தனையும், கூரிய புத்தியும், பிறர்பால் அன்போடு ஒழுகுவதே தமது பிறவிக் கடன் என்ற கருத்தும் செழித்தவர்களை அதிகம் பெறவில்லை என்றே கூறலாம். ஆம்; இவருக்கு வயசு நாற்பத்து எட்டே முடிந்திருந்தது, மரிக்கும் தறுவாயில். ஆயினும், இவர் இயற்றிய பல நன்மை தரும் சேவைகளை எண்ணுங்கால் வரும் சந்ததிகள் ஏதோ பலகாலம் வாழ்ந்து இருந்தவராகவே இவரைக் கருதுவார்கள். குறுகிய வாழ்க்கையில் பெருகிய பயனுள்ள செயல்களால் புகழோடு தோன்றிவிட்டார் இவர். புகழுடலுடன் இன்றும்—நூறாண்டு கழிந்த பின்னும்—வாழ்கிறார் என்றே கூறவேண்டும்.

வறுமையால் வாடிய குடும்பம் அல்ல இவருடையது; பெரிய தனவந்தருடைய குடியும் அல்ல இவர் தோன்றியது. இவர் தந்தையாரான அரிவிழிமங்கலம் வெங்கடராம ஐயர் முனிசீப் பதவியில் சிறிது

காலம் உத்தியோகம் பார்த்தவர். படிப்பாளி என்ற விதத்தில் பி.ஏ., எம்.ஏ. பட்டங்கள் பெருவிடினும் ஆங்கிலம் கற்று, படிக்கவும் பேசவும் நன்கு பயின்றவர்தாம். சிரஸ்ததாராகக் கொஞ்சகாலம் வேலைபார்த்த வர். மேல்பதவியிலிருந்த வெள்ளைக்கார நீதிபதிகளின் சிபார்சின் பேரில் முன்சீப் ஆனார். உயர் நீதி மன்றத்தில் ஸர். டி. முத்துஸ்வாமி ஐயர் நீதிபதியாக விளங்கிய காலத்தில் அவருடைய மதிப்பிற்கு உரிய வர்களில் முன்சீப் வெங்கடராம ஐயரும் ஒருவர். பத்து வருஷங் களாவது இவர் அவ்வேலையில் சுய ஊக்கத்தையும் சட்டத் தெளிவை யும் காட்டிக் கோர்ட்டு நடவடிக்கைகளில் தமது அசாதாரண விவேகத்தைக் கொண்டு தீர்ப்புக்கள் நிறையச் செய்துவிட்டார். 1835–ஆம் வருஷம் பிறந்த இவர், சுமார் ஐம்பது வருஷங்களே உயிருடன் வாழ்ந்தார். இவருடைய கச்சேரியில் வக்கீல்களாய் வாதாடியவர்களுக்குப் பரபரப்பு ஏற்படுவதற்குக் காரணம் இருந்தது. காலதாமதத்தை நீதிபதி பொறுக்கமாட்டார். மேலும் தமது அதிருப்தி யையும் பலர் அறிய வெளிப்படையாகச் சொல்லிவிடுவார். பிரபல வக்கீல் ஒருவர் இவர் கோர்ட்டில் வியாஜ்யம் எடுபட்டபின் ஆஜர் ஆனார். இவர், பரிகாசமாக, “ஐயா, இவ்விடத்தில் உங்கள் காது களில் ஜொலிக்கும் வைரக் கடுக்கன்களுக்காவது, தொந்தியில் ஊச லாடும் தங்கக் கடிகாரச் சங்கிலிக்காவது மரியாதை செய்வதை எதிர் பார்க்க வேண்டாம்” என்று உறுதி கூறித் தலைகவிழச் செய்து விட்டார் ஒரு சமயம்.

இவரிடம் சாட்சிகள்பாடு சிரமம். ஏனெனில், வாக்குமூலத்தில் எங்காவது துளி பொய் என்று இவருக்குப் பட்டுவிட்டால், பிற்பாடு சாட்சி சொன்னவன்பாடு திண்டாட்டந்தான். ‘ஏ அப்பா! இவர் வாயிலிருந்து முதலில் தப்பினாலே போதும்’ என்று கதிகலங்கிப் பொய்ச் சாட்சி சொன்னவன், வெகுண்டு ஓடிவிடுவான். நல்ல அநுஷ்டானமும் நியமமும் உள்ளவர் இவர் என்றே பலர் சொல்லு வார்கள். ‘அவரது முகத்திலே ஒரு பிரகாசம் இருக்கும். அவருடைய மேதையும் மனோதைரியமுமே அதற்குக் காரணங்கள்’ என்று தமிழ்த் தாத்தா மகாமகோபாத்தியாய உ. வே. சாமிநாத ஐயர் அவர்கள் தமது ‘நினைவு மஞ்சரி’ என்ற புத்தகத்தில் குறித்துள்ளார்கள். நேரில் இவரைப் பார்த்திருப்பதால் ஸ்ரீ ஐயர், இவ்வாறு எழுதி யுள்ளார்.

முக்கியமாக ஒரு குணம் இவரிடம் தெரிந்தது. இவருடைய பிள்ளைகளிடமும் பிற்காலத்தில் இதே சுபாவம் இருந்ததால் அதனை மட்டும் சொல்லுவது அவசியமாகிறது. வெங்கடராமையருக்கு வெளி வேஷங்களில் என்றுமே மதிப்புக் கொஞ்சமும் இல்லை. பெரிய

அந்தஸ்தில் உள்ளவர்களின் நடத்தையில் எங்காவது அற்ப தோஷத்தைக் கண்டுவிட்டாலும் அதனை மன்னிக்க இவரிடம் தயையே ஏற்பட்டதில்லை. பெரிய மிராசுதார் ஒருவர் கிராமாந்தரங் களில் அந்தஸ்தில்லாதவர்களை அலட்சியம் செய்து வந்தார். தண்ணீரை இதரர்களுக்குப் பாய்ச்சும் காரியத்தில் தம் செல்வாக்கை உபயோகித்துச் சரியானபடி ஜலம் பாயாமல் அடித்து வந்தார். அவரிடம் உள்ள கெட்ட எண்ணத்தை அறிந்ததனுல் நேரில் ஒரு சமயம் அவரைக் கண்டபோது, கரம்குவித்த அவருக்குப் பதிலுக்குக் காட்டவேண்டிய உபசாரத்தைத் துளியும் காட்டாமல்தான் வெங்கட ராமையர் அவரைக் கண்டு விலகினுர். பின்பு விசாரித்ததின்பேரிலும், "அவரை நன்ருக நான் அறிவேன் ; அவர் பலருக்குத் தீமை புரிபவர். அவரிடம் எனக்கு மதிப்பில்லை. ஆகையால்தான் பதிலுக்கு நமஸ் காரம் செய்யவில்லை" என்று மறைக்காத மனக்கசப்புடன் வெளி யிட்டார் விடையை.

மற்ெருரு நிகழ்ச்சியையும் அறிவது அவசியம். அதாவது மேலதி காரிகளிடம் வேண்டியதற்குமேல் சலாம் போட்டுச் சுயநன்மைக்காகத் தமது பதவிக்கு அகௌரவத்தை விலைக்கு வாங்க மறுத்தவர் வெங்கட ராமையர். ஒரு ஜில்லா ஜட்ஜ்—வெள்ளைக்காரன் ; அக்காலங்களில் தஞ்சாவூரில் நீதிபதியாக இருந்தான். கிரேகாம் (ஐ.சி.எஸ்.) என்பது அவன் பெயர்; மிகவும் பொல்லாதவன். உத்தியோகத்திலும் அதிக மாய்ப் பதவிக்குள்ள அதிகாரத்தை நிலைநாட்டப் பாடுபட்டவன். அக் காரணமாகத் திடீர் திடீரென்று தகவலின்றியும் கீழ்க்கோர்ட்டுகளை மேற்பார்வையிட விஜயம் செய்வான். சீர்காழியில் வெங்கடராமையர் முன்சீப் வேலையில் இருக்கையில், ஒரு ஞாயிற்றுக்கிழமையன்று ஜில்லா ஜட்ஜ் வருவதாகத் தகவல் காலையில் தெரிய வந்தது. சிவ பூஜையில் பற்றுள்ள முன்சீப், விடுமுறை நாட்களில் எதிர்பாராத மேலதிகாரியின் வருகையை அவ்வளவாக நியாயமென்று கருதவில்லை போலும். ஏனெனில், இவர் துளியும் அவசரமின்றித் தமது அநுஷ் டானங்களையும், பூஜையையும் சரிவர முடித்துக்கொண்டு பின்பே ஜில்லா ஜட்ஜைப் பேட்டிகாண வந்தார். இதனிடையில் அந்த வெள்ளைக்காரத் துரை தான் வந்ததும் உடனே காண வராத முன் சீப்பை அவமானப்படுத்துவதென்று தீர்மானித்து, தான் வந்ததன் அறிகுறியாகத் தஸ்தாவேஜுகளை யெல்லாம் அலங்கோலமாகக் கலைத்து வைத்துவிட்டுத் தன் இடம் திரும்புவதற்கு ரெயில் நிலையத் திற்குச் சென்ருன். அசாத்தியச் சினம் அவன் உள்ளத்தில் குடி கொண்டுள்ளதைப் பொருட்படுத்தாத வெங்கடராமையர் அவனை ரயில் ஸ்டேஷனில் சென்று வணங்கினுர். துரையும், இவர் வாயி

னின்று தமது தாமதத்திற்காக எந்தவித மன்னிப்பையும் யாசிக்கும் மொழிகள் வராததைப் பார்த்து, இன்னும் அதிகமாகக் கோபம் கொண்டு, "ஐயா, ஏன் இவ்வளவு தாமதம் ?" என்று அதட்டினுன். நிதானமாகப் பதில் இவரிடம் கிளம்பியது: "ஞாயிற்றுக்கிழமைகளில் துரை அவர்கள் வருவதை எதிர்பாராததால்தான்" என்று. அக்கினிச் சுவாலேயில் எண்ணெயை மொண்டுவிட்டதைப்போல் கனலேக் கக்கிக்கொண்டு துரை பேசினுன்: "ஓய், உம்முடைய மரியாதை கெட்ட நடத்தைக்கு வழி செய்கிறேன். அதிசீக்கிரம் பழைய சிரஸ்ததார் பதவிக்கு உமக்கு மாற்றுதல் ஆகப்போகிறது" என்ருன். முன்சீப் சொன்ன மொழிகளில் அவருடைய தைரிய சுபாவம் பளிச் சென்று வெளியாகிறது:

"ஆகா, செய்யுங்கள்; துரையவர்கள் வண்டி வண்டியாக என்னேப்பற்றிப் புகார் செய்து எழுதினுலும், என்மேல் உள்ள ஒரு ரோமத்தையும் அசைக்க முடியாது. நான் நியாயமாக நடந்ததை உலகம் மதிக்கும்" என்ருர் வெங்கடராமையர்.

இந்தச் சம்பவம் நடக்கையில், இவருடைய முதல் இரண்டு குமாரர்களான சுவாமிநாதனும், கிருஷ்ணசுவாமியும் படிப்பு முடிந்து, மூத்தவன் தஞ்சையில் வக்கீலாகவும், இளேயவன் சென்னேயில் சட்டக்கல்லூரியில் பயின்றுகொண்டும் இருந்தார்கள். தகப்பனுர் பயமின்றிச் சொன்ன பதிலுக்கு அவர்களுடைய அங்கீகாரம் இருந்ததுமன்றி, உயர்நீதிமன்றத்தில் அச்சமயம் அமர்ந்திருந்த முத்து ஸ்வாமி ஐயரின் சலுகையும் இவருக்கு இருந்தது. ஜில்லா ஜட்ஜுக்கு, உயர்நீதிமன்றம் விடுமுறையில் கீழ்க்கோர்ட்டுகளேப் பார்வையிடும் சிரத்தையைக் குறைத்துக்கொள்ளவே தாக்கீது அனுப்பியதெனத் தெரிகிறது.

வெங்கடராமையருக்கும், அவருடைய மூத்தமனேவி சுந்தரிக்கும் இரண்டாவது மகனுகக் கிருஷ்ணஸ்வாமி பிறந்தார். மூத்தவனுன சுவாமிநாதன் இவருக்கு இரண்டே ஆண்டுகள் முன் பிறந்தார். 1861–ஆம் வருஷம் பிப்ரவரியில் மூத்தவனும், 1863–ஆம் ஆண்டில் ஜூன் 15–ஆம் தேதி விடியுமுன் பின்இரவு 3–30 மணிக்குமேல் இளேயவனும் பிறந்தார்கள். இன்னும் இரண்டு பிள்ளேகள் அடுத் தடுத்து வெங்கடராமையருக்குச் சுந்தரியினிடம் பிறந்தார்கள். மகாலிங்கம், கோபாலன் என்ற இரு சிறுவர்களும் மிகவும் இளமையி லேயே தந்தை தாயை அலறவிட்டுவிட்டு இறந்தனர். புத்திர சோகமேகூட வெங்கடராமையரின் நீரிழிவுக் கோளாறுக்கு முக்கிய காரணமாக ஏற்பட்டது எனலாம்.

சுந்தரி என்ற மனேவி அகாலமரணம் அடைந்ததால், இரண்டாம்

தாரமாகச் சுப்பலக்ஷ்மியை மறுவிவாகம் செய்துகொண்டார் வெங்கடராமையர். அடுத்தடுத்து மீனுட்சிசுந்தரம் என்ற ஒரு பெண்ணும், சந்திரசேகரன், ராமச்சந்திரன் என்ற இரண்டு பிள்ளைகளும் அவளிடமும் இவருக்கு ஏற்பட்டனர். மறைந்த சிறுவர்கள் இருவரையும் ஒரு விதத்தில் மறக்கச் செய்தனர் மாற்ருந் தாயிடம் பிறந்த இவ்விரு புத்திர ரத்தினங்களும்.

கிருஷ்ணஸ்வாமி, ரோகிணி நட்சத்திரத்தில், விருஷப லக்கினத்தில் பிறந்தார். திருவிடைமருதூரில் மாமன் இல்லத்தில் இரவு பின் ஜாமத்தில் பிள்ளை பிறந்த பிற்பாடு பெரியவர்கள் ஜாதகத்தைக் கணித்தார்கள். பிள்ளை யோகவானுயும், தீரனுயும் இருப்பான் என்றே ஊகித்தனர் சோதிடர்கள்.

மூத்தவனுன சாமா பதின்மூன்று வயசு நிரம்புவதற்குள்ளேயே 'மெட்ரிக்' பரீட்சையில் மிகத் திறமையுடன் தேறிவிட்டார். கூரிய மூளையும், பொத்துக்கொள்ளும் ரோஷ சுபாவமும் சிறுவயதிலேயே அவரை அணுகுவதில் பிறருக்குப் பயங்கொள்ள வைத்தன. அவரது ரோஷம் பேர் போனது. குடும்பத்தில் அடிக்கடி மாற்ருந் தாயிடமும் அதனுல் தகப்பனுரிடமும் அவருக்குக் குற்றங்களுக்குக் காரணங்கள் தோன்றி மனக்குறை உண்டாகும். தகப்பனுருக்கு மகனிடமிருந்த பெரு மரியாதையே எதையும் பொறுத்துக்கொள்ளத் தூண்டியது.

கிருஷ்ணஸ்வாமிக்குத் தந்தையின் குணமும் அண்ணனுடைய வேகமும் இருந்தபோதிலும், தானுக எதையும் மிகைப்படுத்தவோ, அளவுக்கு மீறிப் பிறர்மேல் தோஷத்தை நினைக்கவோ மனம் இடந் தருவதில்லை. வெளியில் பதற்றமான சுபாவம் கொண்டவராகத் தோன்றினுலும், உள்ளே எதையும் சமயோசிதமான முறையில் ஆலோசனையுடன் நிறைவேற்றும் சொந்த ஆற்றலும் சிறுபிராயம் முதல் இவரிடம் வளர்ந்து வந்தது.

குழந்தையாக இருக்கையில் இவருடைய தகதகவென்ற மேனியும், கதுப்புக் கன்னங்களும் பார்ப்பவர்களை வசீகரித்ததில் ஆச்சரியம் இல்லை. உடலில் துறுதுறு என்று ஓர் உணர்ச்சி மேலோங்கி, குத்துச் சண்டை முதலிய தேகப் பயிற்சிக்கான விளையாட்டுக்களில் மனம் செல்வதை அன்று இவரைக் கண்டவர்கள் பிற்பாடு சொல்லியுள்ளார்கள். மேலும் சிறுவனிடத்தில் சுபாவமான தைரியம் அதிகம். ஒருசமயம் தந்தை ஆபீசுக்குப் போயிருந்தபொழுது அவரிடம் ஓர் ஆள் ஓடிவந்து குழந்தை கிருஷ்ணன் கோயில் மதிற்சுவரின்மேல் ஏறிக்கொண்டு உயரத்தில் நடப்பதாகச் செய்தி கொண்டுவந்தான். பிடிவாதமாகக் கீழே இறங்க மறுப்பதாகவும், அந்த ஆள் கவலையுடன் எஜமானரிடம் தெரிவித்தான். பாவம், தந்தைக்கு

உடனே தனது ஆபீஸ் மேசையைவிட்டுக் கிளம்பத்தான் தோன்றியது.

ஆனால், பரபரப்புடன் கோயில் சமீபம் செல்லுகையில், மனத்தில் புரண்ட கவலைகளுக்கு எல்லையே இல்லை. தன்னைப் பார்த்ததும் பயந்து சட்டென்று இறங்கமுயன்று தவறி விழுந்தால் என்னவாகும்! கைகால் முறியுமே! பெற்ற மனம் பித்து அல்லவா! ஆனால், பிள்ளை மனம் அச்சமயம் மிகுந்த நிதானநிலையில் இருந்ததையே தைரியத்தின் அறிகுறியாகக் கொள்ளத் தோன்றுகிறது.

"அப்பா கிருஷ்ணு, நீயாக இறங்கவேண்டாம்; நான் உதவி தேடும்வரையில் ஜாக்கிரதையாக அங்கேயே இரு" என்று தகப்பனுர் பிள்ளையை வேண்டிக்கொண்டார். இவருடைய கவலை நீடித்திருக்கவில்லை. ஏனெனில், சிறுவன் துளியும் அவசியமற்ற கவலைகளையோ பரபரப்பையோ பூணுமல், மெல்ல மெல்ல இடம் பார்த்து மதிற்சுவரிலுள்ள கற்களின் இடைவெளிகளில் காலை ஊன்றிப் பூமியில் வந்து இறங்கினுன். மதில்மேல் ஏறிய துணிச்சல் ஒருபுறம் இருக்க, இறங்கும் தறுவாயில் பயப்படாமலும், சஞ்சலமே காட்டாமலும் இருந்ததையே பிற்பாடு வயசானபொழுதும் குணங்களாய் விளைந்த இவருக்குள்ள வேகத்தினிடையே தெரிந்த நிதானத்தை யாவரும் கண்டு அதிசயித்தார்கள்.

II. படிப்பும் தொழிலும்

திருவிடைமருதூரில் உள்ள சிறு பள்ளியில் ஆரம்பக் கல்வி பயின்றார் கிருஷ்ணஸ்வாமி. உபாத்தியாயர்களுக்குச் சிறுவனிடம் நல்ல அபிப்பிராயம். தலையில் மயிர் அடர்ந்து வளர்ந்திருந்ததால் அடிக்கடி பிள்ளையின் முடி அவிழ்ந்து நாலுபக்கமும் கூந்தல் சிதறியதை ஓர் உபாத்தியாயர் அடிக்கடி முடிந்துவிடுவாராம்.

தஞ்சையில் வேலை பார்த்த தகப்பனிடம் மேல் படிப்பிற்காகச் செல்லவேண்டியதாகிவிட்டது பிள்ளைக்கு. தஞ்சையில் அக் காலங்களில் எஸ். பி. ஜி. மேற் பள்ளிக்கூட மென்ற ஒரு கல்வி ஸ்தாபனம் இருந்தது. டாக்டர் மார்ஷ் என்ற வெள்ளைக்கார துரை அதன் தலைமை ஆசிரியராக இருந்தார். மாணாக்கர்களிடம் மிகுந்த பரிவுடன் அவர் பாடம் கற்பித்தவர். அச்சமயம் இவருடன் நட்புரிமையுடன் பழகிய மாணாக்கர்களில், பிற்பாடு பெரிய அறிஞராய் விளங்கியவர் சிவஸ்வாமி ஐயர். முதலில் கிருஷ்ணஸ்வாமியின் வகுப்பில் அவரும் வந்து சேர்ந்தார். இருவரும் பால்ய சிநேகிதர்கள் ஆனார்கள். தொடர்ந்து அவர்கள் படிப்பு, வளர்ப்பு, உத்தியோகம் எல்லாம் சேர்ந்தே ஏறியதை வாசகர்கள் நினைவில் வைக்கவேண்டும்.

1877–ஆம் வருஷம் மெட்ரிகுலேஷன் வகுப்புக்காகக் கிருஷ்ண ஸ்வாமி கும்பகோணம் சென்றார். இவருடைய தமையனார் சுவாமி நாதன் ஏற்கனவே கும்பகோணத்திலுள்ள கலாசாலையில் பி.ஏ. மாணாக்கராகப் படித்து வந்தார். சிவஸ்வாமியும் நண்பனைவிட்டுப் பிரிய மனமில்லாமல், கும்பகோணம் செல்வேன் என்று பிடிவாதமாக இருந்து அவ்விடத்திலிருந்த பெயர் பெற்ற அரசாங்கக் கலாசாலையில் இடம் பெற்றுக்கொண்டார். அங்கிருந்த உபாத்தியாயர்கள் அக் காலத்துத் தென்னிந்தியக் கல்விச் சரித்திரத்திலேயே மிகவும் போற்றப் பட்டவர்கள்தாம். போர்ட்டர்துரை, கோபால்ராவ், ஆர். வி. ஸ்ரீநிவாஸ ஐயர் முதலிய நிபுணர்கள் உபாத்தியாயத் தொழிலையே மேம்படச் செய்து வந்தனர். அவர்களிடம் பாடம் பயின்ற மாணவர்கள் என்றாலே தனியான கௌரவத்திற்குப் பாத்திரமானவர்கள்தாம். பிற்பாடு உயர்ந்த பதவிகளில் அமர்ந்திருந்த தென்னிந்தியப் பிரமுகர்களில் பலர் அந்தக் கல்லூரி மாணவர்கள் என்பதை மறக்க இயலாது.

மெட்ரிக் பரீட்சையில் ராஜதானியில் முதல் வகுப்பில் தேறியவர் கிருஷ்ணஸ்வாமி. சிவஸ்வாமியும் அதே வகுப்பில் தேறியபோதிலும்,

அவருடைய இடம் சற்றுத் தள்ளியே போய்விட்டது. நண்பனிடம் சிவஸ்வாமிக்கு மதிப்பு ஏறியதற்குக் காரணம் கிருஷ்ணஸ்வாமி, தேறியவர்களில் முதல் பத்துப் பேர்களுக்குள் ஒருவராக இருந்ததே. மாருத நன்மதிப்பை என்றும் நண்பரிடம் வழங்கிய சிவஸ்வாமி பிறரிடம் சொல்வதாஞலும் நண்பனைப்பற்றித் துளியும் அசூயை யின்றிப் பாராட்டியே எதையும் கூறுவர்.

பாராட்டிய நண்பனை வரனுகத் தமது மகளுக்கு விரும்பிய திருவாலங்காட்டு ராமஸ்வாமி சாஸ்திரியிடம் சிவஸ்வாமி சம்ஸ்கிருதப் பாடம் பயின்றுவந்தார். அச்சமயம் அவரும் தமது மூத்த மகளுக்குச் சரியான வரன் தேவை என்று கருதி முன்சீப் வெங்கடராம ஐயரின் இரண்டாவது பிள்ளையின் ஜாதகத்தை வாங்கினுர். ராமஸ்வாமி சாஸ்திரிகளின் மாமனுரான வைத்தண்ணுவுக்குச் சோதிடம் நன்ருக வரும். பேத்தியின் ஜாதகத்துடன் கிருஷ்ணஸ்வாமியின் ஜாதகத்தைப் பொருத்த அவரும் மனத்தைத் திடப்படுத்திக்கொண்டார். ஏனெனில், வயசு அதிகமாகாத காலத்தில் பெண்ணுக்கு மரணம் ஏற்படலாம் என்று அவருக்குத் தோன்றியபோதிலும், அதிர்ஷ்ட ஜாதகமாகப் பட்டதால் இந்த வரனையே கடைசியில் நிச்சயித்தார்கள். சிவஸ்வாமியைக் கேட்டதில், தமது உபாத்தியாயரின் மகளுக்கு அதைவிடவும் உயர்ந்த கணவன் கிடைக்கமாட்டான் என்றே தமது சொந்த ஆர்வத்தையெல்லாம் கொட்டிச் சொல்லிவிட்டார்.

பெண் நிறம் குறைவு; புருஷன் பக்கத்தில் ஜோடிப் பொருத்தம் இன்மையைச் சிறிதும் பொருட்படுத்தாதுதான் தந்தை வெங்கட ராம ஐயர், அக் கல்யாணத்தை மகனுக்குச் செய்வதில் முனைந்தார். குலமும், ஒழுக்கமும் நிறையவேண்டும் என்ற ஒரே குறி வெங்கட ராம ஐயரிடம் வெளியாகியது. ராமசுவாமி சாஸ்திரிகள் கண்ணிய மான பழக்கங்கள் உள்ளவர். நல்ல படிப்பாளி. தஞ்சையில் அக் காலங்களில் வியாபகமாக உள்ள சாஸ்திர விற்பன்னர்களில் அவரையும் சேர்த்தேதான் அக்காலத்து மனிதர்கள் சொல்லுவார்கள்.

கல்யாணம் திருவாலங்காட்டில் விமரிசையாக நடைபெற்றது. நண்பர் சிவஸ்வாமியும் கூடவே மாப்பிள்ளைத் தோழனுகி, விருந்து முதலிய உபசாரங்களில் பங்குகொண்டார். பாலாம்பாளை அக்காலங் களில் பார்த்தவர்கள் அவளுக்கு எலுமிச்சம்பழம் போன்ற அக முடையான் கிடைத்ததை அதிர்ஷ்டமென்றே சொன்னுர்கள். 'அம்மங்கா' என்றே அக்கிரகாரம் பூராவும் அவளை அன்புடன் அழைக்கும். தனது ரூபத்தையோ தனது படிப்பையோ நினையாது தன்னைக் கரம் பிடித்த உத்தமனை மனமாறப் போற்றிய நெஞ்சு பாலாம்பாளுடையது. இல்லறம் நடத்தும் பொறுப்பை மேற்

கொள்வதில் துளியும் பின்வாங்காதவளாய், மாமனரிடம் பக்தியும், சிரத்தையும் காட்டிவந்தாள். பூஜை செய்ய வெங்கடராம ஐயர் உட்கார்ந்தால், வெகு நாழிகை அந்தச் சடங்குகளில் கழித்துவிடுவார். கடவுள் ஆராதனைக்காக நைவேத்தியம் முதலியவைகளைத் தயாரித்து பூஜை முடியும்வரையிலும் காத்திருந்து பிற்பாடே உணவுகொள்வது நாட்டுப் பெண்ணுடைய தினசரித் திட்டங்களில் ஒன்ருகியது. சுபாவமாகப் பெரிய ஆசைகளிலும், பாசங்களிலும் பிணைப்புண்டு கிடந்தவள் அல்ல அவள். வாழ்க்கை முழுவதுமே பற்றுதல்களில் அதிகம் ஈடுபடாத உள்ளமே அவளைக் காப்பாற்றியது.

கல்யாணம் 1878–இல், நடந்த பிறகு, கிருஷ்ணஸ்வாமி மேல் படிப்பில் மனத்தைச் செலுத்தியதால், வீட்டில் சிற்றின்ப சுகங்களில், அவ்வளவாக அவகாசத்தைக் கழித்தவரும் அல்ல. சென்னையில் ராஜ தானிக் கல்லூரியில் நண்பர் சிவஸ்வாமியுடன் மேல்படிப்புக்காகச் சேர்ந்தே வந்து புகுந்தார். பரீட்சையில்மட்டும் சிவஸ்வாமி முதல் வகுப்பிலும், கிருஷ்ணஸ்வாமி இரண்டாம் வகுப்பிலும் தேறினர்கள்.

தமையனர் சுவாமிநாதன், 1882–இல், வக்கீல் தொழில் செய்யத் தஞ்சை ஜில்லாவுக்குச் சென்றதும், தனிக் குடித்தனம் செய்யும் பொறுப்பு, கிருஷ்ணஸ்வாமிக்கு ஏற்பட்டது. 'பலாத் தோப்'பில் ஒரு சிறு வீட்டை வாடகைக்கு அமர்த்திக்கொண்டு, மனைவியுடன் வாழ்ந்தார். அவளுக்குத் துணையாகத் தமது உறவினர் களில் ஒருத்தியான அத்தை வாலாம்பாளையும் அவள் மகன் ராம சுவாமியையும் கூடவே இருக்கச் செய்துவந்தார். ராமசுவாமி சூடிகை யான பையன். பிற்காலங்களில் உறவினரைப்பற்றிய பல குறிப் பான தகவல்களைப் போஷித்தவன் அவனே. அழகாக உறவு பூணும் பழக்கம் ராமசுவாமியிடம் பூரித்ததைப்போல் மற்றெவரிடமும் காண வில்லை. மேலைநாட்டு இலக்கியங்களில் உள்ளவைகளில் பாஸ்வேல் என்பவரின் வரலாறு குறிக்கும் ஆற்றலை ஓரளவு பெற்றவரே ராமசுவாமியும். தம்மை மீறிய மதிப்பும், கௌரவமும் கிருஷ்ண ஸ்வாமியிடம் அவருக்கு ஏற்பட்டதால் பிற்காலங்களில் வேண்டிய அளவு சுவை குன்ருது கடந்த சம்பவங்களைப் பிறருக்கு எடுத்துச் சொல்லும் உற்சாகம் அவரிடம் பெருகியது. அதே உணர்ச்சிப் பெருக்குத்தான் இந்தச் சிறு வரலாற்றை எழுதத் துணிந்த ஆசிரிய ருக்கும் தூண்டுகோலாகியது.

அவர், ஞாபகமாக மனப்பேழையில் வைத்துப் பாதுகாத்த விவரங்களில் இரண்டொன்றை இங்கே ஒளிக்காமல் சொல்வது நியாயம். மேலும், நுட்பமாக மனத் தத்துவ ஆராய்ச்சி செய் பவர்கள் அவர் தந்த சில தகவல்களைத் துழாவிப் பார்த்து, அவைகளி

லுள்ள மேம்பட்ட இலக்கியச் சுவையை நுகர்ந்து, அவரிடம் மரியாதை காட்டுவார்கள்.

ஒரு வீட்டில் ஒண்டுக்குடித்தனம் செய்யவேண்டி வந்ததாம் கிருஷ்ணஸ்வாமிக்கு. சொந்தத்தில் ஒண்டுக்குடித்தனம் செய்வதில் இவருக்கு இஷ்டம் இல்லாமல் இருப்பினும் சில நிர்ப்பந்தங்களால் அவ்வித நிலைமை ஏற்பட்டதாம். இவரது ஒழுக்கத்தைப் பரீட்சை செய்வதற்கே போலும், ஒண்டுக்குடித்தனக்காரர் ஒருவரின் மனைவி தவறுதலாக நடந்துகொள்ள நினைத்து, இவரிடம் தனது சபல புத்தியைக் காட்டினாள். நல்ல திடமான மனசுடன், நிகழ்ந்ததைத் துளியும் பெரிதுபடுத்தாமல், உடனேயே வேறு இடம் மாற்றக் கிருஷ்ணஸ்வாமி துணிந்ததை உறவினர் ராமசுவாமி பாராட்டிப் பாராட்டிச் சலித்ததே இல்லை.

மற்றொரு விஷயம் இன்னும் ரசமானது. வக்கீல் தொழில் தொடங்கிய காலத்தில் வருவாய் இல்லாமல் இரண்டாண்டுகள் திண்டாடினார் கிருஷ்ணஸ்வாமி. தமையனார் அனுப்பிய சிறு தொகையே முழுவதும் செலவுக்கு உதவியாகி வந்த காலம் அது. வெள்ளிக்கிழமையன்று மனைவி பாலாம்பாள் தலைக்கு வைத்துக் கொள்ளப் பூ வாங்கிவிட்டாள். தம் நிலைமை திண்டாட்டத்திலிருக்கையில், பூ வாங்குவதை நினைக்கக்கூடாத குற்றமாகக் கிருஷ்ணஸ்வாமி கருதினார். தெரிந்தவுடன் மனைவி பத்திரப்படுத்தி வைத்திருந்த அரையணாப் பூவை வெளியே எடுத்துக் குப்பைத் தொட்டியில் எறிந்ததும் அல்லாமல், மனைவியைக் கடிந்தும் கொண்டாராம். எதற்காக இவ்வளவு கொடுமையுடன் நடந்தாய் என்று கேட்ட அத்தையிடம் அவர் சொன்ன பதிலை நினைக்கையில் பிரமிப்புத்தட்டத்தான் தட்டுகிறது : "அத்தை, நான் இன்று அண்ணனிடம் ஜீவனாம்சம் பெற்றுக் குடித்தனம் செய்கையில், என் மனைவி தலைக்குப் பூ வைப்பதுகூட, நியாயமற்ற சலுகைதான். ஆனால், ஒரு நாள் நான் பணத்தை வாரிக் கொட்டுவேன், வேண்டுமானால் அன்று வந்து பார்; பூவைக் கீழே கொட்டி, அதன்மேல் வேண்டுமானாலும் என் மனைவி நடக்கட்டும். அப்பொழுது யார் குறை சொல்லுவார்கள் ?" என்றாராம் அந்தத் தீரர். பிற்பாடு செல்வமும் செல்வாக்கும் பெருகி வருகையில், அப்படியே அவர் செய்ய, அதே அத்தை அவ்வளவையும் தனது கண்களால் பார்க்கத்தான் பார்த்தாள்.

III. வக்கீல் தொழிலும் ; வாழ்க்கை வளமும்

கிருஷ்ணஸ்வாமி பி.ஏ. பரீட்சையில் உயர்ந்த வகுப்பில் தேற வில்லை. இருந்தாலும் ஸம்ஸ்கிருதத்தில் நல்ல பயிற்சிக்காகவும், இதர சில பாடங்களில் காட்டிய நுண்ணறிவுக்காகவும் பரிசுகள் பெற்ருர். அக்காலங்களில் இவரும் நண்பர் சிவஸ்வாமியும் தங்களுக்கு விதிக்கப் பட்ட பாடங்களுக்கு அதிகமாகவே, கல்லூரியில் விஞ்ஞான அறிவைச் சம்பாதிப்பதற்காக டாக்டர் வில்ஸன் என்பவருடைய ரஸாயன போதனைகளை வலுவில் கேட்க முற்பட்டார்கள்.

1882–ஆம் வருஷம் சட்டக் கலாசாலையில் கிருஷ்ணஸ்வாமி சேர்ந்தார். சட்ட வகுப்புக்களை ராஜதானிக் கலாசாலையிலேயே அக்காலங்களில் வைத்திருந்தார்கள். சட்டக் கலாசாலைக்கான தனிக் கட்டிடங்கள் தயாராகாத காலம் அது. சிவஸ்வாமியும் இவரும் ஒழிவு நேரங்களில் சமுத்திரக்கரை மணலில் உட்கார்ந்து, சுவையான இலக்கிய ஆராய்ச்சி, இன்னும் பாஷை உச்சரிப்பு முதலியவைகளை அன்ருடம் நன்கு விவாதித்து, அறிவை வளர்த்து வந்தார்கள். சிவஸாமிக்கு நிதானமும் பொறுமையும் அதிகம். நண்பர் எங்காகிலும் பேச்சுச் சுவாரஸ்யத்தில் ஆங்கிலச் சொற்களை உச்சரிப்புப் பிழையுடன் சொல்லிவிட்டாலோ, முதலில் உச்சரிப்பைச் சீர்ப்படுத்திய பின்னரே மேலே சம்பாஷணையைத் தொடரத் தோன்றும் சிவஸ்வாமிக்கு. கிருஷ்ணஸ்வாமிக்குப் பெரிய தடையாகவே நண்பரின் செயல் தோன்றிவிடும். பொறுமையை அக்காலங்களில் இழந்துவிடுவார். இருப்பினும் இலக்கிய நுகர்ச்சியில் இவருக்குள்ள ஆர்வத்தை வற்றடிக்காமல் பாதுகாக்கவே மேலும் சம்பாஷணையை சிவஸ்வாமி ஆரம்பிப்பார்.

சட்டப் பரீட்சையிலும் கிருஷ்ணஸ்வாமி சிறப்பாகத் தேறவில்லை. சிறிது ரோஷமும் அதனுல் அவருள்ளத்தில் பொங்கியது : "பரீட்சை செய்பவர்களைவிட எனக்குச் சட்டம் நன்ருகவே தெரியும். கேள்வி சுத்த அசட்டுக் கேள்வி" என்று சொல்லி, விடுவிடு என்று குறுக்கும் நெடுக்குமாகத் தமது அறையில் நடந்துகொண்டே தமது உறவினரான ராமஸ்வாமியிடம் பேசுவார். "நாளைக்குக் கவைக்குத வாதவை யெல்லாம் எங்கே இருக்கப் போகின்றன ! நான் வக்கீல் தொழிலில் நன்ருகச் சம்பாதிப்பேன். இந்தப் பரீட்சையை யார் மதிக்கப் போகிருர்களாம் ! பார்ப்போம்" என்பார் தமக்கு ஏற்பட்ட

சாதாரணத் தேறுதலே நினைத்து. ராமஸ்வாமி சிறுவன்; இவைகளை யெல்லாம் எதிரே நின்று கேட்டுக்கொண்டேதான் இருந்தாக வேண்டும். வேறு வழி இல்லை. பார்த்தால் இந்த எண்ணம் அகம்பாவமாகவும் தோன்றும் மற்றவர்களுக்கு. ஆனால், சிறுவன் ராமஸ்வாமிக்கு மட்டும் ஏதோ வருங்காலத்தைத் துழாவிச் சொல்லும் ஆரூடமாகவே அவை தோன்றுமாம்.

வக்கீல் தொழிலைக் கடைப்பிடிப்பதற்குச் சரியான ஒரு பெரியாரின் கீழ் வேலைமுறைகளைக் கற்றாக வேண்டும் என்ற நிபந்தனை உண்டு. அதற்காக நண்பர்கள் இருவரும் அந்த நாட்களில் மயிலையில் பிரபலமாகத் தொழிலில் வளர்ச்சியடைந்திருந்த பெரியவரான ஆர். பாலாஜிராயர் என்பவரை 1884-ஆம் ஆண்டில் அண்டினார்கள். இருவருடைய தகப்பனார்களும் அவருக்கு ஏற்கனவே தெரியுமானதால், ராயரும் இளைஞர்களை ஏற்க மறுக்கவில்லை.

வக்கீல் சன்னத்தை 1885-ஆம் வருடம் கிருஷ்ணஸ்வாமி பெற்றார். தொழிற் பயிற்சி நன்கு பெற்றும் உடனுக்குடனே வழக்குகள் இவரிடம் வரவில்லை. மயிலாப்பூரில் கட்சிக்காரனே வராத வீடு தம்முடையதாக மட்டும் ஏற்பட்டுவிடுமோ என்றே இளைஞர் தவித்துப் போவார். வீட்டில் அசௌகரியம் உண்டாகித் தாமே சமையல் செய்வதாயினும், சாப்பிட்ட எச்சில் இலைகளை எடுத்துத் தெருவில் விட்டெறியும்பொழுது கதவைத் திறந்து நாலாபக்கங்களிலும் கவனித்துவிட்டே அதைச் செய்யவேண்டி வரும். ஏனெனில், எவனாது கட்சிக்காரனாக வருபவன் வீட்டிலுள்ள அந்தஸ்துக் குறைவைக் கவனிக்க நேரிடும் அல்லவா? இப்படியாகச் சிறுமைப்பட்ட வாழ்க்கையாகவே இரண்டாண்டுகளைக் கழிக்க வேண்டி வந்தது.

அதிர்ஷ்ட தேவதை தளரா ஊக்கமுடையவர்களிடம் சலுகை காட்டத் தவறிவிடமாட்டாள் அல்லவா? கிருஷ்ணஸ்வாமிக்குத் தெரிந்த ஒருவரான, எஸ். ராமஸ்வாமி ஐயங்கார், முன்சீப்பாக நியமிக்கப்பட்டதனால் வழக்குத் தீராது, தமது கையிலுள்ள கட்டுகளை யாரிடமாவது தருவதற்காக யோசனை செய்தபோது இரண்டு மூன்று கட்டுகளைக் கிருஷ்ணஸ்வாமியிடம் கொடுத்து, அவைகளுக்குண்டான பாக்கிப் பணத்தையும் கட்டுகளின்மேல் குறித்து, அவைகளில் ஆஜராகும்படி கேட்டுக்கொண்டார். இவையே சொந்தத்தில் கிருஷ்ணஸ்வாமி ஐயருக்கு ஆரம்ப உதவிகளாக ஏற்பட்டன. 1888-ஆம் ஆண்டு ஏப்ரல் 12-ஆம் தேதியில் தினசரிக் குறிப்பில் ஞாபகமாகத் தாமடைந்த இந்த அரிய உதவியை அவர் எழுதி வைத்துள்ளார். பிற்பாடு பலகாலம், தாம் இறக்கும்வரையில் நண்பர்

ராமஸ்வாமி ஐயங்காரை நன்றியுடன் வாழ்த்தாத நாளே இல்லை எனலாம்.

கடலூரில் சப்–கோர்ட்டில் உள்ள நடவடிக்கையைச் சார்ந்தது, ஐயங்கார் கொடுத்திருந்த தஸ்தாவேஜுக் கட்டுகளில் ஒன்று. அந்த வழக்கில் ஆஜரான காரணத்தால் அன்று முதல் கடலூரிலுள்ள வர்களுக்கு அவரிடம் மதிப்பு ஏற்பட்டது. பேச்சில் வாதங்கள் அடுக்கடுக்காகக் கிளம்புவதையும், ஜாக்கிரதையாக முன்கூட்டியே செய்த யோசனைகளையும் கவனித்தவர்கள், "இனி இவரையே அப்பீல்களுக்கு உயர்நீதி மன்றத்தில் நம் பக்கம் வைக்கலாம்" என்று முடிவுகட்டத் தொடங்கினர்கள்.

வக்கீல் தொழிலில் அபிவிருத்திக்கு மற்ருெரு முக்கிய காரணமும் மறக்க இயலாதது. பிற்பாடு உயர்தர நீதிமன்றத்தின் அணிகலனுய் விளங்கியவர் ஸர். எஸ். சுப்பிரமணி ஐயர். மணி ஐயர் அக்காலத்தில் மிகவும் திறமைசாலியான வக்கீலாக விளங்கி வந்தார். அவரிடம் தொழில் கற்ற இளைஞர்களில், பிரபல வழக்காளரான பி. ஆர். சுந்தர ஐயரும் ஒருவர். சுந்தர ஐயரும் இவரும் மணி ஐயர் ஆபீசில் அறிமுகமான தினத்திலிருந்து ஒற்றுமையாய் ஒருவரை யொருவர் நேசித்து வந்தார்கள். இணைபிரியாத இரட்டையர்கள் என்ற குறிச்சொல்லுக்கு இலக்காய்த் தங்களை இவ்விருவரும் செய்து கொண்டதை வக்கீல் உலகம் இன்றும் நினைவில் வைத்துள்ளது. பி. ஆர். சுந்தர ஐயரின், சிபார்சின் பேரில்தான் மணி ஐயரே கிருஷ்ண ஸ்வாமி ஐயரைத் தமது ஆபீசில் உதவிக்காக அணுகும்படி இடம் தந்தார் என்று கூறுவதும் உண்டு. அதாவது மணி ஐயரின் தாராள மனப்பாங்கைப் பகிர்ந்துகொள்ளக்கூடிய மற்ருெரு புத்திசாலியான இளைஞரை மணி ஐயரின் செல்வாக்கை முழுமையும் தாமே பெறு வதற்குத் தடையாகவே, நேரில் தமது தலைவரிடம் அறிமுகப்படுத்தத் துணிந்த சுந்தர ஐயரின் செயல் என்றென்றைக்கும் அவருடைய நட்பின் வலுவை விளம்பரப்படுத்துகிறது.

அடிக்கடி வீடுகள் மாற்றிய கிருஷ்ணஸ்வாமி ஐயர், 1888–ஆம் வருஷந் தொடங்கி மயிலாப்பூர்த் தெற்கு மாடவீதியிலுள்ள ஒரே வீட் டில் கிட்டத்தட்டப் பத்து வருஷங்கள் தங்கிவிட்டார். பி. ஆர். சுந்தர ஐயரும் நண்பருக்கு வெகு அண்மையிலேயே அதே சாரியில் மற்ருெரு வீட்டில் இருந்துவந்தார். இருவரும் சேர்ந்தே காலையில் உலாவச் செல்வார்கள். கோர்ட்டுக்கும் சேர்ந்தே குதிரை வண்டியில் ஏறிச் செல்வார்கள். மணி ஐயரின்கீழ்ச் சேர்ந்தே சிற்சில சமயம் வேலையும் செய்வார்கள். அவரிடம் பயபக்தியுடன் இருந்து சட்ட ஞானத்தையும் வளர்த்து வந்தார்கள்.

சுந்தர ஐயரிடம் கிருஷ்ண ஸ்வாமிக்கு ஏற்பட்ட நட்பு வளரவுமே, ஏற்கனவே பால்ய சிநேகிதமாக உருவான சிவஸ்வாமி ஐயருடைய நெருங்கிய பழக்கம் சிறிது தளர்ந்தது. ஓரளவு சுபாவத்தின் ஒற்றுமையும் வேறுபாடுகளுமே உலகில் ஏற்படும் தீர்க்க சிநேகிதங்களுக்கும் துண்டுபடும் நட்புரிமைகளுக்கும் காரணம் ஆகின்றன. சிவஸ்வாமி ஐயரின் நிதானமும், பிழையின்றிச் செய்யும் ஆற்றலும், அவ்வளவு சட்டெனப் பிறர் மனங்களைக் கவருவது துர்லபம். எதையும் சந்தேகப்படும் சுபாவமும் அவரிடம் சேரவே, சிவஸ்வாமி ஐயரிடமிருந்ததைவிடச் சுந்தர ஐயரிடம் காணப்பட்ட வேகமும் மதி நுட்பமும் சட்ட சம்பந்தமான அலுவல்களில் இவ்விருவரையும் பிணைத்துவிட்டன. அதற்காகச் சிவஸ்வாமி ஐயரிடம் வெகு நாட்களாக ஏற்பட்ட மரியாதையும், மதிப்பும் குறைந்ததாகக் கருத இடமே இல்லை.

நண்பர்கள் குடும்பங்களும் சேர்ந்தே பழகி வளர ஆரம்பித்தன. இரண்டு நண்பர்களுடைய வீடுகளிலும் உறவினர்களுக்குக் குறைவே இல்லை. இரண்டு குடும்பங்களிலும் சிறு குழந்தைகளுக்கும் குறைவில்லை. எல்லோரும் நன்கு பழகிப் பெருகி வாழ்ந்தார்கள். சம்பாத்தியம் என்றைக்குமே சுந்தர ஐயருக்கு அதிகம். ஆரம்பித்த நாட்களிலேயே கேசுகளும் பணவருவாயும் இடையறுது அவருக்கு வந்துகொண் டிருந்தன.

ஒரு சம்பவம் இரு குடும்பங்களும் பழகிய காலங்களில் நேர்ந்ததை இரு குடும்பங்களிலுள்ள பெரியவர்கள் வெகுநாட்கள் மறக்காத விதம் சொல்லி வருவார்கள். கிருஷ்ணஸ்வாமி ஐயர், திருடனைப் பிடித்துக் கட்டிப் போட்டதை எப்படி அவர்கள் சதா நினையாதிருப்பார்கள்?

இரவில் திருடன் ஒருவன் கிருஷ்ண ஸ்வாமியின் வீட்டினுள் புகுந்து, குழந்தைகள் அணிந்திருந்த தங்கச் சங்கிலியைக் களவாடிவிட்டுப் புறப்படத் தயாராகையில், கிருஷ்ணஸ்வாமி அவன் நிழலை விடிவிளக்கின் வெளிச்சத்தால் கண்டுகொண்டார். எப்படித் திருடனைப் பிடிப்பதென்று இவர் மல்லாந்தபடி தம் படுக்கையிலேயே யோசனை செய்தார். திருடன் மெல்லத் தவழ்ந்து கதவண்டை சென்று எழுந்திருக்க முயலுகையில், அவன் பின்னே சந்தடியின்றிச் சென்றவர், அவன் காலைத் தட்டிவிட்டுக் குப்புற வீழ்ந்தவனைப் புரட்டி அவன் மார்பின்மேல் ஏறி உட்கார்ந்துகொள்வதைக் கண் இமைப்பதற்குள் செய்துவிட்டார். இரண்டு கரங்களாலும் அவனைக் குத்தி அடக்கிக்கொண்டிருக்கையில், அரவம் கேட்டு வீட்டிலும், அண்டை வீடுகளிலும் உள்ளவர்கள் விழித்துக்

கொண்டு உதவிக்கு விரைந்து வந்தார்கள். பிற்பாடு ஸர். வி. பாஷ்யம் ஐயங்கார் இளைஞரைக் கொண்டாடுகையில் சொல்லுவாராம்: "கிருஷ்ணஸ்வாமி போலீஸ் இலாக்காவில் வேலை பார்த்திருந்தாலும் முதன்மையாகவேதான் திறனை வெளிப்படுத்தியிருப்பான்" என்று.

முன் யோசனையும், துணிச்சலும் சேர்ந்து அவரிடம் இழைந்ததைப் பலரும் எவ்வளவோ பிற்காலங்களில் பாராட்டியுள்ளார்கள். கவனித்தால் இவர் ஐந்தடி எட்டு அங்குலங்களுக்கும் சற்றுக் குறைவான உயரமே. சற்றுப் பருமனான தோற்றத்தையே பெற்றிருப்பார். ஆயினும் இடுப்புக்குமேல் சரீர அமைப்பினால் நிமிர்ந்த மார்பும், அதைவிட நிமிர்ந்த தலையும் தோள்களின்மேல் காணப்படவும், பார்த்தவுடன் பயமே இவரை நெருங்கியதும் பலர் உள்ளங்களில் ஏற்படும். வெளியிலும், நேருக்கு நேரான நோக்கு, வேகமான நடை, இவையே இதர மனிதர்களிடம் தோன்றுதபடி இவரைத் தனியாக்கின.

தைரியம் மிக்கவராயினும், முன்யோசனை, இதர ஜாக்கிரதைகள் இவைகளும் அவரிடம் இல்லாமலில்லை. அஞ்சுவது அஞ்சாமை பேதைமை என்ற குறள் வாக்கையும் மெய்ப்பித்தவர்தாம். இரவில் மற்றவர்களைப்போல் இவர் படுக்கையில் விழுந்துகிடப்பது அரிது. எல்லா இடங்களிலுள்ள தாழ்ப்பாள் முதலியவைகள் சரியானபடி உள்ளனவா என்று பார்த்துவிட்டே இவர் சயனம் செய்யத் தமது அறைக்குப் போவார். நாள் தவறினாலும், இவருடைய வீட்டின் பந்தோபஸ்துக்கான சிறு சிறு விவரங்களைக் கவனிப்பதிலும் இவர் வழுவியதில்லை.

1888–ஆம் ஆண்டில் இவருக்கு ஸீமந்த புத்திரியான பால சுந்தரி பிறந்தாள். தொழிலில் ஊன்றிய கால்களைப் பெற்றபொழுது குடும்ப விருத்தியும் நேர்ந்தது ஒருவிதத்தில் அதிருஷ்டத்தின் விளைவே எனலாம். இவருடைய மனைவிக்குமட்டும் குழந்தைப் பேறு சீக்கிரம் கிடைக்காததில் குறை இருந்திருக்க வேண்டும். கோவில், குளம் இவைகளைத் தரிசிப்பதும் பூஜை புரஸ்காரங்களில் மனத்தை ஈடுபடுத்துவதும் அவளுக்கு இயல்பாயின.

இவருக்குக் குதிரைச் சவாரி செய்யும் பழக்கமும் சில புதிய நட்புக்களால் ஏற்பட்டது. அட்டார்னியாக இருந்த பென்னுத்தூர் சுப்பிரமணிய ஐயர் என்பவர் மிகவும் பொருள் தேடியிருந்தார். அவருடைய சிநேகிதம் கிருஷ்ணஸ்வாமிக்குத் தொழில் வளத்துக்கும், இதர உயர்மனிதர்களின் பழக்கத்துக்கும் அடிகோலிற்று. பென்னுத்தூர் ஐயர், நண்பருக்குக் குதிரை சவாரி, பெரிய பங்களா, செலவு

டன் சேர்ந்த பகட்டான வாழ்க்கை, இவைகளைக் கொஞ்சம் கொஞ்சமாக அறிமுகப்படுத்தி வைத்தார்.

இரண்டு முக்கிய காரியங்களை இவர் சென்னை வக்கீல் சபையின் செயலாளராக இருந்த சமயம் செய்திருப்பதை மறக்கமுடியாது. ஒன்று, வக்கீல்களாக உள்ளவர்களின் கீழ்அந்தஸ்தைப் பிரித்துக் காட்ட அவர்கள் பாரிஸ்டர்களைப்போல் அங்கியின்மேல் 'கௌன்' அணிவது அனுமதிக்கப்படாதிருந்தது. அதனை மாற்றி எல்லோரும் ஒன்று போல் சமஅந்தஸ்துடன் கச்சேரியில் தோன்றுவதற்கு வசதி அளிக்கப்பட்டதற்கு, இவரே பாடுபட்டவர். இரண்டாவது, பாஷ்யம் ஐயங்கார், இரண்டாண்டுகள் ஜட்ஜ் வேலை பார்த்து முடிவதற்குள் அறுபது வயசு நிபந்தனையை அரசாங்கம் அமுலுக்குக் கொண்டு வந்தது. அதனால் அவர் வேலையை விட்டு நீங்கவேண்டி வந்தது. பெரிய கிளர்ச்சியைக் கிருஷ்ணஸ்வாமி ஐயர் செய்துவிட்டார். இதர மாகாணங்களில் உள்ள தலைசிறந்த வக்கீல்களின் ஒத்துழைப்பையும் பெறப் பல கடிதங்கள் எழுதினார். பெரியதொரு மகஜர் தயாரித்து அரசாங்கத்திற்குச் சமர்ப்பித்தார். அரசாங்கம் தான் செய்ததை மாற்ற இடங்கொடாவிடினும், பாஷ்யம் ஐயங்கார் இன்னும் ஒன்பது மாத காலம் பதவியில் இருக்கச் செய்ததுமல்லாமல், ஜாகீர் ஒன்றையும் அவருக்கு வழங்கச் சம்மதித்தது. பாஷ்யம் ஐயங்காரைப் போன்ற ஓர் சட்டமேதையை நீதிஸ்தலம் சீக்கிரம் இழக்கக்கூடாதென்ற கருத்தே இவ்வளவுக்கும் அஸ்திவாரமாக இருந்தது.

மனைவியின் காதுகளில் வைரத்தோடுகள் ஏறுவதற்கு அட்டார்னி சுப்பிரமணிய ஐயர்தாம் முக்கிய காரணம். லஸ் ரோட்டில் பிற்பாடு 'ஆச்ரமம்' என்ற பெயரினால் வழங்கிய பங்களாவை விலைக்கு வாங்க வழி செய்தவரும் அவர்தாம். இரட்டைக் குதிரை பூட்டிய வண்டியில் வலம்வரும் பெருந்தராவான வாழ்க்கைக்கும் அவரே பொறுப்பாளியானார்.

வேலையில்லாத நாட்களே ஒரு வக்கீலுக்குச் சட்டத்தில் தேர்ச்சி அடையவேண்டிய அவகாசத்தை அளிக்கவல்லன. வீண்பொழுது போக்காமல் ஸம்ஸ்கிருதத்தில் உள்ள தரும சாஸ்திர நூல்களைக் கிருஷ்ணஸ்வாமி ஆராய்வார். மெட்ரிகுலேஷன் படிப்பிற்காக ஸம்ஸ்கிருத பாட புத்தகங்களின் தயாரிப்பில் கலந்துகொள்வார். இன்னும் சர்வகலாசாலைப் பரீட்சை அதிகாரிகளுடன் சில பாடங்களில் பரீட்சைத் தாள்கள் தயாரிப்பதிலும், பங்கு கொள்வார். எம்.ஏ., பரீட்சைக்கு ஸம்ஸ்கிருத வினாக்களைத் தயாரிப்பதிலும் முனைந்து வருவார்.

மேலும் 1889–ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் வக்கீல்களின்

சபையை நிறுவுவதில் தலைவர்கள் சிலருடன் பங்கு எடுத்துக் கொண்டார். முதல் காரியதரிசியாக 1902-ஆம் ஆண்டு வரையில் தொடர்ந்திருந்த பெருமையும் இவரைச் சாரும். ஏனெனில் வக்கீல்களில் பெரிய சிங்கங்கள் இருக்கையில் இளைஞராக உள்ள இவரிடம் அவர்களுக்கு நம்பிக்கை அதிகம் ஏற்பட்டதை வேறு எவ்வித அத்தாட்சியை விடவும் இப்பதவி ஒவ்வொரு வருஷமும் தேர்தலினுல் கிட்டியதே மிகவும் அழுத்தமாயும், சந்தேகமின்றியும் இவர் அடைந்திருந்த வியாபகத்தை அறிவிக்கின்றதல்லவா ?

அடுத்தபடி, சட்ட அறிவு மேலும் கெட்டிப்படுவதற்கு வசதியளிக்கும் சட்ட ஞான போதகராய்ச் சட்டக் கலாசாலையிலும் இவர் வேலை பார்த்தார். பிற்காலங்களில் பிரபலமாக விளங்கிய ஜட்ஜ் வி. ராமேசம், என்பவர் இவரிடம் சட்டஞானம் பெற்ற மாணவர்களில் ஒருவராக இருந்ததை வெகுவாய்ப் பெருமையுடன் சொல்லுவார்.

1895-ஆம் வருஷம் சீர்காழி சபாபதி முதலியார் குடும்ப சம்பந்தமான ஒரு பெரிய வழக்கில் புகழ்பெற்ற வி. பாஷ்யம் ஐயங்காரின், எதிர்த்தரப்பில் நின்று ஜயித்ததைக் கும்பகோணத்திலுள்ள வக்கீல்கள் மறந்ததில்லை. கோர்ட்டில் உள்ள ஜட்ஜ் மரியாதையுடன் இருப்பவஞயின் கவலையில்லை. சிறிது அகம்பாவம் பிடித்தவனுக இருந்தால் கிருஷ்ணஸ்வாமி ஐயர் பொறுக்கமாட்டார். பதிலுக்குக் காரசாரமாக விடை கொடுப்பதில் தமது சினத்தைத் தெரிவித்து விடுவார்.

புகழ்மாலைகள் குவிந்ததுடன், செல்வமும் தாராளமாக இவரிடம் அடைக்கலம் புகவந்தது நல்லகாலத்தின் அறிகுறியாகியது. மிகவும் புத்தி நுட்பம் பெற்ற பாஷ்யம் ஐயங்காரே தாம் தொடுத்த மானபங்க வழக்கிற்கு இவரையே தம் தரப்பில் 1898-ஆம் ஆண்டில் ஆஜராகும்படி விஞ்ஞாபித்தது பிறருக்கு இல்லாத கௌரவத்தை இவரிடம் காட்ட வைத்தது. ஆங்கிலத்தில் நடத்தப்பட்ட 'ஸ்டாண்டர்ட்' பத்திரிகை அவதூருகப் பாஷ்யம் ஐயங்காரைப்பற்றி அதன் இதழ்களில் இரண்டு நாள் தொடர்ந்து எழுதியதைக் குற்றம் சாட்டி, நஷ்டஈடு பெறுவதன் பொருட்டு அந்தப் பிரபல பத்திரிகையின்பேரில் வழக்குத் தொடுத்தார் பாஷ்யம் ஐயங்கார். போலீஸ் கோர்ட்டில் விசாரணை, கிளார்க் என்ற மாஜிஸ்டிரேட்டின் முன்னிலையில் நடந்தது. மிஸ்டர் டாலி என்பவர் பிரதிவாதியின் பக்கம் வாதித்தார். கிரிமினல் சட்டத்தின் 499-ஆம் பகுதியின்கீழ் குற்றச்சாட்டுச் செய்யப்பட்டது.

கிருஷ்ணஸ்வாமியின் கேள்விகளும், குறுக்கு விசாரணையும் எல்லோரையும் பிரமிக்க வைத்தன. மேலும் பத்திரிகை சம்பந்தமான நடவடிக்கையானதால் வேண்டிய விளம்பரமும் அவருக்குக் கிடைத்தது

பாஷ்யம் ஐயங்காரை அவமானப்படுத்த முயன்ற பத்திரிகைதான் அவமானம் அடைந்தது. தீர்ப்பும் கிருஷ்ணஸ்வாமியின் வாதங்களை அநுசரித்து உருவாகி இருந்தது. கொடுக்கப்பட்ட தண்டனை பெரிய பத்திரிகைகளுக்கு எச்சரிக்கையாகியது. பொறுப்பின்றிக் காதில் கேட்டது எதையும் நம்பிப் பிரசுரிப்பது எவ்வளவு ஆபத்தில் ஒரு பத்திரிகையை வைக்கும் என்பதும் வெளியாகியது. தொழில் முறையில் வாதாடிய வக்கீலுக்குப் புகழ் அளவிலாது ஏற்பட்டது. பெரியவர்களிடம் இவருக்குள்ள பெரும் பக்தியும் பரிமளித்தது. பாஷ்யம் ஐயங்காருடைய உயர்தன்மையை நிலை நாட்டுவதிலும் வெற்றி கண்டது. சிறியவருக்குப் பெரியவர்களிடம் எவ்வளவு உண்மையான ஆர்வம் என்பதை உலகம் அறியச் செய்தது.

IV. தொழிற் சிறப்பு

உயர்நீதி மன்றத்தில் வாதாடுகிறவர்களில் விரைவில் தலைமைப் பதவியை அடைந்தவர் என்றே 1895–ஆம் ஆண்டிலிருந்து கிருஷ்ண ஸ்வாமி ஐயரின் தொழில் வரலாற்றை நாம் கூறலாம். மணி ஐயரும் பாஷ்யம் ஐயங்காரும், நீதிபதி பதவியில் அமரவும் அவர்களின் வாரிசுகளைப்போல் கிருஷ்ணஸ்வாமி ஐயரும், சுந்தர ஐயரும் விளங்கத் தொடங்கினார்கள். சேர்ந்து கோர்ட்டுக்குச் செல்லும் பழக்கம் முழுவதும் இவர்களை விடாவிட்டாலும், எதிர்ப் பக்கங்களில் இருவரும் ஒருவரையொருவர் எதிர்த்து நிற்கும் பழக்கத்தை விட இயலாமல் இருந்தார்கள். அநேக பொறுப்புள்ள வழக்குகளிலும், பெரிய ஜமீன் வியாஜ்யங்களிலும் நல்ல பணவருவாயுடன் ஆஜரானார்கள் நண்பர்கள் இருவரும்.

இளைஞர்களில் பல சிறந்த மேதாவிகளும் நீதிஸ்தல நிபுணர்களும் கிருஷ்ணஸ்வாமி ஐயரின் தொடர்புகொண்டு, அதனால் மேன்மை பெற்ற விவரங்களும் உள்ளன. டாக்டர் சி. பி. ராமஸ்வாமி ஐயர், இவரிடமே தொழில் பழக்கத்தைக் கற்க அணுகினார். மாறாத பக்தியும், அன்பும், சிஷ்யருக்கும் குருவுக்கும் ஒருவரிடம் ஒருவருக்கு என்றும் உள்ளது. இன்றும் ராமஸ்வாமி ஐயர், பேசும்பொழுது தமது குருவின் அதிசய சக்திகளை வாய்விட்டுச் சொல்லுவதில் பெருமிதம் கொள்வதைப் பார்க்கிறோம். காலஞ்சென்ற ஸர். கே. ஸ்ரீநிவாஸ ஐயங்கார், கிருஷ்ணஸ்வாமி ஐயரால் நன்கு பாராட்டப் பட்டவர். கிருஷ்ணஸ்வாமி ஐயர் பிற்பாடு நீதிபதி பதவியை ஏற்கும் தருணம் தம் கையிலுள்ள முடிவடையாத கட்டுகளை அவைகளுக்குண்டான பாக்கிப் பணத் தொகைகளுடன் பகிர்ந்து கொடுத்தவர்களில், அவர் முக்கியமானவர். அதேவிதம் எஸ். ஸ்ரீநிவாஸ ஐயங்காரும் நன்றி உணர்வில் நிலைத்தவர். எஸ். ஸ்ரீநிவாஸ ஐயங்காரின், சட்டமேதையில் கிருஷ்ணஸ்வாமி ஐயருக்கு அபாரமான பிரமையும், பெருமையும் ஒருங்கே ஏற்படுவது உண்டு. அல்லாடி கிருஷ்ண ஸ்வாமி ஐயரின் துரிதமாகப் பாயும் சட்ட அறிவை இவர் மிகவும் போற்றியதுடன், ஒருகாலத்தில் எவருக்கும் கிட்டாத நிலையை அல்லாடி தொழிலில் சம்பாதித்துக்கொள்வார் என்ற நம்பிக்கையை இளைஞர் காதுகளுக்குக் கேட்கும்படி பல நண்பர்களிடம் புகழ்ந்தும் இருக்கிறார். ஸர். எஸ். வரதாச்சாரியாரும் இவரிடம் வெகுமதிகள் பல பெற்றுள்ளார்.

அவ்வப்பொழுது தமக்கு யாரிடமாவது மதிப்போ, பரிவோ உண்டானால் அவர்களை மேல்தூக்கி விடுவதில் கிருஷ்ணஸ்வாமி ஐயருக்கு நிகர் இல்லை. எதுவரினும் தம்முடைய அபிப்பிராயத்தின் விளைவான வெகுமானத்தை இளைஞர் அடையாமல் இருப்பதை இவர் பொறுத்தவர் அல்ல. உடனுக்குடனே அவர்களுக்குத் தம் மனத்தின் எழுச்சியையும், நல்ல சிந்தனையைக் காட்டும் ரீதியில், எதையாவது உபகாரம் செய்வதன்மூலம் தெரிவிப்பது இவருடைய வாழ்க்கை விரதங்கூட.

எல்லாவிதப் புகழை விடவும் நீதிமன்ற சரித்திரத்திலேயே அர்பத்நட் பாங்கு நடவடிக்கை மிகவும் பெயர்போனது. அதில் கிருஷ்ணஸ்வாமி ஐயருக்குள்ள பங்கும், பிரபலமாவதற்கான செல்வாக்கும் கிட்டியதைக் கவனிப்பது இவ்விடத்தில் தகும். 1906-ஆம் ஆண்டில் அக்டோபர் 20-ஆம் தேதியுடன் ஸர் ஜார்ஜ் அர்பத்நட் என்ற வெள்ளைக்காரன் தனது கடையைத் திடீரென மூடிவிட்டான். இன்சால்வென்ட் என்று தன்னைக் கோர்ட் தீர்மானிக்கவும் மனுப் போட்டுவிட்டான். ஊரில் பலர் தாங்கள் சேமித்த சொத்தையெல்லாம் பாங்கு முழுகியதால் இழந்தார்கள். அநீதிகளும், மோசடிகளும் பல நடந்திருப்பதற்கான தகவல்கள் வெளியாயின.

கிருஷ்ணஸ்வாமி ஐயர், ஒரு பொதுஸ்தாபனத்தின் செயலாளர் என்ற உரிமையில் அதன் பணம் முழுவதும் அர்பத்நட்டில் முழுகியதை வைத்துக்கொண்டு கோர்ட்டில் தோன்றி வாதாட வலுவில் நின்றார். பொதுஜனங்களின் பெரும் துயரத்தை விலக்க முடியாவிட்டாலும், பெரும் அநீதியையாவது கண்டிப்பதால் ஆறுதல் மக்கள் உள்ளங்களில் ஏற்படலாம் என்ற ஒரே எண்ணத்தினால் இவர் அந்த வழக்கில் தாமாக ஆஜரானார். வக்கீலுக்கு உரிமையான 'கௌனை'க்கூடத் தூக்கி எறிந்துவிட்டு, தாமும் சிரமப்பட்டவர்களில் ஒருவர் என்ற உரிமையில் வாதாட முன்வந்தார். இன்சால்வென்ஸி கோர்ட்டில் மணி ஐயரே, இந்த வழக்கை விசாரிக்க உட்கார்ந்தார். மணி ஐயர் நீதிபதியாகவும், கிருஷ்ணஸ்வாமி ஐயர் வாதிப்பவராகவும், ஸர் ஜார்ஜ் அர்பத்நட் குற்றவாளியாகவும் மூன்றும் சேர்ந்த நிகழ்ச்சியைக் காண அதுவரையில் எதிர்பாராத ஊர்ஜனங்கள் திரளாகக் கூடினர் கோர்ட்டில்.

அர்பத்நட்டை முதலில் மோசடிக் குற்றம் செய்தவன் என்று இன்சால்வென்ஸி கோர்ட்டில் ருசுப்படுத்தாவிட்டால் கிரிமினல் சட்டத்தின்கீழ்க் குற்றவாளியாகத் தண்டிக்கப்பட வேண்டிய கைதியாகமாட்டான்; அதனைச் சாதிப்பதையே முதல் காரியமாகக் கிருஷ்ணஸ்வாமி ஐயர் தமது மூளையை உபயோகித்துத் தகுந்த வாதங்களை

ஜோடனை செய்தார். இவருக்குச் சகாயத்திற்காக இளம் வக்கீல்களில் சிலரைக் கூட வைத்துக்கொண்டார். கோர்ட்டில் எள்ளுப் போட்டால் எள்ளு விழாதபடி ஜனங்கள் குழுமியிருந்தனர். வாதாடுகின்ற இவரையே பார்த்து ஜனங்களுக்கு ஓர் அலாதித் திருப்தி.

அர்பத்நட் நடவடிக்கை அரியதொரு சந்தர்ப்பத்தைத் தொழில் கற்பவர்களுக்குக் காட்டியதாகவும் கூறுவதுண்டு. பாங்கு சம்பந்தமான அறிவு அதிகம் ஏற்படாத காலம் அது. கணக்குப் புத்தகங்கள், வரவு செலவுத் திட்டங்கள், பாங்குப் பாலன்ஸ்தாள், அறிக்கை முதலியவைகளையே பலர் பரிச்சயப்படுத்திக்கொள்ளாத காலமும் அது. இருப்பினும் சளைப்பின்றியே கிருஷ்ணஸ்வாமி ஐயர், பாங்கு சம்பந்தமான சகல தகவல்கள், விவரங்கள், சட்ட அறிவு எல்லாவற்றையும் தெரிந்துகொண்டார். திகைக்க வைக்கும் வேகத்துடன் அவைகளைக் கொண்டு ஸர். ஜார்ஜ் அர்பத்நட்டைச் சாட்சிக் கூண்டில் குறுக்குக் கேள்விகளால் திணற அடித்தார்.

இரண்டு வாரங்களுக்குக் குறையாமல் குறுக்கு விசாரணை நடைபெற்று ஓய்ந்தது. குற்றச்சாட்டையும் சீக்கிரத்தில் ஸர். அர்பத்நட்டின் மேல் தயாரிக்க நேரிட்டது. ஸெஷன்ஸ் விசாரணைக்கும் அவன் அனுப்பப்பட்டான். கடைசியில் குற்றம் ருசுவாகி மோசம் செய்ததற்காகப் பதினெட்டு மாதங்கள் கடுங்காவல் தண்டனையும் பெற்றான்.

இவை ஒருபுறம் இருக்க, அதேசமயம் கிருஷ்ணஸ்வாமி ஐயரின் இதயத்தில் எப்படியாவது நம் ஜனங்களுக்கு நம்பிக்கையூட்டி நல்ல பாங்கு ஒன்றை ஸ்தாபனம் செய்யவேண்டும் என்ற ஆசை பிறந்தது. மேற்குவாயிலைச் சூரியன் புகுகையில் கிழக்கே பதினாறு கலைகளுடன் வெண்மதி புறப்படுவதுபோல, ஒரு பெரிய பாங்கு முழுகுகையில், மற்றொரு பக்கம் இந்தியன் பாங்கு லிமிடெட்டை ஏற்படுத்தக் குழு ஒன்று ஆச்ரமப் பங்களாவில் கூடியது. கிருஷ்ணஸ்வாமி ஐயரின், தலைமையில் தீர்மானிக்கப்பட்டு, உடனேயே வேண்டிய தொகை வசூலாகிப் புதியதொரு ஸ்தாபனம் தோன்றியது. பலர் ஒன்றை இழந்ததும் அழுதுவிழுவார்கள். மற்றொன்றை அதே இடத்தில் நிறுவுவதற்கான தைரியமும், நிர்வாகத் திறமையும் கிடைப்பதரிது எல்லோருக்கும். கிருஷ்ணஸ்வாமி ஐயர் ஓர் மேதை என்பதற்கான பலவித அத்தாட்சிகளில் இந்தச் செய்கையும் ஒன்றாகும்.

பலர் வக்கீல் தொழிலில் புகழும் பொருளும் ஈட்டியுள்ளனர்; பொதுஜனங்களுக்காக, துளியும் பணத்தை எதிர்பாராது கோர்ட்டில் தோன்றி, அக்கிரமம் செய்தவர்களைத் தண்டனைக்கு உள்ளாக்குவதுடன், பொதுமக்களின் க்ஷேமத்திற்கு இடுக்கண் விளைவிப்பவர்களை

நீதிமன்றம் சரியானபடி சிட்சித்தலும் அரசாங்கக் கடமைகளில் முக்கியமானது என்பதை உலகம் அறியச் செய்தவர் இவர். அர்பத்நட் பாங்கு சம்பந்தமான நடவடிக்கைகளில் இவர் எடுத்துக் கொண்ட கட்சி வாதங்களால், பொதுமக்கள் மனம் பயம் நீங்கித் தெம்புகொண்டது. மேலும் வெள்ளைக்காரனுயினும் அவனும் தவறு செய்தால் பிரிட்டிஷ் ஆட்சியின்கீழ் நியாயமான தண்டனை விதிக்கப் படவேண்டும் என்ற வற்புறுத்தலையும், இந்தத் தீர்ப்பு எடுத்துரைத் தது. கவனித்தால், ஒரு வெளிநாட்டான் எவ்வளவு துணிச்சலும், அநீதியும் மனத்தில் குடிகொண் டிருந்தால், இரண்டு கோடிக்குக் குறையாத செல்வத்தை, அதுவும் பலருடைய சேமிப்புத் தனத்தை, மோச எண்ணத்துடன் கொள்ளை அடித்துவிட்டுத் தப்பியும் ஓடிவிடப் பார்த்திருந்தான் என்பது புலனுகும். நியாயம் நிலைப்பதற்காகச் சொந்தத்தில் தமக்குப் பாங்கியில் ஒருவிதமான நஷ்டமும் ஏற்படாத பொழுதும், பிறருக்காக உழைப்பதன் உயர்வையும் இச் சம்பவம் எடுத்துக்காட்டுகிறது.

V. பணி செய்வதிலும் தனிமுறை

1885–ஆம் வருஷம் டிசம்பர் மாதத்தில் இந்தியத் தேசீய காங்கிரஸ் உற்பத்தியான கதையை இந்த நாட்டு விடுதலை வரலாறுகள் குறித்துள்ளன. ஆகையால், தேச விடுதலைக்கான இயக்கத்தைப் பற்றியும், காங்கிரஸ் மகாசபை ஆற்றிய தொடர்ந்த ஆக்க வேலைகளைப் பற்றியும் விவரங்கள் அவ்வளவையும் இங்கு நேயர்கள் எதிர் பார்க்கலாகாது. கிருஷ்ணஸ்வாமி ஐயரும் தமது தேசீய உணர்ச்சியை வளர்த்தார்; அதன் அறிகுறியாகக் காங்கிரஸில் தொண்டுகள் பல ஆற்றினர் என்பதை மட்டும் கொடுப்பதுதான் இங்கு எடுத்துக் கொண்ட வரலாற்றுக்கு அவசியமாகும்.

இடைவிடாது பொதுக்கூட்டங்களுக்குத் தம்மாலான உதவியை அளித்துவந்த திவான்பகதூர் ரகுநாதராவ் அவர்கள் இந்த முதல் காங்கிரஸ் சபையில் சேர்ந்தவர். 'ஹிந்து' பத்திரிகையில் முதலிலிருந்தே தொண்டாற்றிய ஜி. சுப்பிரமணி ஐயரும் இந்தக் காங்கிரஸின் முதல் கூட்டத்தில் சேர்ந்தார். கிருஷ்ணஸ்வாமி ஐயருக்குப் பொது ஜன ஊழியர்களில் சிறந்தவர்களுடன் தொடர்பு இளமையிலிருந்தே இருந்துவந்தது. காங்கிரஸ் கூட்டங்களில் கலந்துகொண்டதால் இது இன்னும் சற்றுப் பலமாகியது.

ஏற்கனவே மயிலாப்பூரில் இளைஞர்களும் சில புத்திமான்களும் சேர்ந்துகொண்டு 'அதினியம்' என்ற பேச்சு அரங்கம் ஒன்றை ஏற்படுத்தி இருந்தனர். நல்ல விஷயங்களை அவ்விடம் அலசிப் பார்ப்பதில் கிருஷ்ணஸ்வாமி ஐயருக்கு அவா அதிகம். மேலும் ஆங்கிலத்தில் சொற்பொழிவாற்றவும் கற்பதற்குத் தகுதிவாய்ந்த விதம் நிறுவப்பட்ட ஸ்தாபனம் அது. நண்பர்களில் சிவஸ்வாமி ஐயரும், வெகுநாட்கள் கழித்துப் பரோபகார சிந்தாமணி என்று ஜகத்குரு காமகோடி பீடாதிபதிகளால் ஆசீர்வதித்து அழைக்கப்பட்ட ஏ. கிருஷ்ணஸ்வாமி ஐயரும், இன்னும் பலரும் அங்கு நடக்கும் சர்ச்சைகளில் கலந்து கொள்வது வழக்கம்.

பொதுஜன சேவைக்கெனச் சாதித்த காரியங்கள் சிலவற்றை இங்கே குறிப்பிடாமல் போவதும் உசிதமில்லை. 1896–ஆம் ஆண்டில் சென்னையின் மர்ம பாகத்தில் வளைந்து வளைந்து செல்லும் **பக்கிங்காம் கால்வாயின்** கிளையை அரசாங்கம் மயிலாப்பூரின் வழியாக வெட்ட ஏற்பாடுகள் செய்தார்கள். இதைத் தடுக்க வேண்டுமென மயிலாப்பூர் வாசிகள் விரும்பினர்கள். அதில் தவறில்லை என்பதை இன்று

அதனால் விளையும் துர்நாற்றத்தைப் பொறுக்கமுடியாதவர்கள் ஒப்பு வார்கள். அக்காரியத்தை எதிர்க்க முன் நின்றவர்களுள் கிருஷ்ண ஸ்வாமி ஐயரும் ஒருவர். வெற்றி பெருததால் அம்முயற்சியை இன்று நாம் குறைவாகவும் கருத முடியாதல்லவா ?

இதேவிதம் தென்னிந்திய ரயில் கும்பெனியார் 'பீச்' ரயில் நிலையத்தையும் சைதாப்பேட்டை ரயில் நிலையத்தையும் கடற்கரை மணலின் வழியாகப் பாதைபோட்டு இணைப்பதாகத் திட்டமிட்டிருந் தார்கள். பெரிய ஆட்சேபங்கள் அதற்கு இருந்தன. கடற்காற்றை அநுபவிக்கக் கும்பல் கும்பலாகக் கூடும் சென்னை மக்களுக்கு ரயில் பாதை செய்யக்கூடிய தொந்தரவு கொஞ்சநஞ்சமல்ல. கடற்கரையின் அழகையும் கெடுக்குமல்லவா ரயில் பாதை ? பெரிய கூட்டம் சமுத்திரக்கரை மணலில் கூடியது. அன்று தலைமை தாங்கியவர் ஸர். ஜார்ஜ் அர்பத்நட். பிற்காலத்தில் பாங்கியை முழுகவைத்தவர் அவரே. இருப்பினும், பாங்கு மோசடி அம்பலமாகும் வரையில் அவருடைய செல்வாக்கு, சென்னையில் அபாரமாக இருந்தது. கவர்னர் வண்டியில் செல்லுவதற்கொப்ப, நாலு குதிரைகள் பூட்டப்பட்ட வண்டியில்தான் அவரும் சென்னையில் பல இடங்களுக்குச் சென்று வருவார். மதிப்பி லும், அந்தஸ்திலும் அவரை வென்றவர்களே இல்லை அக்காலங்களில். அவர் தலைமையில் கிருஷ்ணஸ்வாமி ஐயரும் மிகுந்த உணர்ச்சியுடன் பேசினார். மற்றவர் பேசியதைவிட இவருடைய பேச்சு, பளிச் சென்று வாதங்களை முறையே கோவையாக்கி இருந்ததால், கேட்ட வர்களுக்கு அதன் நியாயம் புலனாகியது. ரயில்பாதை போடுவதைக் கும்பனி நிறுத்தியது.

சென்னைக் காங்கிரஸ் கூட்டம் 1898-ஆம் வருஷம் நடந்த பொழுது கிருஷ்ணஸ்வாமி ஐயருக்கு அதில் சில பணிகள் ஆற்று வதற்கு வாய்ப்புக் கிடைத்தது. அதில் இவர் ஆற்றிய பிரசங்கமும் காங்கிரஸ் வரலாற்றுக் கோவையில் இடம் பெற்றுள்ளது. மாகாண கவர்னரின் மந்திராலோசனை சபையில் இந்தியர் ஒருவருக்காவது இடம் தரவேண்டும் என்ற பிரேரேபணையைத் தாங்கி இவர் பேசினார். இன்றுள்ள முன்னேற்றத்தை ஒப்பிட்டுப் பார்த்தால் அன்று அவர்கள் வேண்டியவை கேவலம் பரிகாசத்திற்கே இடம் தருவதாகும். ஆனால் காங்கிரஸ் விடுதலை இயக்கத்தின் நீண்ட வரலாறு ஒருநாள் இரண்டு, நாட்களில் ஏற்பட்டதல்ல. குறைந்தது அறுபது ஆண்டுகள் தொண்டாற்றியதனால்தான், பிற்பாடு மகாத்மா வும் அதில் சேர்ந்து தமது புதிய விடுதலைப் போருக்கான திட்டங் களை உருவாக்க இயன்றது.

1898-ஆம் வருஷத்திய காங்கிரஸ் கிருஷ்ணஸ்வாமி ஐயரின்

வாழ்க்கையில் முக்கிய பகுதிக்கு அஸ்திவாரம் போட்டுவிட்டது. சென்னை மகாஜன சபையும் பதினைந்து ஆண்டுகளாகப் பொதுக் காரியங்களுக்கு அடிகோலியான பணிகளை ஆக்கி வந்தது. அதிலும் கிருஷ்ணஸ்வாமி ஐயரின் பெயர் அழியாதவிதம் பதிவாகியுள்ளதை இங்கே குறிப்பது அவசியம். மகாஜனசபை பொதுஜன ஊழியர்கள் நிறைந்த ஸ்தாபனம்.

1903-ஆம் வருஷம் மறுபடியும் காங்கிரஸ் பொதுக் கூட்டம் சென்னையில் நடைபெற்றது. அதனுடன் சேர்ந்தே பொருட்காட்சியைத் தயாரிப்பதிலும் கிருஷ்ணஸ்வாமி ஐயரின் பங்கு அதிகம். இன்றல்லவா காங்கிரஸ் பொருட்காட்சித் திட்டத்தைச் சிறப்பாகக் கருதுகிறோம். அன்றே தொடங்கியதுதான் இவ்விதத் திட்டமும். காங்கிரஸ் ஸ்தாபனம் பொதுஜனங்களின் ஆதரவைப் பெறுவதற்கு ஒருமுறை எல்லோரும் அதற்கான செலவுகளில் பங்குகொள்வது அவசியமென்று கிருஷ்ணஸ்வாமி ஐயர் கருதினார். வரவேற்புக் கமிட்டி, காங்கிரஸ் கூடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்கையில் ஆங்காங்கே ஜில்லாக்களில் சென்று தமது அபிப்பிராயத்தையும் சொல்லிவந்தார். அதாவது பணம் சேமிப்பதில் வீடுதோறும் நன்கொடை கேட்டு முடிந்தவரையில் சேகரித்த பணத்தில் எல்லோருக்கும் பங்கு இருத்தல் வேண்டும். உயர்ந்தவனுயினும் தாழ்ந்தவனுயினும், பெரும் தொகையோ சிறுதொகையோ அவனிடமிருந்து இந்த ஸ்தாபனத்துக்குச் சேர்ப்பது, காங்கிரஸ் செய்யும் காரியங்களுக்குப் பரந்த அஸ்திவாரத்தைப் போட்டதான வாய்ப்பு ஏற்படுமல்லவா? பலகாலம் கழித்து மகாத்மா காந்தி அடிகள் நாலணுச் சந்தா செலுத்திய அங்கத்தினர்களைக் காங்கிரஸில் சேர்ப்பதற்கு திட்டம் வகுத்ததை நினைக்கையில், அதேவிதம் இல்லாமலிருப்பினும் அதன் அடிப்படைக் கருத்தையே கிருஷ்ணஸ்வாமி ஐயரும் வற்புறுத்தினர் என்பது விளங்கும்.

பொருட்காட்சி தயாரிக்கும் ஏற்பாட்டிலும் தமது நண்பர் பி. ஆர். சுந்தர ஐயரையே செயலாளராய் நியமித்ததை வரவேற்றூர். நண்பருடன் ஒத்துழைத்து, காரியதரிசி சென்ற இடங்களுக்கெல்லாம் தாமும் உடனுக்குடன் போய்ச் சொற்பொழிவுகள் ஆற்றி, பல நண்பர்களின் ஆதரவையும் உதவியையும் பொருட்காட்சி அடைய வழி செய்தார்.

மற்றொரு மறக்கமுடியாத சம்பவம், அவ்வருஷம் மழை பெய்து வெள்ளம் பெருகியதால் காங்கிரஸ் கூடிய தினங்களில் வெளியிலிருந்துவந்த அங்கத்தினர்களுக்கு வசிக்க வசதிகள் சரியாகச் செய்ய இயலாது போயிற்று. விடாமல் பெய்த மழையால் காங்கிரஸ் கூட்டம்

நன்கு நிறைவேறுவதும் கடினமாகியது. அச்சமயம் கிருஷ்ணஸ்வாமி ஐயர் காட்டிய வேகமும், காரிய நிர்வாகமும் வந்தவர்கள் எல்லோரும் மெச்சும்படியாக இருந்தன. தமது லஸ்ரோடுப் பங்களாவில் இவர் வசிக்கத் தொடங்கி ஐந்து ஆண்டுகள் ஆகியிருந்தன. பெரிய கட்டடமும், பங்களாவைச் சுற்றிப் பரந்த தோட்டமும் இருந்தமையால், காங்கிரஸ் ஏற்படுத்திய விடுதிகளில் தங்க இயலாத நண்பர்களையெல்லாம் தமது பங்களாவில் தங்கவும், சாப்பாட்டு வசதிகளை அடையவும் அவர் உதவியது மிகவும் போற்றப்பட்டது. பெரியதொரு பொறுப்பைத் தாங்கிய வரவேற்புக் கமிட்டியும், இவருடைய அரிய சமயமறிந்து செய்த உதவியால் மிகவும் சிரமமான சந்தர்ப்பத்தை அதிகச் சேதமின்றி ஒருவாறு தாண்டியது. பிற்பாடு பம்பாய் நண்பர்கள் சிலர் எழுதிய கடிதங்களில் பின்வருமாறு வாக்கியங்கள் இருந்தன: "உங்கள் சிரத்தையையும் உபகாரம் செய்யும் பண்பாட்டையும் நாங்கள் போற்றுமல் இருப்பது சாத்தியமில்லை." தாதாபாய் நௌரோஜி என்ற கிழவர் தகவல்களை அறிந்தபின் சீமையிலிருந்தே கிருஷ்ணஸ்வாமி ஐயருக்கு ஒரு கடிதம் எழுதியதில், "சென்னையிலிருந்து வந்த தகவல்களிலிருந்து நீங்கள் இவ்வருஷம் காங்கிரஸ் அலுவல்களில் மிகவும் சிரத்தை காட்டியதாகவும், அநேக தொண்டுகள் ஆற்றியதாகவும் அறிகிறேன். அறிந்து மிகவும் திருப்தி அடைந்தேன்" என்கிருர்.—நௌரோஜியின் மதிப்பைப் பெறுவது அவ்வளவு எளிதல்ல.

காங்கிரஸில் ஓரளவு தமது செயல்களினுல் இன்றியமையாதவராய்த் தம்மைச் செய்துகொண்டதற்குத் தகுந்தாற்போல், வரும் வருஷம், அதாவது, 1904-ஆம் ஆண்டில் கோபாலகிருஷ்ண கோகலே பெரியாரின் பேரன்பிற்கும், நட்பிற்கும் பாத்திரமானுர் கிருஷ்ணஸ்வாமி ஐயர். சென்னைவாசிகள் காலஞ்சென்ற ரானடேயின் ஞாபகார்த்தமாக ஏதாவது உபயோகமான ஸ்தாபனத்தை நிறுவ வேண்டுமென்று தீர்மானித்து, அவர் பெயரில் ஒரு புத்தகசாலையையும் அதனுடன் இணைந்த தென்னிந்திய தேசிய சங்கம் என்ற ஒன்றையும் உற்பத்தியாக்க முனைந்த சமயம் அது. திவான்பகதூர் ரகுநாத ராயர் நன்கொடையாக அதற்கு வேண்டிய நிலத்தைத் தமது பங்காகக் கொடுத்து மயிலையில் கட்டடம் எழுப்ப உடனே உதவினுர். கிருஷ்ணஸ்வாமி ஐயர் தமது பங்காக ரூபாய் ஐயாயிரத்தைப் புத்தகசாலையை நிறுவ உடனே தந்தார். நண்பர் சுந்தர ஐயரும் ஈடான தொகையைக் கொடுத்துதவவும், கட்டட நிர்மாணத்திற்கான ஆக்க வேலைகள் தொடங்கின. கட்டடத்தின் அஸ்திவாரக் கல்லைக் கோகலே பெரியாரைக் கொண்டு நாட்டுவதுதான் ரானடே ஞாபகார்த்த நிலையத்

திற்குப் பொருத்தமானதாகப் பட்டது கிருஷ்ணஸ்வாமி ஐயருக்கு. கோகலேயைத் தெரிந்திருப்பினும் தமது இல்லத்திலேயே அவரை இரண்டு நாட்கள் தங்கச் செய்வதில் ஆர்வங்கொண்டு, இவர் தமது மற்ெருரு நண்பரான காலஞ்சென்ற ஜி. ஏ. நடேசனை இவ்விஷயத்தில் சிரத்தை எடுக்கத் தூண்டினுர். நடேசன் அவர்கள் கிருஷ்ணஸ்வாமி ஐயருக்கு மிகவும் வேண்டியவர். வயசிலும் இவரைவிட இளைஞராக இருந்தார். ஆனுலும் காரியங்களைத் துரிதமாகச் செய்வதில் அவரும் வல்லவர். ஆகையால், உடனே கோகலேயை அழைக்கக் கடிதம் எழுதி, அதனுடன் நண்பருடைய பெரிய பங்களாவிலும் அவர் தங்கும்படி முழு ஏற்பாடுகளையும் விரும்பியவிதமே செய்து முடித்தார். ஜூலை மாதம் அஸ்திவாரக் கல் நாட்டு விழா விமரிசையாக நடந்தேறியதும், அதன்பயனுகக் கிருஷ்ணஸ்வாமி ஐயருக்கு வாழ்க்கையின் சாரமான நட்பின் பிணைப்பு, கோகலே பெரியாருடன் உண்டாயிற்று. தமது மகன் பாலசுப்பிரமணியனைக்—பள்ளியில் வாசித்து வந்தவனை—கிருஷ்ணஸ்வாமி ஐயர் கோகலேயின் சமீபம் இருக்கச் சொல்லி அவருக்கு வேண்டிய பணிவிடைகளை யெல்லாம் செய்யச் சொன்னுர். இரண்டாவது பெண் சுப்புலட்சுமியும் கோகலேயின் அன்புக்கு இலக்கானுள். சிறுவர்களிடம் கோகலே காட்டிய பேரன்பு வியக்கத்தக்கதாக இருந்ததைப் பார்த்தவர்கள் பெரிதும் பாராட்டினுர்கள். வாச்சா பம்பாயிலிருந்து ஆகஸ்ட் மாதம் கிருஷ்ணஸ்வாமி ஐயருக்கு எழுதுகையில், "சென்னை, கோகலேக்கு அளித்த வரவேற்புச் சரியானதுதான். அவரிடம் உள்ள நல்ல பண்புகள் நல்ல உழைப்பு, வாக்குவன்மை, ஆங்கிலப் பயிற்சி, புத்திநுட்பம், சுய நம்பிக்கை—எல்லாவற்றைக் காட்டிலும் மேலானவை—சீலமும், தூய்மையான இதய வளர்ச்சியுமே" என்று வருணித்தார்.

கோகலேயின் நட்புக் கிடைத்தது சாமான்ய பாக்கியம் அல்ல. உயர்ந்த தேச சேவைக்கு வழிகாட்டிய அவர், தமது சென்னை நண்பரைப் பார்த்ததும் அவர் அன்பிற்கு வசப்பட்டுவிட்டார். மேலும், மேலும் பொதுஜன சேவையில் ஈடுபடக் கிருஷ்ணஸ்வாமி ஐயருக்கு நல்ல ஆதர்சமாக இருந்தவர் கோகலே ஒருவரே. பல கடிதப் போக்குவரத்து அன்று தொடங்கி அவர்களிடையே வளர்ந்தது. தனிப் பிரசுரமாயும் அக்கடிதங்கள் வெளிவரவேண்டிய அளவுக்கு அவை படிப்பினைகளும், உயர் கருத்துக்களும் கொண்டவை என்பதில் சந்தேகம் இல்லை.

அடுத்த வருஷம் கோகலேயே காங்கிரஸ் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1905-ஆம் ஆண்டுக் கூட்டம் காசியில் நடைபெற்றபொழுது, சென்னையிலிருந்து குடும்பத்தார் சிலருடனும் தமக்குக் கீழே

தொழிலில் வேலை பார்த்தவர்கள் சிலருடனும் கிருஷ்ணஸ்வாமி ஐயர் காசிக்குச் சென்றார். சீமைக்குக் கோகலே செல்லவும், அங்குள்ள பார்லிமெண்டு அங்கத்தினர்களில் சிலர் சேர்ந்து உருவாக்கிய இந்திய நாட்டுக்கு உதவும் குழுவில் தமக்குள்ள செல்வாக்கை உபயோகித்துச் சிற்சில திட்டங்களை நிறைவேற்றவும் அவர் பாடுபட்டு வந்தார். அவருடைய செயல்களில் பூர்ணநம்பிக்கை சென்னை நண்பருக்கு இருந்ததைப்போல் வெகு சிலருக்கே தேசீய ஸ்தாபனமான காங்கிரஸ் அங்கத்தினர்களிடம் இருந்தது. அக்காரணமாகவே கிருஷ்ணஸ்வாமி ஐயரின் அநுதாபக் கடிதங்களில் கோகலே பெரியாருக்குத் திருப்தி ஏற்பட்டது ; மனச்சோர்வும் சிறிது விலகியது.

இதனிடையில், சென்னை மாகாண மகாநாட்டைத் திருநெல்வேலியில் கூட்டுவதாகத் தீர்மானிக்கப்பட்டு அதன் தலைமையையும் கிருஷ்ணஸ்வாமி ஐயரே தாங்கவேண்டுமென்று முடிவாகிவிட்டது. தமது தகுதியைச் சந்தேகித்து வாச்சாவிடம் இவர் தெரிவித்ததற்கு அவர் பதில் மிக்க உற்சாகத்தையே வழங்கியது. அவர் எழுதினார்: "காங்கிரஸ் பொதுக்கூட்டங்களிலும் சரி, உள்ளே விஷயாலோசனைக் குழுவிலும் சரி, உங்களை ஊன்றிப் பார்த்தவர்கள், நினைப்பது வேறு. எப்பொழுதும் தெளிவான நோக்குடனே நீங்கள் பல கருத்துக்களை வழங்குகிறீர்கள் என்பது அவர்கள் எண்ணம். முக்கியம் எது, வேண்டாதது எது என்பவைகளை வெகு சீக்கிரம் அறிவதில் நீங்கள் அதிசூட்சுமமதியுடன் இருக்கிறீர்கள். நிச்சயம் உங்கள் தலைமைப் பிரசங்கம் அரியதாய் அமையும் என்பதை நான் எதிர்பார்க்கிறேன்." (19—5—'06). இவரைத் தலைவராகத் தேர்ந்தெடுத்ததை 'ஹிந்து' பத்திரிகை ஆமோதித்தது. கிருஷ்ணஸ்வாமி ஐயர் சிறு வயசிலேயே வக்கீல் தொழிலில் பிரபலமாகிவிட்டார். மேலும் பொதுக் காரியங்களில் ஊக்கமும், எதிர்ப்புக்களைக் கண்டு மருளாத தன்மையும், நல்ல இயக்கங்களில் ஒத்துழைப்பும் ,பல தருமஸ்தாபனங்களைச் சொந்தத் தனத்தைக் கொண்டு நிறுவும் பண்பும் அவர் மற்றெல்லோரையும் விட மேம்பட்டவர் என்பதைக் காட்டும், என்றெல்லாம் கூறி அது இவரைப் புகழ்ந்தது.

நல்ல சொற்பொழிவுதான் திருநெல்வேலியில் இவருடைய தலைமை உரை. ஒரு மணிக்குக் குறையாமல் பேசினார். அநேக பிரச்னைகளை அலசிப் பார்த்தார். அரசியல் சட்டசபைச் சீர்திருத்தம், மாகாணப் பிரிவினையை யொட்டி ஏற்படவேண்டிய கீழ்ஸ்தாபனங்கள், ஆரம்பக் கல்வி, கைத்தொழிற் பயிற்சி, ஹிந்து தரும நிலையங்கள், சைனியச் செலவு, அரசாங்கத்தில் நம்மவருக்கு ஏற்படவேண்டிய பங்கு, அரசாங்க இலாகா, நீதி இலாகா இவைகள்

பிரிக்கப்படுவதன் அவசியம், இந்தியர்களின் தனிப் பொறுப்பு, இன்னும் இம்மாதிரி அக்காலத்தில் முன்னின்ற பிரச்னைகளைத் தீர்த்து வைக்கும் வழிகளை உருவாக்கும் யோசனைகளையும் தந்திருந்தார். கோகலே, வாச்சா, லஜபதிராய் போன்ற மாபெரும் தலைவர்களும் அந்தப் பிரசங்கத்தின் அச்சுப் பிரதியை வாசித்தபின் கடிதமூலம் தங்கள் அங்கீகாரத்தைக் கிருஷ்ணஸ்வாமி ஐயருக்குத் தெரிவித்தார்கள். சிலர் சீமைக்கே ஏன் கிருஷ்ணஸ்வாமி ஐயர், கோகலேயுடன் கூடச் சென்று இந்திய நாட்டின் விடுதலைக்கும், முற்போக்குக்குமான முயற்சிகளையும் இயற்றலாகாது என்றே கேட்டதும் உண்டு. ஏன், கோகலேயே ஓர் அந்தரங்கக் கடிதத்தில் அதேவித விருப்பத்தை நண்பரிடம் நேரில் தாமே சமர்ப்பித்தார். ஆனால், சீமை செல்வதைக் கிருஷ்ண ஸ்வாமி ஐயர் தமக்கு முக்கியமான செயலாகக் கருதவில்லை தான்.

கோகலேயின் **இந்தியர் ஊழியர் சங்கத்தைப்** புனாவில் அப் பெரியார் துவக்கியவுடன் சென்னை நண்பரின் ஆசிகளைப் பெற்றது. ஆரம்பித்த காலத்தில், அதாவது 1905–ஆம் ஆண்டில், சில கடிதங்களிலிருந்து நமக்குத் தெரிவது, கிருஷ்ணஸ்வாமி ஐயர் அவ்விதச் சங்கத்தில் உள்ளவர்கள் அநுசரிக்க வேண்டிய விரத வாழ்க்கையை முதலில் அவ்வளவாக ஒப்பாவிடினும், சிறிது காலத்தில் கோகலேயின் லட்சியத்தில் உள்ள நம்பிக்கையால் ஆதரித்தேவிட்டார். மேலும் பண உதவியையும் தாராளமாகச் செய்யவே முன்வந்தார். பதினாயிரம் ரூபாய் வரையில் நன்கொடை அளித்து, மேலும் சமயம் வந்த பொழுது கொடுப்பதாக வாக்கும் அளித்தார். ஆனால், பிறகு வெகுகாலம் அவர் ஜீவித்திருக்காததால், சென்னைக் கிளைச் சங்கத்துக்கு உதவிய பொருளுடன், சங்கத்தின்பால் பணஉதவி அதிகமாக ஏற்படவில்லை.

இந்திய அரசாங்கச் சீர்திருத்த மசோதா சம்பந்தமாகக் கோகலே லார்ட் மார்லியுடன் சீமையில் கலந்து சில முடிவுகளுக்குத் தம்மை இசைய வைத்துக்கொண்டார். சூரத் காங்கிரஸில் ஏற்பட்ட பிளவினால் இரண்டு கட்சிகளாகப் பெரிய ஸ்தாபனம் பிரிந்த வரலாறு பிரசித்தமானதல்லவா! சூரத் காங்கிரஸில் கிருஷ்ணஸ்வாமி ஐயரின் யோசனையின்பேரில்தான் சிறு கூட்டமாக மிதவாதிகளாகச் சேர்ந்து **'கன்வென்ஷன்'** என்ற முறையில் காங்கிரஸ் விவகாரங்களைத் தடைப்படாமல் நிறைவேற்றினர். கோகலே அச்சமயம் நண்பருடைய அசாதாரண நுட்ப அறிவை மெச்சிச் சொன்னாராம்: "நாங்களுந்தான் அரசியல் சரித்திரம் படித்திருக்கிறோம்; ஆனால், நடைமுறையில் வழியிருப்பதைக் காட்டிய மேதாவி நீங்கள்தாம்."

சூரத் கலகத்திற்குப் பின் இருகட்சிகளாகக் காங்கிரஸ் அங்கத்தினர் பிரிந்தனர். தீவிரவாதக் கட்சியில் திலகர், விபின சந்திரபாலர் லஜபதிராய், முதலியவர்களும் மிதவாதத்தில் மேதா, கோகலே, கிருஷ்ணஸ்வாமி ஐயர் முதலியவர்களுமாய் ஏற்பட்டுத் தலைவர்களிடையே லட்சிய பேதங்களும் நடைமுறையில் செய்யவேண்டிய ஆக்கவேலைகளில் வித்தியாசங்களும் மூண்டுவிட்டன. ஏற்கனவே வங்காளத்தில் பெரிய கொந்தளிப்பு இருந்துவந்தது. அங்குள்ள மாகாணப் பிரிவினை சம்பந்தமாகக் ஊரில் பல இடங்களில் தீவிரவாத கட்சியார் அரசாங்கத்தை எதிர்க்கத் திட்டங்கள் பல வகுத்துக் கொண்டனர். கிருஷ்ணஸ்வாமி ஐயரும் சும்மா இராமல், தமது தலையில் வசவுகளை வரவழைத்துக்கொண்டார். கொடைக்கானல் மலைக்கு விடுமுறைக்காகச் சென்றவர், பகிரங்கக் கடிதம் ஒன்றைப் பத்திரிகைகளில் வெளியிட்டார். சமீபத்தில் 1907ஆம் வருஷம் ஜூன் மாதத்தில் விபின சந்திர பாலர் சென்னையில் தீவிரவாதம் நிரம்பிய பேச்சுக்களை அநாயாசமாக வாரி இறைத்திருந்தார். அதன் விளைவு நாட்டில் என்ன கெடுதல்களை யெல்லாம் உண்டாக்குமோ என்றே பல தலைவர்கள் பயந்தார்கள். ஆனால், தைரியமாய்த் தமது கவலைகளை வெளியிட்டும் இளைஞர்களின் தலைவிரித்தாடும் இயக்கத்தைக் கண்டித்தும், சில முக்கியமாயுள்ள அரசியல்வாதிகளின் குறைகளைக் குற்றம்சாட்டியும் அக்கடிதம் பகிரங்கப்படுத்தியது.

எங்கும் கூக்குரல் ஏற்பட்டுக் கிருஷ்ணஸ்வாமி ஐயரின் நண்பர்களில் நெருங்கியவரான வலங்கைமான் ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகள் முதல் வேண்டியவர்களும் நண்பரைத் தாக்கினார்கள்.

பகிரங்கக் கடிதத்திலுள்ள கருத்துக்கள் இன்று நிதானமாய்ப் பார்ப்பவர்களுக்குச் சரியாகவே தோன்றும். ஆனால் காலச்சூழ் நிலையில் கட்சி வலுத்துவிட்டதால், தீவிர வாதத்தை, அதிலும் பகிஷ்காரப் பிரசாரத்தை அவர் கண்டித்ததை வைத்து அவர் தேசீயத்திற்கே விரோதி என்றெல்லாம் எதிராளிகள் புகார் செய்யத்தொடங்கினர். கோகலேமட்டும், தடை செய்யவோ, வேறு விதமாய் நண்பருக்குப் புத்திமதிகள் சொல்லவோ முன் வரவில்லை. சாஸ்திரிகள் எழுதியதற்கும் பதிலாய், 'கிருஷ்ணஸ்வாமி திடசித்தம் படைத்தவர். உண்மையில் கட்சி வாதத்தை வெறுப்பவர். தீவிர வாதிகளுடன் சண்டை போட்டு அவரே தீர்த்துக்கொள்வார். உங்களுக்கு எதனால் வீண் கவலை?' (8-6-1907) என்று எழுதிவிட்டார். இளைஞர்களில் எஸ். ஸ்ரீநிவாச ஐயங்கார் பகிரங்கக் கடிதத்தின் தெளிவான கருத்துக்களையும், நுட்பமான அறிவையும் புகழ்ந்து பொறுமிவிட்டார்.

கோகலேயின் பெரிய யோசனைகளையும் இந்திய நாட்டு அரசியலில்

அவருக்குள்ள சிரத்தையையும் மிகவும் கூர்ந்து கவனித்தவர்களில் சென்னை நண்பரைப்போல் வேறு ஒருவரும் இல்லை. ஆயிரம் மைல் களுக்கு அப்பால் இருந்தும் கிருஷ்ணஸ்வாமி ஐயருடைய கற்பனைச் சக்தியும் மனோதருமமும் கோகலேயின் உண்மை உழைப்பை நன்கு அறிந்திருந்தது. எவ்வளவு தூரம் உண்மையான அன்பும், நிலையான புத்தியும் ஒருவரிடம் இருக்கிறதோ அவ்வளவுக்குப் பிறர்பால் அநு தாபத்தைக் காட்ட இயலும் என்றே கோகலே நன்றி செலுத்துவார், அன்பு மிக்க நண்பருக்கு.

சென்னை மகாஜன சபையின் விருத்தாந்தமும் இங்கு அவசியம். அரிய காரியங்களை அங்கு நடத்தியவர்கள் சீக்கிரம் கிருஷ்ணஸ்வாமி ஐயரிடம் பொறாமையும் அசூயையும் காட்டி அவரை நிந்திக்க முன் வந்தார்கள். அக்காலங்களில் பேரிடிகளும் புயற்காற்றுகளும் அவ் விடத்தில் ஏற்பட்டதாகச் சொல்லுவார்கள். அநேக வாய் வெடிகளை இவரும் விட்டெறிந்ததுஉண்டு. பதிலுக்கு அநேகம் இவர் மேல் சிதறி விழுந்ததையும் இவர் தாங்கியது உண்டு. சளைக்காத உழைப்பும் பயமில்லாத தைரியமும் சேர்ந்துகொண்டு இவரை ஆயிரத்தில் ஒருவராகவே கருதவைத்தன.

VI. கல்வியில் சிரத்தை

கிருஷ்ணஸ்வாமி ஐயர் சர்வகலாசலையில் ஓர் அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஏற்கனவே கல்வி சம்பந்தமாகப் பொது ஜனங்களின் ஆதரவில், மணி ஐயர் முதலியவர்கள் சேர்ந்துகொண்டு மக்கள் கல்வி சம்பந்தமானப் பிரச்னைகளை அவ்வப்பொழுது ஆலோசிக்கத் தகுந்ததான ஒரு பொது ஸ்தாபனம் வேண்டுமென்று தீர்மானித்துத் தாங்களாகவே கல்வி அபிவிருத்தி சங்கம் என்ற ஒன்றைக் கூட்டி இருந்தார்கள். 1900 ஆம் ஆண்டில் இவரும் அதில் கலந்துகொண்டு நல்ல சில கல்வித்திட்டங்களை உருவாக்கினார். பிற்காலத்தில் மகாகனம் என்ற அரிய பிருதைப்பெற்ற ஸ்ரீநிவாச சாஸ்திரிகளும் முக்கிய அங்கத்தினர்களில் ஒருவராக அச்சமயம் இருந்தார்.

இம்மாதிரிக் கூட்டங்களுக்கு அக்காலங்களில் கூடியவரையில் இடவசதி அளித்த ஸ்தாபனம் பச்சையப்பன் பெரிய மண்டபம். கர்ஸன் பிரபு இந்திய ராஜப்பிரதிநிதியாக இருக்கையில், ஏற்படுத்திய கல்விக் கமிஷனைப் பற்றித் தாக்குகையில், கிருஷ்ணஸ்வாமி ஐயர், 'அதிலுள்ளவர்களில் ஒருவராவது உண்மையில் கல்வி விஷயங்களில் சிரத்தை காட்டியவர்கள் அல்ல' என்று ஒரு போடு போட்டுத் தமது கட்சியின் பலத்தை ஸ்திரப்படுத்தினார். மேலும், 'சர்வகலாசாலையை அரசாங்கத்தின் ஒரு கிளையாக ஆக்குவது சற்றும் பொருத்தமல்ல என்றும் காட்டினார். 1904-ஆம் ஆண்டில் பச்சையப்பன் கல்லூரி ஹாலில், நார்ட்டன் துரை தலைமை தாங்க வரமுடியாத காரணத்தால் அன்று கூட்டத்திற்கு இவர் தலைமை தாங்கிப் பிரசங்கம் செய்தார். கல்விச் சட்டம் ஒன்று அமுலுக்கு வந்திருந்தது அவ்வாண்டில். அதன் குறைகளை மிகவும் அழகாக எடுத்துக்காட்டி இவர் பேசினார். தொழிற் கல்விக்கான சிறு முயற்சியையும் சர்வகலாசாலைத் திட்டம் நினையாததை அக்காலத்திலேயே விவரித்து வருந்தியவர் கிருஷ்ணஸ்வாமி ஐயர் ஒருவரே எனதுகூடத் தெரிகிறது. பெண்களின் கல்விக்கான தனிப்பட்ட முயற்சிகளை எடுக்காததைக் குறித்தும் அவர் வாதாடினார். பத்திரிகைகள், முக்கியமாகச் சென்னை 'மெயில்' கிருஷ்ணஸ்வாமி ஐயரின் பிரசங்கத்தின் சாரத்தைப் பாராட்டித் தலையங்கம் எழுதியது. ஆராய்ச்சித் துறை (Research) யைப்பற்றியும், தொழில் நுணுக்கக் கல்வி (Technology) யைக் குறித்தும் சில யோசனைகளை உருவாக அவருடைய பிரசங்கம் எழுப்பியதை மெச்சியது அப்பத்திரிகை.

கோவில்களும் மடங்களும் அவசியத்திற்குமேல் சேகரித்துள்ள பொருளைக் கல்வி சம்பந்தமாக அவற்றின் நிர்வாகிகள் செலவு செய்ய

வேண்டுமென அன்றே அவர் குறிப்பாகப் பேசியுள்ளார்.

சர்வ கலாசாலையின் ஆலோசனைகளில் 1904 ஆம் வருஷம் முதற்கொண்டு அவருடைய திடமான பொறுப்பும் ஒத்துழைப்பும் கல்வி விஷயங்களில் உபயோகப்பட்டன. முக்கியமாக ஸம்ஸ்கிருதப் படிப்பைப் பற்றி அவருடைய சிரத்தை அதிகம் என்றே கருத இடம் இருக்கிறது. இதர பட்டதாரிகளுடன் சமமாக ஸம்ஸ்கிருதக் கல்விக்கான பரீட்சைகளில் தேறியவர்களுக்கும் சர்வகலாசாலை பட்டம் அளிக்கவேண்டும் என்ற கருத்தை அவர் சிறிது காலமாக எண்ணமிட்டுவந்தார் என்பதும் தெரிகிறது. சாஸ்திரங்களைப் பயிலுகிறவர்கள் பழைய சம்பிரதாயத்தையே நம்பி வாழாமல், நான்கு வருஷங்களில் ஸம்ஸ்கிருத சாஸ்திரங்களில் பொறுக்கியவைகளில் தேறினால் அவர்களுக்கும் பட்டம் சர்வகலாசாலை அங்கீகாரத்துடன் கிடைக்கும் என்பதை உருவாக்கும் பணியில் தமது நெருங்கிய நண்பரான சிவஸ்வாமி ஐயருடன் பல நாட்களாக யோசனைசெய்து வந்திருந்தார். 1909 ஆம் ஆண்டில்தான் சர்வகலாசலையின் அதிகாரிகள் ஸம்ஸ்கிருத சாஸ்திரங்களைக் கற்றவர்களுக்குப் பட்டம் அளிப்பதை ஒப்புக்கொண்டார்கள்.

புதிய கல்விகளிலும், விஞ்ஞானப் பயிற்சிகளிலும் இவருக்கு வெகு உற்சாகம் உண்டு. 'டெக்னலஜி'யிலும் நமது சர்வ கலாசாலைப் பாடத் திட்டங்கள் வகுத்து அவைகளில் தேர்ச்சி பெறுகிறவர்களை அதிகம் பெருக்கவேண்டுமென்ற விருப்பம் அன்றே இருந்தது இவரிடம். கைத்தொழில் அபிவிருத்தியையும் மும்முரமாக இவர் அலசிப் பார்த்து, நீண்டதொரு அறிக்கையை வெளியிட்டார். 1907–ஆம் ஆண்டில் கூட்டிய விசாகப்பட்டணத்து மகாநாட்டிற்குத் தமது ஆக்ஷேபத்தைச் சமர்ப்பித்தார்.

மகாநாட்டிற்குப் பிரசித்தமான அறிக்கை அது என்பார்கள், அந்த நீண்ட அறிக்கையைப் பரிசிலனை செய்தவர்கள்.

கல்வி விஷயங்களாயின் அவைகளுக்குத் தம்மாலான உதவியை இவர் செய்யப் பின் வாங்கியதே இல்லை. பழைய மெட்ரிக்குலேஷன் பரீட்சையை மாற்றி முக்கியமான சில பாடங்களில் தேர்ச்சியடையும் கல்வித்திட்டத்தை உருவாக்கும் நோக்கத்தில் இவருக்கு முழுப் பொறுப்பும் ஏற்பட்டது. அதனால் தீமையே ஏற்பட்டதாகச் சிலர் பிற்பாடு நினைத்தது உண்டு. எதையும் செய்து பார்க்கத் துணியாத பயங்கொள்ளிகள், செய்த பிறகே குறைகளைக் கண்டு, செய்ததே தவறு என்று வாதம் இடுவதை ஒரு பொருட்டாகக் கொள்வதும் சரியில்லை.

சர்வகலாசாலையின் காரியங்களுக்கான சட்டதிட்டங்களை நிறுவு

வதில் முக்கியமான சிலருடன் அநேக நாட்கள் உழைப்பை வழங்கி வேலைகள் பல செய்தார் என்பதை அங்குள்ள பழைய வரலாறுகள் தெளிவாக்குகின்றன. இந்திய சரித்திர ஆராய்ச்சியில் இவருக்கு மிகுந்த உற்சாகம் உண்டு. அதை வளர்ப்பதற்கான முறைகளில் ஒன்று, நல்ல பணத்தொகையைக் கொடையாகவழங்கி அதன் வருவாயைக்கொண்டு ஆராய்ச்சியாளர்களுக்குத் தங்கள் முடிவுகளை அவர்கள் வெளிப்படுத்தும் உபந்நியாஸத்திற்குப் பரிசு தருவது. அதற்கான மூலதனம் ஒன்றை மகான் மணிஐயர் பெயரில் வழங்கியவர் கிருஷ்ணசுவாமி ஐயர். கொடை வழங்க முன்வந்த இதர வள்ளல்களுக்கெல்லாம். வழிகாட்டியாயிற்று அந்த மூலதனம்.

கவர்னர் ஜெனரல் கர்ஸன் பிரபு மிகுந்த கர்வி. அவன் இந்திய நாட்டை ஆளவந்ததிலிருந்து சிற்சில நன்மைகளைச் செய்தவனுயினும், இந்தியர்களின் மானத்தை வாங்கும் கருத்துக்களையும், செயல்களையும் பயமின்றி உருவாக்கியவன் அவனே. வெள்ளைக்காரர்களே இந்திய நாட்டை ஆளும் பதவிகளில் எக்காலமும் இருப்பதன் அவசியத்தை அவன் கூருத சமயமே இல்லை. நல்ல பழக்கங்களும், படிப்பு வசதிகளும், உயர்நிர்வாகத் தேர்ச்சியும், வெள்ளைக்காரர்களிடமே அதிகம் காணப்படும் என்பதை மறக்காமல் பல இடங்களில் அவன் பகிரங்கமாகச் சொல்லியும் வந்தான்.

இதனுடன் கல்கத்தா சர்வகலாசாலை மாணவர்களுக்குப் பட்ட விழாவில் ஆற்றிய சொற்பொழிவு ஒன்றிலும் இந்தியப் பண்பாட்டைக் குறைத்துச் சொன்ன சில கருத்துக்கள், எங்கும் மக்கள் மனங்களில் எரிமலைகளைக் கிளப்பின.

உண்மை பேசுவது பெரிதும் மேலைநாட்டார்களின் குணங்களில் ஒன்று என்றும், மேலைநாட்டார்களின் ஒழுக்க நடவடிக்கைகளையும், சத்தியத்திற்கு அவர்கள் கொடுத்துள்ள உயர் ஸ்தானத்தையும் அவன் முதலில் சொன்னுன். தங்களைப்பற்றிப் பெருமையுடன் பேசுவதுடன் நிறுத்தாமல், இந்தியர்களையும் இளைஞர்கள்முன் அவன் இழிவாகக் கூறினுன். கீழைநாடுகளில் சத்தியத்தை அவ்வளவு உயர்த்தவில்லையாம். சுற்றிச் சுற்றித் தேடித்தான் ஒரு விஷயத்தை இந்தியர்களின் பேச்சுக்களில் தெரிந்துகொள்ள முடிந்ததாம். சத்தியத்தைப் புராணங்களே இந்தியாவில் அதிகம் கூறுவதையும், ஆனுல், நடைமுறையில் செய்யும் காரியங்களில் சத்தியத்தை விட்டு விலகும் வழிகளை அதே புராணங்கள் வெகுவாகச் சொல்லியிருப்பதையும் கூறிக் குத்திக் காட்டினுன்.

பெரியதொரு கிளர்ச்சி இதனுல் நாடு முழுவதும் உண்டாகியது. எங்கும் பொதுக்கூட்டங்களில் தலைவர்கள் கர்ஸனை நிந்தித்தார்கள். அவனது இறுமாப்பை கண்டிக்கவேண்டிய வேண்டுகோள்களை

அதிகாரிகளுக்கும் அனுப்பினுர்கள். ஆனால், கிருஷ்ணஸ்வாமி ஐயர் மட்டும் அந்த வாய்ப்பை உண்மையிலேயே ஓர் நிலைக்கக்கூடிய பயனுக்கு அஸ்திவாரமாக்க முயன்ருர். அதாவது பழமை மணம் பெற்றிருப்பினும் எக்காலமும் எங்கும் மனிதகுலம் அறிந்து வணங்கக் கூடியதான அரிய நீதிகளையும் புத்திமதிகளையும் போஷித்த இந்தியப் புராணங்களில் இங்குமங்குமாகச் சிதறிக் கிடக்கும் கதைகளைப் பொறுக்கி, அழகாகப் பாகுபாடு செய்து உயர்லட்சியங்களைப் போதிக்கும் அறிவுரைகளாகத் தொகுப்பதில் முனைந்தார். அருமையான கதைகளல்லவா நம் நாட்டில் உள்ளன? ராமனையும், அரிச்சந்திரனையும் படைத்த பெருமை வேறு எந்த நாட்டிற்கு உண்டு? சீதையையும் நளாயினியையும் கற்புக்கரசிகளாக வேறு எந்த மனித குலம் இவ்வளவு போற்றும்? இன்னும், உயிர்ப் படைப்புலுள்ள இதர மாடு, ஆடு போன்ற ஜீவன்களும் உண்மையின் வடிவுகளாய்த் திகழ்ந்ததை இங்குள்ள தொன்மைக் காவியங்கள் கூருவிடின் வேறு எங்கு அவைகள் மலிந்து கிடக்கும்?

பண்டிதர்கள் குழாம் ஒன்று அவரது கிருகத்தில் கூடி, இக்காரியத்தில் முனைய ஒப்புக்கொண்டது. மணிகளான நாற்பத்தொரு கதைகள் பொறுக்கப்பட்டு லட்சிய வாழ்க்கையின் அஸ்திவாரக் கற்களாக அடுக்கப்பட்டுள்ளன அந்தத் தொகுப்பில். **'ஆரிய சரித்திரம்'** என்ற மகுடம் அத்தொகுப்புக்கு இடப்பட்டது. பிரசித்தி பெற்ற ஸ்ரீரங்கம் 'வாணி விலாஸ்' அச்சுக்கூடத்தார் கலைத்தாள்களில் எழுநூறு பக்கங்களுக்குக் குறைவில்லாமல், அப்புத்தகத்தை 1907இல் அச்சிட்டார்கள். முகவுரையிலும் தமது விருப்பத்தை வெளியிட்டார் கிருஷ்ணஸ்வாமி ஐயர். பல பாஷைகளிலும் ஸம்ஸ்கிருத மூலத்தை மொழி பெயர்ப்பதன் உபயோகத்தை எடுத்துரைந்திருந்தார். பணத்தை நல்ல செயலில் செலவிடத் தயங்காத இதயமானதால், செலவு முழுவதையும் இவரே ஏற்றுக்கொண்டு புஸ்தகத்தை வெளியிட்டார். மதனமோகன மாளவியா, ஸ்ரீராம கிருஷ்ணனந்தர், கயக்குவாடா பதிப்பகம், எல்லோரும் ஆரிய சரித்திரத்தின் உயர்வை மதிப்பிட்டுப் பாராட்டினர்.

கர்ஸனுக்கு அளித்த பதில்மட்டும் அல்ல 'ஆரிய சரித்திரம்', அறியாமையில் முழுகிக் கிடக்கும் இதர தேசங்களிலுள்ள பலருக்கும் ஆரிய சரித்திரம் ஒரு பதில்தான். இன்னும் கூர்ந்து கவனித்தால், ஆவேசம்மட்டும் மறுமொழியாவதில்லை ஒரு புகாருக்கு. தொடர்ந்து செய்யும் ஆக்கவேலையேதான் சரியான உத்தரமாகும் என்பதும் இதில் பதுங்கியுள்ளது. 'ஆரிய சரித்திரம்' தோன்றிய பிறகு நம் நாட்டினர்க்கே இவ்வளவு சுவாரஸ்யமான கதைகள் உள்ளனவா இங்கு என்ற வியப்புத் தோன்றியதிலும் ஆச்சரியமில்லை.

VII. தரும சிந்தனைகள்

பிறரிடம் அனுதாபம் காட்டிப் பிச்சைக்காசு வழங்குவது ஓரளவு நல்ல பழக்கமாயினும், பிறரிடமுள்ள உயர்வைக் கொண்டாடும் தயாள குணம் அதைவிடவும் மேற்பட்டதென யாரும் ஒப்புவார்கள்.

மணி ஐயரிடம் நெருங்கிப் பழகியவர்கள் அவரிடம் கண்டு வியந்த குணம் அவரது தயாள குணமே. மேலும் புத்திசாலிகள் எப் பிறப்பாயினும் எந்த வயதினராயினும் மணி ஐயர் அவர்களைப் பாராட்டாது கடந்து செல்லமாட்டார். இப்பெரிய உதாரத் தன்மையை மனமாரப் பாராட்டியவர்களில் முதலில் நின்றவர் கிருஷ்ணஸ்வாமி ஐயர். மணி ஐயரிடம், வக்கீல் தொழில் செய்கையில், கட்சிக்காரர்கள் வந்து தொந்தரவு செய்வார்களாம். எதிரே உட்கார்ந்து உழைத்த இளைஞர்களான கிருஷ்ணஸ்வாமி ஐயரையும், சுந்திர ஐயரையும் சுட்டிக்காட்டி மணி ஐயர் சில வேளைகளில் கூறுவாராம்: 'இளஞ் சிங்கங்கள் இதோ எதிரில் இருக்கையில் ஏன் என்னையே விரும்பு கிறீர்கள் ?' என்று.

'மணி ஐயர் தருமதேவதையின் வடிவம்' என்பார் உணர்ச்சியுடன் கிருஷ்ணஸ்வாமி ஐயர். ஆனால், தம் வரையில், எதையும் நன்கு விசாரித்து, பயன் உண்டா ஒருவருக்கு உதவுவதால் என்று அறிந்த பின்புதான் கிருஷ்ணஸ்வாமி ஐயர் தருமத்தை விநியோகிப்பார். ஆனால், சரி என்று பட்டபின் தருமம் செய்வதை ஒதுக்கிப் போடும் கெட்ட பழக்கம் ஒருபொழுதும் கிருஷ்ணஸ்வாமி ஐயரிடம் இருந்ததே இல்லை. 'நாளைக்கு' என்ற சொல்லே தருமம் செய்பவனிடம் இருக்கலாகாது என்பது அவர் சித்தாந்தம். ஏனெனில், நல்ல சிந்தனை வரலாம், பிற்பாடு அதனை நடைமுறையில் செய்யத் தாமதம் செய்வதால், மறுபடியும் தருமம் செய்ய அவகாசம் கிடைக்காமலே போகலாம் அல்லவா? நாளை ஒருவன் உயிருடன் இருப்பதே நிச்சயம் இல்லாதபொழுது, பிடறியில் யமன் கை வைத்திருப்பதை நினைந்து, உடனுக்குடனே தருமத்தைச் செய்வதே மேல் என்பார் கிருஷ்ண ஸ்வாமி ஐயர்.

நல்லதைச் செய்வதில் ஆர்வம், பணம் தருவதில் வேகம், உயர்ந்த பணிகள் ஆற்றுவதில் அவசரம்–இவை இவரிடம் தலைதூக்கி நின்ற அரிய குணங்கள்தாம். இம்மாதிரியான ஒரு சமயத்தில்தான் சம்ஸ்கிருதக் கல்லூரியை இவர் நிறுவினார். ஆயுர்வேத வைத்திய சாலை ஒன்றையும் தொடங்கினார்.

பண்டைச்சாஸ்திரங்கள் மங்கிவிட்டன. பூர்வமீமாம்சை என்ற சாஸ்திரம் இருப்பதே பலருக்குத் தெரியாத நிலையில் ஸம்ஸ்கிருதக்

கல்வி மழுங்கி விட்டதை இவருடைய அண்ணு சுவாமிநாதஐயரும் அவரைப் போலவே தம்பியும் மிகவும் கவலையுடன் கவனித்து வந்தார்கள். 1903-ஆம் ஆண்டில் செங்கல்பட்டு ஜில்லா மகாநாடு ஒன்றில் பிரசங்கம் ஒன்றைக் கிருஷ்ணசாமி ஐயர் செய்ய நேரிட்டது. அதில் சாஸ்திரங்களை மறுபடியும் அவைகளின் பழைய உயர்நிலையில் வைப்பதன் இன்றியமையாமையை வற்புறுத்தினுர். பேசிவிட்டுத் தாமே அதற்கு வழிகளை வகுக்காமல் இருக்க இவருடைய அந்தரங்கம் இடம் கொடுக்க வில்லை.

தமையனுரின் நண்பர் ஒருவர் ஒப்படைத்த மூலதனம் கையில் இருந்தது. அதையும் சேர்த்துக்கொண்டு ஸம்ஸ்கிருத கலாசாலையை அறுபத்தையாயிர ரூபாய் மூலதனத்துடன் நிறுவினுர். நெருங்கிய மித்திரரான ஏ. கிருஷ்ணஸ்வாமி ஐயர் பாதுகாப்பாளராக உடனேயே பணியாற்ற முன்வந்தார். பூர்வ மீமாம்சை, வேதாந்தம், இவை இரண்டும் பாடங்களாக ஆரம்பிக்கப்பட்டன. தரும சாஸ்திரமும், வியாகரணமும் சொல்லிவைக்கப்பட்டன. பட்டப் பரீட்சைக்கானவைகளாக முதல் இரண்டுமே தொடங்கப்பட்டன. இடவசதிக்காக இன்னும் நன்கொடையாக ரூபாய் இருபதினுயிரமும் இவர் கொடுத்து உதவினுர். இவையெல்லாம் 1906-ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் தொடங்கப்பட்டன.

இதுபோலவே ஆயுர்வேதமும் பெரியதொரு சாஸ்திரம். அதனைக் கற்று அதனை உபயோகிக்கத்தகுந்த உயர்தர வைத்தியசாலை ஒன்றையும் உடனுக்குடனே நிறுவுவதில் இவர் முனைந்தார். மூலதனம் ரூபாய் இருபத்தையாயிரமும், இடவசதிகளுக்காகப் பிற்பாடு சில தொகைகளும் இவருக்குச் செலவாயின. ஆயுர்வேதம் என்பது ஒரு வைத்திய முறை என்பதைக்கூட அறியாதவர்களே இன்றும் நம்மிடையே உள்ளனர். தமிழ்வைத்தியம் என்று சிலரால் இழிவாகப் பேசப்படுவது ஆயுர்வேத முறை அல்ல. ஏனெனில் அபூர்வ மூலிகைகளும், சிகிச்சைகளும், வியாதிகளின் ஜாப்தாவும் ஆயுர்வேத நூல்களில் மண்டிக்கிடக்கின்றன. இன்றும் மயிலை வெங்கடரமண வைத்தியசாலையில் விலையில்லாமல் மருந்து வாங்கிச் செல்பவர்களுக்குக் கணக்கேயில்லை. வெங்கடரமண வைத்தியசாலை என்ற பெயரோடு தந்தையின் ஞாபகார்த்தமான தருமம் அது. உடல் சிகிச்சைக்கென வைத்தியசாலையும், மனச்சிகிச்சைக்கென ஸம்ஸ்கிருதக் கல்லூரியும் இவரால் ஏற்பட்டன. காமகோடி பீடாதிபதிகள் 1959-ஆம் ஆண்டில் பிரசங்க மொன்றில் சொன்னதை நினைத்தால், உடலுக்கும், ஆவிக்குமாக இவ்விரு நிலையங்களும் அதனுடன் பொருளுக்காக இந்தியன் பாங்கும் நிறுவப்பட்டதாய்க் கொள்ளலாம்.

செய்வதறிவதும், செய்வதற்கான முறையும் பொருளீட்டும் தாராளமும் சேர்ந்தால் அரும்பெரும் காரியங்களையும் சாதிப்பதில் என்ன தடை? இன்றுள்ளவர்களில் பலர் எத்தனையோ பொதுக்காரியங்களில் தனத்தையும் உழைப்பையும் கொடுப்பதைக் காண்கின்றோம். ஆனால் ஐம்பது அறுபது ஆண்டு களுக்கு முன் இவ்விதம் தரும காரியத்தை நினைத்தவுடன் செய்ய முன் வந்திருப்பதான வரலாறுகளைக் கதைகளில் மட்டுமேதான் வாசித்துள்ளோம்.

மற்றொரு தனிச்சிறப்பு கிருஷ்ணஸ்வாமி ஐயரிடம் உண்டு என்று அவரை நன்கு அறிந்தவர்கள் அடிக்கடி சொல்லுவார்கள். எங்கு புத்தி வன்மையோ செயலாற்றும் திறனோ குணப்பெருக்கோ தென்பட்டாலும் அதன்பால் அவருடைய மனம் சீக்கிரம் சென்றுவிடும். ஸம்ஸ்கிருதக் கல்லூரி சம்பந்தமாகத் தலைமை உபாத்தியார் ஒருவரை நியமிக்கும் பொறுப்பை நிகழ்த்துகையில், காலஞ்சென்ற மகாமகோபாத்தியாய குப்புசுவாமி சாஸ்திரியாரைச் சிறியவயதினராக ஆனால் புலமையில் பெரியவராக இவர் காண நேர்ந்தது. அச்சமயம் சாஸ்திரியார் சட்டக்கலாசாலையில் படித்துவந்தார். ஆயினும் சாஸ்திரங்களில் அருமையான பாண்டித்தியம் அவரிடம் இருந்ததைச் சிலர் கவனித்துக் கிருஷ்ணஸ்வாமி ஐயரிடம் அழைத்து வந்தார்கள். அவருடன் பேசியதில் இவருக்குத் திருப்தி உண்டாகியது. மேலும் தமையனார் சுவாமிநாத ஐயர் தாமே நல்ல சாஸ்திர அறிஞரானதால், முடுக்கான கேள்விகளைச் சாஸ்திரிகளிடம் கேட்டு, விடைகளிருலிந்து அவருடைய படிப்பின் ஆழத்தை மதித்திருந்தார். மறக்காதவிதம் குப்புஸ்வாமி சாஸ்திரகள் பிற்பாடு அடிக்கடி தமக்குக் கிருஷ்ணஸ்வாமி ஐயரால் ஏற்பட்ட நன்மை கொஞ்சமல்ல என்பார். ஏனெனில் அவரைப் பார்த்துக் கிருஷ்ணஸ்வாமி ஐயர் சொன்னாராம், 'சட்டப் பரீட்சை தேறி வக்கீல் தொழில் செய்வதைக் குறைவாக நான் கருதாவிட்டாலும், இவ்வளவு சாஸ்திரங்களின் பயிற்சி வீண்போகாது, உங்களுக்கும் ஆயிரத்தில் ஒருவராயிருந்த பெருமை வேண்டுமானால், சாஸ்திரங்களைப் போதிக்கும் ஆசிரியராக நீங்கள் எங்கள் பாடசாலையில் இருக்க ஒப்புவது உங்களுக்கு நன்மை அளிக்கும். பொதுஜன சேவையும் செய்ததாகும்' என்று. குப்புஸ்வாமி சாஸ்திரிகள் இவருடைய சொல்லைத் தட்டவில்லை. எதிர்பார்த்தவிதமே பிற்காலத்தில் சம்ஸ்கிருத உலகிலேயே தனிச்சிறப்புடன் அவர் விளங்கியதைப் பின் வந்த சந்ததிகள் நினையாதிருக்க முடியாதல்லவா?

கிருஷ்ணசுவாமி ஐயர் சாஸ்திரம் படித்தவர்களை, கலைவிற்பன்னர்களை என்றுமே இதரர்களை விடவும் கௌரவித்தார் என்பதையும் பல நிகழ்ச்சிகளால் நாம் அறிகிறோம்.

இதேவிதம் ஆந்திர ஜாதிய கலாசலா என்ற தேசியப் பள்ளி ஸ்தாபனத்தைப் புதிய முறையில், பலவித பயிற்சிக்கான வசதிகளுடன் கொபள்ளி ஹநுமந்த ராவ் என்றவர் மசூலிப்பட்டணத்தில் தொடங்கினுர். அவர் உழைப்பாளி மட்டும் அல்ல, தேசத்தொண்டில் பூரணப் பிரயாசையுள்ளவர். அவரிடம் சல்லாபம் செய்ததன் விளைவாக அவருடைய பெரிய லட்சியங்களை உணர்ந்த இவர் உடனே இரண்டாயிரம் ரூபாய்க்கான தொகையைத் தந்து, உங்கள் ஆக்கவேலைகளுக்கு இதை இப்பொழுது செலவழித்து விட்டு மறுபடியும் என்னிடம் வந்துகேட்டால் மேலும் தருவேன்' என்ருர். கிருஷ்ணஸ்வாமி ஐயர் மறைந்தபின் ஹநுமந்தராவ் சில ஆண்டுகள் உயிருடன் உழைத்தார். ஆனுல் தாம் கண்டவர்களில் கிருஷ்ணஸ்வாமி ஐயரைப்போன்ற உற்சாகமூட்டும் பிரகிருதிகளைக் காணவில்லை என்றே அழுத்திச் சொல்லுவார்.

சீமை செல்பவர்களில் இளைஞர்களாக உள்ளவர்கள் நன்கொடைகள் விரும்பினுல், அவர்கள் செல்வதின் நோக்கங்களை நன்கு விசாரித்துவிட்டுத் தம்மால் இயன்ற தொகையை அவர்கள் பாதுகாப்புக்காக வலுவில் உதவியவரும் ஆவார் கிருஷ்ணஸ்வாமி ஐயர். எத்தனை எத்தனையோ சூடிகையான மாணுக்கர்களுக்குப் பண உதவி மட்டுமல்லாமல், மேலும் மேலும் உழைப்பதன் பொருட்டு உற்சாகத்தையும் தாரளமாக வழங்கியவர் இவரே என்பார்கள், இவருடையய உதவியைப் பெற்ற பலர்.

VIII. குடும்பத்தின் பொறுப்பு

இங்கிலாந்தில் உயர்ந்த மந்திரி பதவியைப் பலகாலம் தாங்கிய கிளாட்ஸ்டன், தனது தந்தையப்பற்றிப் பேசத்தொடங்கினுல் கண்களில் நீர்மல்கி, அவருடைய தந்தையின் குணங்களைப்புகழ்ந்து மணிக் கணக்கில் சொல்லித் தன்னையே மறப்பார் என்று அவருடைய வாழ்க்கை வரலாறு கூறும். கிருஷ்ணசுவாமி ஐயரும் சரி, அவரைவிட இரண்டே வயசு பெரியவரான சுவாமிநாத ஐயரும் சரி, தங்களைவிட எவ்வளவோ புத்திமான் தங்கள் தந்தையார் என்று பெருமைப் படுவார்கள். உறவினர்களிடம் அதிகம் அன்பு பூண்டவர் வெங்கட் ராம ஐயர். ஆகையால் பிள்ளைகளும் குல ஒழுக்கத்தைச் சிறிதும் மீறிநடந்தவர்கள் அல்ல.

இவர்கள் இருவரும் தமக்குள் அன்பைப் பரிமாறிக்கொள்ளும் வகையும் விநோதமாக இருக்கும். இருவரும் பொறுமையுள்ளவர்கள் என்பதற்கில்லை. அக்காரணமே இருவருக்குள்ளேயும் அபிப்பிராயங் களில் வேற்றுமை வந்துவிடும். பிற்பாடு தங்கள் கருத்துக்களைச் சொல்வதில் சங்கோசம் துளியுமின்றி அவர்கள் தெரிவித்துக்கொள் வார்கள். இவர்களைப் பார்ப்பவர்கள் அஞ்சிவிடலாம் சிலசமயம். இவர்கள் சண்டையிட்டுக்கொள்வதுபோல் தோன்றும். உண்மையில் சுயமதிப்பில் ஏறியவர்களே இருவரும். அதற்காகத் தங்கள் நெறியை மறக்கவோ கடமைகளைக்கை விடவோ துணியார்கள்.

அண்ணனுக்கு உடல் நிலை போதாது. அவருடைய குடும்பம் பெரிது. உத்தியோகத்திலும் பெரும் வருவாயைக் கொண்டுவர வழியில்லை. முன்சீப்பாயும், பிற்பாடு சப்–ஜட்ஜாயும் இருந்தவருக்குக் கணக்கில் அடங்கும் சம்பாத்தியமே தேறும். தம்பிக்கோ வக்கீல் தொழிலில் 1898–ஆம் ஆண்டுமுதல் 1909 ஆண்டில் உயர்நீதி மன்றத்தில் நியாயம் செலுத்தும் பதவியை அடையும் வரையில் லக்ஷ்மி தேவியின் கடாட்சம் பெருகியது. தமக்கு ஏற்பட்ட அதிர்ஷ்டம் அண் ணனுக்கு இல்லையே தவிர, தாம்செய்யும் தொழிலையே தொடங் கியவர், நீடித்து மட்டும் உழைத்திருந்தாரானுல் தம்மைவிடவும் பாக் கியசாலி என்ற சொல்லுக்கு இலக்காகி இருப்பார் என்பது கிருஷ்ண ஸ்வாமி ஐயரின் மதிப்பு. தமையினிடம் தமது வேண்டுகோளை மறுக் காத விதம் சிற்சில பணிகளையும் கடமைகளையும் நிறைவேற்றிக் கொண்டார். அவர் குடும்பத்தின் பொறுப்பின் பங்கைத் தாமே மேற்கொண்டார்.

சுவாமிநாத ஐயர், தமக்குத் தம்பியினிடம் உதவி பெறுவதற்கு இஷ்டமில்லை என்பதைக் கடிதங்கள் மூலம் தெளிவுபடுத்திவிட்டார்.

தீரரானதால் துளியும் சஞ்சலமின்றித் தமக்கு தம்பி செய்துள்ள நன்மைகளே போதும், இனித் தேவை இல்லை என்று எடுத்துக் காட்டினர். ராமாயணத்தில் ராமனும், பரதனும் ராஜ்யத்தை மாறி மாறி ஒருவருக்கொருவர் வழங்கி அங்கீகரிக்க ஊக்கும் கட்டம் வாசிக்க வாசிக்க மனத்தைக் கிளறும் இலக்கியமாக உள்ளது. சித்திர கூட மலையில் சகோதரர்களிடையே நடந்த சம்பாஷணைகளைக் கேட்ட முனிவர்கள் மூக்கின்மேல் விரலைவைத்து, 'இதுவல்லவா சகோதரர் கள் காட்டவேண்டிய வழி' என்று புகழ்ந்தார்கள். அதேவிதம் இவ் விருவருக்கும் இடையே நிகழ்ந்த கடிதப் போக்கை இன்று வாசிக்கும் மனிதர்கள்கூட, 'சகோதரர்களின் தன்மை இப்படியுமா ?' என்றே வியப்பார்கள்.

இவர் மாற்றுந்தாயிடம் பிறந்தவர்களுக்கும் தமக்கு நியாயம் என்று பட்ட விதங்களில் உதவிகளை வழங்கி அவர்களும் சிரமமின்றி வாழ்வைத் தொடங்கத் தமக்குள்ள பொறுப்பை வெளியிட்டார். சந்திரசூடன், ராமசந்திரன் என்ற இரண்டு சகோதரர்களும் குல வழியே வந்த உயர்சுபாவங்களில் திளைத்ததும் அல்லாமல், தமையன் மார்களிடம் பரத சத்துருக்கனர்களைப் போலவே நடந்துகொண் டார்கள். ராமாயணம் கட்டுக்கதை அல்ல என்பதை உணர்த்தும் குடும்பம்தான் இவர்களுடையது.

சுவாமிநாத ஐயரின் தேக ஆரோக்கியம் வரவரக் குறைந்து வந்ததைத் தம்பியினுல் நிம்மதியுடன் கவனித்துவர இயலவில்லை. மிகவும் கவலைப்பட்டுவிட்டார். ஆனுல், அண்ணன் எழுதினுர் பின் வருமாறு தம்பிக்கு: 'எனக்கு இருக்கும் ஆசைகளையெல்லாம் உன்னிடமே பூர்த்தி செய்துகொள்ள விரும்புவதால், உன் உடம்பும் கெட்டுப் போவதன் மூலம் நம் இருவருடைய உயிர்களையும் ஒழிக்க நீ வழி தேடுகிருய் என்றே எனக்குக் கவலை' என்று. கிருஷ்ணஸ்வாமி ஐயரின் தேகத்தில் நீரிழிவின் குறிகள் தோன்றத் தொடங்கிய ஆரம்ப காலம் அது. தமையனை அச்செய்தி உருக்கிவிட்டது.

காங்கிரஸ் கூட்டம்கூடச் சென்னையில் அவ்வருஷம், அதாவது 1908-இல், ஏற்பாடாகியது. அவ்வித ஏற்பாட்டிற்கு முக்கியத் தூண்டுகோல் கிருஷ்ணஸ்வாமி ஐயரே எனச் சொல்லத் தேவை இல்லை. காங்கிரஸ் சரித்திரத்தில் சென்னைக் காங்கிரஸ் நடைபெற்ற வரலாறு ஒரு முக்கிய நிகழ்ச்சி. மிதவாதிகள் என்று இன்று அலட்சிய மாகக் கூறப்படும் கட்சியினர் அன்றுமட்டும் காங்கிரஸை எப்படியும் தொடர்ந்து நடத்தியிராவிட்டால், மறுபடியும் காங்கிரஸ் உயிருடன் எழ என்னவிதமான புதுப் பிரயாசைகளெல்லாம் வேண்டியிருந் திருக்குமோ ? காந்தி அடிகள் இந்திய நாட்டுக்குத் திரும்புகையில்

காங்கிரஸ் ஸ்தாபனம் ஒன்று இருந்ததால் அல்லவா ஆரம்பநாட்களில் அவருடைய இயக்கம் தென்பும் தீவிரமும் அடைய வசதி இருந்தது. மக்கள் மறக்கக்கூடாத ஓர் அரிய சேவையை மிதவாதிகள் சென்னைக் காங்கிரஸ் கூட்டத்தில் 1908–ஆம் ஆண்டில் நிறைவேற்றியதாக நாட்டுக்கு அளித்தார்கள்; சந்தேகமில்லை.

கிருஷ்ணஸ்வாமி ஐயர் வீட்டில், அருமைத் தமையனார் க்ஷய ரோகப் படுக்கையில் கிடந்தார். அவர் குடும்பமும் இதர உறவினர் களும் சேர்ந்து பெரிய கூட்டம் பங்களாவில் நிறைந்திருந்தது. காங்கிரஸ் டிசம்பர் 27–ஆம் தேதி அன்று தொடங்குவதற்கு ஏற்பாடு கள் செய்தாக வேண்டும். தமையனாரின் உடலோ வேகமாக நோயினால் பிடிக்கப்பட்டு வந்தது. டிசம்பர் 18, 19 தேதிகளில் தமையனாரின் புத்திஞாபகமும் குறையவே, அவர் சந்நியாசம் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று விரும்பினார். அதற்குத் தடை செய்யாமல், வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ததுடன், பொதுச் சேவையில் துளியும் தமது பணம், உழைப்பு, முதலியவைகளைக் குறைக்காமல் பழையபடியே வழங்கிவந்தார் கிருஷ்ணஸ்வாமி ஐயர். ஆயினும் காங்கிரஸ் நெருங்கி வருகையில், வீட்டில் தமைய னாரின் உடல்நிலை கவலைக்கு இடங்கொடுத்து வந்ததில் இவருக்கு மனஆயாசம் சாமான்யமாக இருக்கவில்லை. கடைசியில் சந்நியாச ஆசிரமம் வாங்கிக்கொண்டு, காஷாய உடை அணிந்தபடியே உயிர் நீத்தார் சுவாமிநாத ஐயர். அவருடைய உடலைத் திருவான்மியூர் க்ஷேத்திரத்தில் கடற்கரையின் சமீபம் சமாதி செய்து, பிற்பாடு பிருந்தாவனம் ஒன்றையும் அவ்விடம் நிறுவினார். டிசம்பர் 21–ஆந் தேதியன்று சுவாமிநாத யதிகள் சாயுஜ்யம் அடைந்தார். பிற்பாடு செய்யவேண்டிய கடமைகளில் புகுந்ததால், கிருஷ்ணஸ்வாமி ஐய ருக்குப் பற்றற்ற ஒருநிலையும் பழக்கத்தில் ஏற்படத் தொடங்கியது.

காங்கிரஸ் அவ்வருஷம் டாக்டர் ராஷ்பிகாரி கோஷின் தலைமையில் இனிது நிறைவேறியது. கிருஷ்ணஸ்வாமி ஐயருடன் அக்காலங்களில் பல இளைஞர்கள் ஒத்துழைத்தார்கள். கதை கதையாக அவர்கள் சென்னைத் தலைவரின் செயல் துரிதத்தையும், சமயோசித திட்டங் களையும், சிக்கனம் பாராத மனப்பாங்கையும் அநுபவித்துச் சொல் வார்கள். கிளர்ச்சி ஒன்றும் மூச்சுக் காட்டாதபடி செய்த ஏற்பாட் டினால், பிற்பாடு சிலர் ஒரு மனிதன் நடத்திய காங்கிரஸ் என்று கூட இவரைச் சுட்டிக்காட்டி அந்த வருஷத்திய காங்கிரஸைப் பற்றிக் குறை சொன்னார்கள். வந்தனோபசாரம் கிருஷ்ணஸ்வாமி ஐயருக்கே உரிமையாகியது. எதை மறப்பதாயினும் இவர் அன்று கூறிய பொன்மொழிகளில் ஒன்று இன்றும் வேறு சந்தர்ப்பத்தில்

பொருத்தமான கருத்தாகிறது: "புலியும் தன் குணத்தை ஒருகால் மாற்றிக்கொள்ளும்; ஆனல், அரசாட்சியில் ருசி கண்டவர் தங்கள் குணத்தை ஒருகாலும் மாற்றமாட்டார்கள்." இச்சொற்கள் விசேஷ அர்த்தங்களுடனும், வெவ்வேறு நிலைகளிலும் சிறந்த உவமையாய் இன்றும் பயன்படுவதில் ஆச்சரியம் இல்லை.

காங்கிரஸ் முடிந்ததும் மூன்று மாதங்களுக்குள் நடைபெற்ற நிகழ்ச்சிகளின் வரலாறும், விவரமும் சரியானபடி எழுதப்பட்டு அச்சு வாகனம் ஏறிக் காங்கிரஸ் அங்கத்தினர் அவ்வளவு பேர் கைகளையும் வந்தடைந்தன.

'இம்மாதிரியே இனிவரும் காங்கிரஸ் விவரங்களும் சீக்கிரமே அச்சிடப்பட்டுக் கைக்கு வரவேண்டும் என்று விரும்புகிறேன்' என்று காங்கிரஸ் பணியில் தலை வழுக்கை விழுந்த வாச்சா கடிதம் எழுதினர். அநுபவமும் வயசும் நிரம்பிய அவரிடமிருந்து வந்த வெகு மதி அவமதிக்க இயலாதுதான். கிருஷ்ணஸ்வாமி ஐயர், முக்கிய மாக மக்களுடன் நெருங்கிப் பழக வாய்ப்பு ஏற்பட்டதை மனதாரப் போற்றினர்.

குடும்பம் தமக்குப் பெருகியதையும் சிறுவர்களின் படிப்பு, கலைப் பயிற்சி முதலியவைகளில்கூட தகுந்த அக்கறை எடுக்க நேரமே இல்லாததையும் நினைந்து சிலசமயம் இவர் கவலை அடைவதும் உண்டு. 1896–ஆம் வருஷம் சுப்பலக்ஷ்மியும், 1898–இல் சாவித் திரியும், 1901–இல் சரஸ்வதியும், 1904–இல் சந்திரசேகரன் என்ற கடைசிப் பிள்ளையும் இவருக்கு ஏற்பட்டு, மொத்த ஆறு பிரஜை களுக்குப் பிதாவாகத் தாம் ஆனதை இவர் சிறிது கவலையுடன் கருதாமல் இல்லை. மனைவி வாலாம்பாளும் மிகவும் வைராக்கியம் பெருகிய உள்ளத்துடன் இருந்ததால் எதையும் பற்றிக் குழந்தை களுக்குச் சலுகையோ பட்சபாதங்களோ காட்ட உதவி செய்த வர்கள் அதிகம் இல்லை. மூத்தமகன் பாலசுப்பிரமணியன் பள்ளி யில் சேர்ந்து 'மெட்ரிக்' பரீட்சை தேறிச் சென்னை ராஜதானிக் கலாசாலையில் எப்.ஏ., படிப்பைத் தொடங்கிவிட்டான். பால சுந்தரி, சுப்பலக்ஷ்மி, சாவித்திரி இம் மூவருக்கும் கல்யாணமாகி வீட்டில் மாப்பிள்ளைகளும் வந்து வசிக்கத் தொடங்கினர்கள். இன் னும் சுபமான காரியங்கள் ஆகவேண்டிய சமயம், தமையனரின் மரணம் ஒரு பெரிய வியோகத்தை உண்டாக்கிவிட்டது குடும்பத்தில்.

மனைவி வாலாம்பாளைப் பற்றியும் இங்கே சிறிது சொல்ல வேண்டும். திருவாலங்காட்டு அக்கிரகாரம் முழுவதும் 'அம்மங்கா' என்றே அவளை அழைப்பார்கள் என்று சொல்லியுள்ளோம். பிற்பாடு சென்னையில் வசிக்கும் நாட்களில் அந்தப் பழைய பெயர் மறைந்து

விட்டது. வாலாம்பாள் சிறுமைப்பட்ட நாட்களை ஒரு சமயமும் நினைந்து தனது கணவன் உறவினர்களிடம் வித்தியாசமாய் நடந்துகொள்ள வில்லை. கணவருடைய உறவினர்களைக் கணவர் கவனிப்பதை ஒரு சமயமும் தடைசெய்ததில்லை. மேலும் இவருடைய இஷ்டங்களைப் பூர்த்தி செய்வதில் தன்னை ஈடுபடுத்தவும் மறுக்கவில்லை. தனது சொந்தத் தம்பி தங்கைகளுக்குத் தன்னால் ஆன சிறு உதவிகளைச் செய்தாளே தவிர, கணவருடன் போட்டிபோட்டு ஒன்றையும் தனிப் பட்ட விதத்தில் தனது பிறந்த வீட்டுக்காரர்களுக்காக விரும்பியவள் அல்ல.

மாமனார் உயிருடன் இருந்த காலங்களில் அவருடைய நியமங்கள், பூசைகள், இவைகளுக்காக நைவேத்தியம் முதலியவைகளைத் தயாரிப்பதில் தனது முழுநேரத்தையும் கழித்தவள் ஆனதால், தனக்கென்ற ஆசையை எதிலும் காட்டமாட்டாள். கணவருக்கு மேலும் மேலும் செல்வமும், செல்வாக்கும் விருத்தியானதைக் குறித்து இறுமாப்பையோ, உயர்வின் அறிகுறிகளையோ அவள் பூணவில்லை. உடல்மட்டும் சரியாக இல்லை. ஈரல்நோய் கண்டு தனது நாற்பத்திரண் டாம் ஆண்டை நெருங்குகையில் படுக்கையாய்ப் படுத்துவிட்டாள்.

அவளுக்குப் பார்க்காத வைத்தியம் இல்லை; அவளுடைய நோயை எப்படியும் சிகிச்சையினால் வெருட்ட வேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்ட கிருஷ்ணஸ்வாமி ஐயர், வரவர அவளுடைய தீராத படுக்கையைக் கண்டு கவலைகொண்டார். சிறுவர்களாயுள்ள குடும்பத்தை இனி எப்படிக் காப்பாற்றுவது என்பதே இவருக்கு விசாரம். இவருடைய மூத்தமகள் பாலசுந்தரி எவ்விதத்திலும் தந்தைக்கு ஏற்ற மனவலிவும் காரியங்களைச் சரிவர நடத்தும் ஆற்றலும் பெற்றிருந்ததால் ஒருவாறு தமது தீராத ஏக்கத்தை இவர் மறப்பார்.

சீக்கிரமே மனைவியின் ஆயுள் முடிவும் ஏற்பட்டது. 1909–ஆம் ஆண்டில் செப்டம்பர் 28–ஆம் தேதியன்று அவள் தன் குழந்தை களான குடும்பத்திலுள்ள பெண் பிள்ளைகளைப் பிரிந்து சென்றுவிட் டாள். கணவரின் மனம் பட்டபாட்டை ஒருவரும் அறியமுடியாதபடி இவர் கட்டுப்படுத்திக்கொண்டு மேல் காரியங்களைச் செய்யத் துணிந் தார். 'உங்கள் அம்மா இறந்துவிட்டாள்; போய்ப் பாருங்கள்; படுக் கையை விட்டு எழுந்திருங்கள்' என்று இவர் தமது கடைசிக் குழந்தைகள் மூவரையும் காலையில் 4–30 மணிக்கு எழுப்பியதை நினைக்கையில், மனத்தை இவர் எவ்வளவு அடக்கியிருந்தால் நிதா னம் இழக்காமல் சிறுவர்களிடம் அப்படி மனங்கலங்காது சொல்லி யிருப்பார் என்று ஊகிக்க இயலுகிறது.

மனைவிக்குக் கடைசிக் காலங்களில் பணிவிடை செய்தவர்களுக்குக்கூட மறக்காமல் இவர் சிறு தொகைகளை வழங்கித் தமது நன்றிக் காணிக்கையைச் செலுத்தியதை பிற்காலங்களில் நன்கொடை பெற்ற அவர்களே மனம்விட்டுக் கதறியுள்ளார்கள்.

குடும்பத்தை இனித் தாமே கவனிக்கத்தான் வேண்டும் என்ற எண்ணம் வளரவுமே, இவருடைய தொழில் முறையில் வெளியூர்களுக்கு அடிக்கடி பெரிய வழக்குகளுக்காகப் பயணப்படும் சந்தர்ப்பங்களைக் குறைக்க முயன்றார். ஆனால், இதனிடையில் சென்னைக் கவர்னராக அக்காலத்தில் இருந்த ஸர். ஆர்தர் லாலி என்பவன் இவருடைய வாய்ப் பேச்சின் திறமையையும், யோக்கியதையையும் சட்டசபையில் அறிந்தவனானதால், எப்படியாவது இவரை அரசாங்கப் பதவியில் அமர்த்திவிட வேண்டும் என்று உள்ளூர யோசனை செய்துவந்தான். 1908–ஆம் ஆண்டில் முதல் சட்டமாக அமுலுக்கு வந்த நிலச்சுவான்தார் சட்டத்தில் கிருஷ்ணஸ்வாமி ஐயர், பேசியதைப் பல சட்டசபைப் பிரசங்கங்களுக்குத் தலைமைத் தாங்கி உட்கார்ந்திருந்த லாலி கவனித்தவனே. அக்காரணமாகவே அவன் எப்படியும் இவரைத் தனது அரசாங்கத்தில் ஒரு முக்கிய அதிகாரியாக்க முனைந்தான்.

IX. அரசாங்க ஆதரவும் பதவிகளும்

பொதுஜனங்களுக்காக அரிய சேவையைச் செய்தும், திறமையுடன் சொந்தத்தில் பண உதவிகளைத் தாராளமாய் வழங்கியும் வந்தவர்கள் அக்காலங்களில் அதிகம் இல்லை. அதே காரணமாகக் கிருஷ்ணஸ்வாமி ஐயரின் மனத்தின் உதாரகுணத்தைக் கண்டு சந்தோஷிப்பதில் அரசாங்கமும் பங்கு கொண்டது. நல்ல தருமங்களையும் ஊழியங்களையும் சுயநலமின்றி ஆற்றும் பொறுப்பாளிகளுக்குக் **கேசரி-ஹிந்து தங்கப்பதக்கம்** என்ற ஒன்றை அரசாங்கம் தாங்களாக அளித்துக் கௌரவப்படுத்தி வந்தார்கள். 1908–ஆம் ஆண்டு வருஷப் பிறப்பன்று பதக்கம் கிருஷ்ணஸ்வாமி ஐயருக்கு அளிப்பதைப் பத்திரிகைகள் வெளியிட்டன. கிருஷ்ணஸ்வாமி ஐயரின் இதய பரிசுத்தியைக் காட்ட ஒரு சிறு விவரம் அவசியம் தெரியவேண்டும் நேயர்களுக்கு. பத்திரிகைகளில் தமக்கு வழங்கப்படும் தங்கப் பதக்கத்தைப் பற்றியுள்ள செய்தியை அறிந்ததும் கிருஷ்ணஸ்வாமி ஐயர், கவர்னரின் பிரத்தியேகக் காரியதரிசி **காம்பெல்** என்பவனுக்குப் பின்வருமாறு கடிதமூலம் தெரிவித்துக்கொண்டார்: 'பொதுஜனங்களுக்கு நான் செய்துள்ள சிறு உதவிகளுக்காக இதை (பதக்கத்தை) அரசாங்கம் தங்களது பாராட்டைக் குறிக்கும் சின்னமாக எனக்கு வழங்குவதாய் அறிகிறேன். ஆனால், தருமம் செய்வதற்கு விளம்பரம் அவசியமா என்பது என் கேள்வி. என் வாழ்க்கை விரதத்திற்கு முற்றும் மாறான கொள்கைகூட, இதை நான் அங்கீகரிக்க ஒப்புவது.........என்னை இந்த நெருக்கடியிலிருந்து விடுவிப்பதை நீங்களும் கவர்னரும் தவறாகவே எண்ணக்கூடாதென வேண்டுகிறேன். ஏதோ அவையடக்கம் போலவும் உபசாரச் சொல்லாகவும் என்து வேண்டுகோளைக் கருதாது இருக்க உங்களைப் பிரார்த்திக்கிறேன்.' கடிதம் (2-1-1908)

ஆனால், கவர்னர் தீர்மானித்ததை மாற்றவில்லை. பத்திரிகைகளும் இவருக்குக் கௌரவம் அளித்த அரசாங்கத்தைப் புகழ்ந்தார்கள். 'கல்வித் துறையிலும், தொழில் அபிவிருத்தித் துறையிலும் கிருஷ்ணஸ்வாமி ஐயர் செய்திருக்கும் பொருள் சகாயத்தை நினைத்துத் தான், இப்பதக்கம் அவருக்கு வழங்கப்படுகிறது' என்றே ஒரு முக்கிய ஆங்கிலச் செய்தித்தாள் அந்தச் சம்பவத்தை வாழ்த்தியது.

சமயம் அறிந்து பிறருக்கு உதவுவதும் எல்லோருக்கும் சுலபமான செயல் அல்ல. சிலர் செய்வதைத் தள்ளிப் போட்டுவிட்டு அதனால் ஏற்படும் முழுப் பயனையும் அடைய முடியாமல் செய்துவிடுவார்கள். சிலர் சமயம் அறிந்து கொடுபட வேண்டியவைகளையே புறக்கணித்து

விட்டுத் தங்களுக்கு எந்தக் கொடையைச் செய்வதால் பிரதிப் பிரயோசனம் ஏற்படும் என்றே கணக்கிட்டுத் தருமம் செய்வார்கள். கிருஷ்ணஸ்வாமி ஐயருக்கு முக்கியக் கருத்து, 'பணம் ஒரு பெரும் குறையை நிறைவேற்ற வல்லது. சமயத்தில் பண உதவி ஏற்படாது போவதால் அரிய செயல்களை ஆற்றக் கூடியவர்களுக்கு அச் செயல்களை நிறைவேற்ற வகையின்றித் தவக்கமும் ஏமாற்றமும் உண்டாகின்றன. அதனைத் தவிர்க்கவே மிகுதியாகச் சேரும் பணத்தைத் தருமத்தின் பொருட்டு வழங்குவது. இதுவே பிறருக்குக் காலத்தில் உதவப்பட்டுப் பயனுள்ள தெனப்படும். மற்றவை தனமல்ல; பெட்டிக்கு அலங்காரமான பொருள் மட்டுமே' என்பது இவருடைய முடிவான கருத்து. ஆகவே, ஏதாவது நல்ல காரியம் ஏற்பட்டுப் பணத் தேவையாலே தவக்கம் உண்டாகும் என்று தோன்றினால் இவருடைய பணப்பையைத் திறப்பதற்கே இவர் முன் வருவார். பல உதாரணங்களால் இதனை மெய்ப்பிக்கலாம்.

தாதாபாய் நௌரோஜிப் பெரியார் சீமையில் இருந்துகொண்டே பாரதநாட்டுக்கு அரிய தொண்டு ஆற்றியவர் எனச் சரித்திர வரலாறு கூறும். அவர் **'இந்திய மக்களின் வறுமையும், அதிகாரிகளின் அநீதிமுறையும்'** என்ற தலைப்பில் ஓர் ஆங்கிலப் புத்தகத்தை வெளியிட்டார். அதற்கான செலவை அவரே மேற்கொள்ள இயலாது திண்டாடினார். புத்தகம் மிக இன்றியாமையாத புள்ளிவிவரங்களின் தொகுப்பு என்பது அக்காலத்திய அறிவாளிகளின் மதிப்பு. டின்ஷா வாச்சா நௌரோஜியின் நெருங்கிய நண்பர். அவருடைய ஆக்க வேலைகளில் பங்குகொண்டு உழைத்தவர். சென்னை நண்பருக்கு, ஒரு சமயம், புத்தகம் விலையாகாது பிரதிகள் மீந்து கிடப்பதையும், செலவுத் தொகையைக் கொடுக்க இயலாமல் தாதாபாய் மனம் தவிப்பதையும் தெரிவித்திருந்தார். அவ்வளவே; உடனே கிருஷ்ணஸ்வாமி ஐயர், புத்தகத்தின் ஆயிரம் பிரதிகளைத் தாமே முன்பணம் கொடுத்து வாங்கி அவைகளை நண்பர் ஜி. ஏ. நடேசனிடமே கொடுத்து அவருடைய புத்தகக் கடையில் விற்றுப் பணமாக்கத் தூண்டினார். பண உதவியைச் சமயமறிந்து செய்ததால் பிரதிகளை ஒருவாறு விநியோகம் செய்ய வழி ஏற்பட்டது. தாதாபாய்க்கு ஏற்பட்ட நெருக்கடியும் சிறிது தவிர்க்கப்பட்டது.

இதேவிதமாயுள்ள விவரம் மற்றொன்று ரசமானது: சென்னை மகாஜன சபையில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதாவது, இந்தியக் காங்கிரஸில் உழைக்கும் பார்லிமென்டுக் கமிட்டிக்குச் சென்னையிலிருந்து இளைஞராயுள்ளவரும், பொதுஜன சேவையில் ஈடுபட்டவருமான ஒருவரை அனுப்பி இங்குள்ள விவரங்களை

அப்போதைக்கப்போது அவர்களுக்குத் தெரிவிப்பதெனத் தீர்மானம் சொல்லியது. அவ்வாறு அனுப்பப்பட வேண்டியவர் எம். கிருஷ்ணன் நாயர் என்பவராகவும் தேர்ந்தேடுக்கப்பட்டார். பணம் என்றதும் பின்வாங்கியவர்கள்தாம் அவ்வளவு பேரும். ஆனல், கிருஷ்ண ஸ்வாமி ஐயரைச் சதா குற்றம் சாட்டியவர்களே அடங்கும்படி செய்தது, சமயமறிந்து முந்திக்கொண்டு இவர் வழங்கிய தொகை. கிருஷ்ணன் நாயர் பிற்காலத்தில் சென்னைக் கவர்னர் சபையில் அங்கத்தினராக இருந்தவர். இச்செயலுக்கு நன்றி தெரிவிக்கையில் அவர் எழுதினர்: 'சீமைக்குச் செல்லும் செலவு சம்பந்தமான **யாவற்றையும்** உங்கள் பொறுப்பாக்கிக்கொண்ட உயர்ந்த குணத்தை என்னவென்று சொல்வது!' (கடிதம் 10—6—1905).

'மத்திய ஹிந்து கலாசாலை' என்ற பெயரில் வாராணசியில் அன்னிபெஸண்டு அம்மையாரும், பாபு பகவான்தாஸ் முதலியவர் களும் சேர்ந்து ஒரு கல்லூரியைத் தொடங்கிச் சில ஆண்டுகள் ஆயிருந்தன. ஹிந்து தருமத்தையும், இங்குள்ள அரிய பெரிய பண் பாட்டையும் உய்விக்கும் நோக்கத்துடன் ஆரம்பித்த தேச நன்மைக் கான கல்வி ஸ்தாபனம் அது. அதற்குப் பணம் தேவைப்பட்ட சமயம், மணி ஐயர் முன்நிற்கச் சில நண்பர்கள் சென்னையில் நன்கொடை வசூல் செய்தார்கள். கிருஷ்ணஸ்வாமி ஐயர், அன்னிபெஸண்டு செய்த எண்ணமுடியாத தொண்டுகளைச் சதா பாராட்டுபவர். உடனே அவருக்கு உதவ முன்வந்தார். இவர் இறந்த பிற்பாடும் ஹிந்து சர்வ கலாசாலையாக மாளவியாஜி அதனைப் பெருக்கிய பொழுது, அதற்கு இவர் உதவுவதாக வாக்களித்த பதினையிரம் ரூபாய்த் தொகையைச் சிறிதும் தயக்கமின்றிக் கேட்டவுடன் தந்த சத்புத்திரன் பாலசுப்பிர மணியன் என்று மாளவியாஜி தம் ஆயுட்காலம் வரையில் கிருஷ்ண ஸ்வாமி ஐயரின் மூத்தமகனை மெச்சிக்கொள்வார்.

இன்னும் எத்தனையோ கொடைகளை இவ்விதமே சிறுதும் பெரிதுமாக இவர் வழங்கியது உண்டு. கொடுப்பதிலும் தனதல்ல பொறுப்பு; சம்பத்தைக் கொடுக்கையிலேயே பிறருக்கு உதவும் பொருளாகத் தம்மிடம் படைத்தவன் அதைப் பாதுகாக்க வைத்து விட்டதானதொரு அதிசய மனப்பாங்கை இவர் வளர்த்தார்; செயலிலும் செவ்வையாக அதனை உருவாக்கினர்.

சென்னைக் கவர்னர், நீதிஸ்தலத்தில் எட்டாவதான இடம் ஒன்றை உண்டாக்கி அதிலும் சரியான ஒருவரை நீதிபதியாக நியமனம் செய்வதற்கு யோசனை செய்துவிட்டார். ஜட்ஜ் பதவியில் அமர்ந்திருந்து மிகவும் புகழுடன் விளங்கிய ஸர். எஸ். சுப்பிரமணிய ஐயர், (மணி ஐயர்) 1907-ஆம் ஆண்டில் கண் பார்வையின் கோளாறினல் தமது

இடத்தைவிட்டு ஒதுங்கிக்கொண்டார். மணி ஐயர், நீதிஸ்தலத்தில் இருக்கையில் அறுபது வயசு வரையில்தான் பதவி வகிக்க இயலும் என்ற சட்டம் அமுலில் இல்லே. ஆயினும், அவராகவே நண்பர்கள் தடுத்தும், தமது கண் பார்வை மங்கிய பிறகு நீதிபதியானவன் தரும நெறியைக் கடைப்பிடிப்பதாகச் சொல்வதைத் தம் அந்தரங்கத்திற்கு முரணுனதாய்க் கருதிவிட்டார். அவருடைய இடத்திற்கு ஸர். சி. சங்கரன் நாயரை நியமித்திருந்தார்கள். பாரிஸ்டரான அப்துர் ரஹிம் என்பவரையும் நீதிஸ்தலம் பெற்றது.

நீதிஸ்தலத்தில் வழக்குகளின் அப்பீல்கள் குவிந்துகொண் டிருந்த தால் எட்டாவதான ஒரு நீதிபதியையும் நியமிப்பதற்கு அரசாங்கம் திட்டமிட்டிருந்தது. நல்ல சட்ட அறிவும் பண வருவாயும் உள்ளவர் களின் முன்னணியில், இவரும் நண்பர் சுந்தர ஐயருமே இருந்தனர். உயர்நீதி ஸ்தலத்தில் பின்ஹே என்றொரு துரையை ஜில்லா ஜட்ஜ் பதவியிலிருந்து சிறிதுகாலம் வேலே பார்க்க மேல் உத்தியோகத்தில் அமர்த்தியிருந்தார்கள். அவன் கடுமையான தண்டனைகளைத் தேசீய விடுதலைக்காகப் பணியாற்றியவர்களுக்கு நேர்ந்தபொழுதெல்லாம் கொடுத்துவந்தவன். அவனைக் காயமாய் உயர்நீதி ஸ்தலத்தில் அதிகாரிகள் நிறுத்திவிட்டால், அவனைப் போன்ற நாட்டு விரோதிகளை அரசாங்கம் மெச்சியதாக அல்லவா தோன்றும்? ஆகையால், கிருஷ்ணஸ்வாமி ஐயர், இந்திய தேசத்தின் சுயாட்சி இயக்கத்திற்கு முழுவதும் தமது ஒத்துழைப்பை வழங்கிய **வெட்டர்பர்ன்** என்ற மாஜி உத்தியோகஸ்தனுக்கு எழுதிய கடிதங்களில் ஒன்று: தேச விரோதிகளைப் பற்றிப் புகார் செய்திருந்ததை இங்கு தருவது நன்கு விஷயத்தை விளக்கியதாகும். 'சீக்கிரத்திலேயே, மிஸ்டர் **பின்ஹேயின்** உயர்தர நீதிஸ்தல உத்தியோகத்தைக் காயப்படுத்த அவகாசம் ஏற்படலாம்.........இவர் ஜில்லா ஜட்ஜாக இருக்கையில் திருநெல்வேலியில் சில குற்றவாளிகளைத் தண்டித்த விவரம் மிகவும் அநீதியானது. ஒருவனுக்கு ஆயுட்கால தீவாந்தர சிட்சையும், அவனுடன் கூடிய மற்றவர்களுக்குப் பத்து வருஷ தீவாந்தர சிட்சையும் கொடுத்தார்.........முதல் குற்றவாளியின்மேல் சுமத்தப்பட்ட குற்றம் அரசாங்கம் அனுமதியாத ஒரு கூட்டத்தை அவன் சேர்ப்பதற்கு உதவி யளித்தான் என்பதே. இவ்வளவு சாதாரணக் குற்றத்திற்கு தண்டனை இவ்வளவு கடுமையாக இருப்பது நீதிபதியின் யோக்கியதைக் குறை வையே விளம்பரப்படுத்துகிறது. இவனையல்லவா அரசாங்கம் நிரந் தரமாகப் பெரிய உத்தியோகத்தில் அமர்த்த முனைகிறது? தாங்களும், இன்னும் இந்தியர்களிடம் அநுதாபம் காட்டும் பார்லிமெண்டுக் கமிட்டியும் இதற்கு ஏதாவது வழி செய்யத்தான் வேண்டும். எங்களை

இந்தப் பெரிய ஆபத்து அணுகாவண்ணம் நீங்களும் மற்றவர்களும் சீமையில் சிரமம் எடுத்துக்கொள்வதொன்றே நியாயமாகும்.' (கடிதம், 10—8—1908.)

வேண்டுகோள் வீண் போகவில்லை. மார்லி பிரபுவினிடம் கிருஷ்ணஸ்வாமி ஐயரின் புகாரைத் தெரிவித்து, வெட்டர்பர்ன் ஆக வேண்டியதை நிறைவேற்றிவிட்டார். மிஸ்டர் பின்ஹே பிறகு ஜில்லாவுக்கே திரும்ப அனுப்பப்பெற்முன்.

நாம் இங்கே கவனிக்கவேண்டியவை இக்கடிதத்தை எழுது வதற்கு முதலில் தைரியம் வேண்டும். உயர்நீதி மன்றத்தில் பின்ஹே அச்சமயம் உட்கார்ந்திருந்தான். ஏதாவது தவறிவிட்டிருந்தால், பிற்பாடு அவன் முன்னர்க் கோர்ட்டில் ஆஜராகும் சமயங்களில் வாதாடும் வக்கீலை அவன் இழிவுபடுத்தத் தயாராகவே இருந்திருப் பான். மேலும் சட்ட நிபுணரான ஒருவர் அவசியம் பயமின்றித் தண்டனைகளை மிதமிஞ்சிக் கொடுக்கும் நீதிபதியைத் திருத்த முற்படு வதும் தம் பொறுப்பைச் செய்ததாகும். இவைகளை இவர் தமது பொறுப்பின் ஞாபகத்துடன் செய்ததால் மார்லி பிரபுவுக்கு இவரு டைய பெயர் ஞாபகத்தில் தங்கிவிட்டது.

எட்டாவதான நீதிபதி பதவிக்கு இவர் மேல் கண் ஸர். ஆர்தர் லாலி என்ற கவர்னருக்கு. உத்தியோகங்கள் நிச்சயமாகும் வரையில் தகவல்கள் அவ்வளவும் மிகவும் ரகசியமாக இருப்பது எதிர்பார்க்கக் கூடியது. ஆனல் யாருக்குப் பயம்? தனக்குப் பதவி மோகம் பெரிதாயிருப்பவனுக்கல்லவா? கிருஷ்ணவாமி ஐயருக்கு இவை களில் கவலையே இல்லாததால், உடனே கோகலேக்குத் தமது நிலை யைத் தெரிவித்தார். கோகலே தமது நண்பருக்குப் பதவி உயர் வதை விரும்பிய போதிலும், பொதுஜன சேவையில் நேர்மையுடன் உருவாகிவரும் ஒரு பெரிய ஊழியரை இழக்கவேண்டி வருவதை விரும்பவில்லைதான். சி. ஓ. சிந்தாமணி என்ற தலைவர் என்றுமே கிருஷ்ணஸ்வாமி ஐயரிடம் பிரேமையும் பக்தியும் பூண்டவர். இவரு டைய தலைமையின் கீழ்க் காங்கிரஸ் பிரசாரங்கள் பல தென்னுட்டில் செய்தவர். திடீரென்று தலைவர் அரசியல் இயக்கத்தைவிட்டு விலக நேரிடும் என்ற செய்தியைக் கேட்டதும், இவர் நீங்குவதால் காங் கிரஸ் கட்சிக்குப் பலவீனம் உண்டாகும் என்று அவர் முடிவு கட்டினுர்; எழுதவும் எழுதினுர்.

கிருஷ்ணஸ்வாமி ஐயருக்கும் நீதிபதி பதவியை ஒப்புக்கொள் வதில் முதலில் சந்தேகம் ஏற்பட்டது. காரணம் தம்மை அரசாங்க உத்தியோகத்தில் மோகங்கொண்டவன் என்று பலர் நினைக்கலாம் அல்லவா? ஆனுல் வீட்டின் நிலைமையை நோக்குகையில் தாயில்லாக்

குழந்தைகளை இனித்தாமாகவே கவனிக்கவேண்டியதாய் விட்டபடியால் நீதிபதி பதவியை வகிப்பதால் அலைச்சல் குறைவதுடன் குடும்பத்தைச் சமீபத்தில் இருந்துகொண்டே கண்காணிப்பதற்கான செளகரியம் கிட்டும் என்ற நம்பிக்கையே இவரை வந்தடைந்த லட்சுமியைக் காலால் உதைக்காமல் செய்தது. 'ஹிந்து' பத்திரிகை சிறிது இவ் விஷயத்தில் மனத்தாங்கலை வெளியிட்டது. பொதுவாகத் தேகாரோக்கியப் பரீட்சை செய்ததில் இவருடைய நீரிழிவு தோஷத்தை முதலில் சிறிது விலக்க இயலாத தடையாகக் கருதிய அரசாங்கம், இவரை நியமிப்பதில் அதைத் தடையாக்காமல் செய்துவிட்டது. அதையும் 'ஹிந்து' பத்திரிகை, "மார்லி பிரபு இந்தக் காரியத்தில் அரசாங்க உத்தியோக விதிகளின் கடுமையைத் தளர்த்திக்கொண்டது நியாயமே. இதற்காக இந்தியர்களின் நன்றி மார்லிப் பிரபுவுக்கு உரித்தானது' என்று தலையங்கத்தில் குறித்தது.

நண்பர் சிவஸ்வாமி ஐயர் என்றுமே எதையும் சீர்தூக்கிப் பார்த்து, தகுதிகளையும் இதர தோஷங்களையும் நன்கு எடைபோட்டுக் கூறுவார். அவரும் நண்பருக்கு உண்டான உயர்பதவியைப் பாராட்டியதுடன், 'பழைய காலத்துச் சிநேகிதன் ஆனபடியால் நான் தங்களிடம் சற்று அதிகம் உரிமையுடன் சொல்வது; பொறுமையும் வாயடக்கமும் சிறந்த அளவில் உங்களுக்கு ஏற்பட்டால், உங்களிடம் விரும்புவதற்கான வேறு அம்சங்கள் இருக்கமாட்டா' என்று தெரிவித்தார். கடைசியில் உருக்கமாயும் தமது செய்தியை முடித்தார்: 'ஒரே ஒரு வருத்தம் எனக்கு: உங்கள் மனைவியும், உங்கள் அண்ணுவும் இருந்து இதைப் பார்க்கவில்லையே என்பதுதான்.' (கடிதம் 1-10-1909)

புதிய வேலையை ஒப்புக்கொண்ட உடனேயே இவர் தமது வேலையில் உள்ள தமது ஊக்கத்தைக் காட்டத் தொடங்கினர். குவிந்திருந்த அப்பீல்களை ஒருவாறு குறைக்கும் தொண்டே இவருக்கு முக்கியமாயிற்று. பதினைந்து மாதங்களே இவர் நீதிஸ்தலத்தில் அமர்ந்திருந்தார். அதற்குள் சட்டத் தீர்ப்புகள் பலவற்றை வழங்கியதுடன் நியாயம் தாமதமின்றி நிலைக்கவும் வழிசெய்தார். முத்துஸ்வாமி ஐயர், மணி ஐயர், இவர்களுடன் ஒப்பிடுகையில் இவருடைய தீர்ப்புக்கள் நீண்ட ஆயுசு படைத்ததாக ஏற்படவில்லை எனலாம். ஆனுல் மற்ற நீதிபதிகளுக்குத் துளியும் சளைத்தவரல்ல இவர் என்பதைச் சட்ட நிபுணர்களின் பரம்பரை ஒப்புக்கொள்ளும்.

X. பண்பாடும் ஆன்மிக வேட்கையும்

கிருஷ்ணஸ்வாமி ஐயரின் இதய பரிபாகம் பலருக்கு அக்காலங்களில் கண்டவுடன் தெரியாததால் சில வேளைகளில் இவருடைய வாய்ப் பேச்சின் வேகத்தைக் கண்டு இவரிடம் வாழ்க்கைக்கு வேண்டிய நிதானமும் நிம்மதியும் இருக்கவில்லை என்று நினைத்தார்கள். ஆனால் உண்மையில் இவருடைய நிதானத்தை மிகவும் போற்றியவர்கள் உண்டு. முக்கியமாக நிதானமே அவதாரம் எடுத்த விதமிருந்த இவருடைய உற்ற நண்பர் சிவஸ்வாமி ஐயர் அத்தாட்சி போல் சில குறிப்புக்கள் தந்துள்ளார்: 'வாஸ்தவத்தில் கிருஷ்ணஸ்வாமி ஐயருடைய பதற்றம் நன்றாக வெளியில் புலப்படும்; சுபாவமும் கட்டுக்கு அடங்காததுபோல் தோன்றும்; ஆயினும் தமது படபடப்பை அடக்க முயன்றவர்; அதிலும் வெற்றி கண்டவர். உங்கள் செவிகளில் பீரங்கிகள் ஒலிப்பதுபோன்ற ஓசை கேட்டுக்கொண்டேதான் இருக்கும். ஆனால் அவைகளின் பின் துளியும் அவசரமே தெரியாத புத்தி வேலை செய்வது தெரியும். வெளித்தோற்றத்தில் எவ்வளவு பதற்றத்தோடும் அவசரமாயும் நடப்பவர் போல் பட்டபோதிலும், ஊன்றி நோக்கினவர்களுக்கு நிதானம் தவறாதவர் என்பது நிச்சயமாய் விளங்கும்.' பல ஆண்டுகளுக்குப் பின்பும் மாறாத தமது அபிப்பிராயமாகச் சிவஸ்வாமி ஐயர் நண்பரைப் பற்றிப் பேச ஏற்பட்ட சந்தர்ப்பத்தில் ஒரு தனிக்கூட்டத்தில் சொன்ன வார்த்தைகள் இவை.

இவர் சிறு வயசிலிருந்தே தம்மையும் மீறி மனக்கலக்கமோ ஆவேசமோ கொள்வதை நன்கு கண்காணித்து அதில் தோல்வியடையாது தேறியவர். தகப்பனார் இறந்த காலத்தில் மனத்தை வசப்படுத்தப் பாடுபட்டவர். பிற்பாடு தமையனார் இறக்கையிலும், மனைவி மறையும்பொழுதும் துளியாகிலும் மற்றவர் கண்களில் மனிதத் தன்மையைத் தாம் மறந்திருந்த நிலையில் காணப்படவில்லை. சிலருக்கு இவை அவ்வளவு பாராட்டக் கூடியதாயும் படாமல் இருக்கலாம். ஆனால் இவர் வரையில் தம்மை அடக்கிக்கொண்டதில் மனவமைதி பெற்றார்.

என்றுமே பண்புகள் நிறைந்தவர்களிடம் தியாக உணர்ச்சி மேலிடுவதால், தனக்கென ஒன்றையும் விரும்பாதவர்களிடம் இவருக்கு அலாதி அன்பும் கௌரவமும் ஏற்பட்டது உண்டு. சந்நியாசிகளைக் கண்டதும் அவர்கள் நிலையில் தனியானதொரு மதிப்பு இவரிடம் சுபாவமாகக் கிளம்பியதிலும் ஆச்சரியமில்லை. சுவாமி விவேகானந்தரைப் போன்ற மேதைகள் சர்வத்தையும் துறந்த

நிலையில் தேச முழுவதும் கால்நடையாகச் சுற்றி, ஆன்மிக மார்க்கத்தைப் பிறர் உள்ளங்களில் தெளியும்படி பிரசங்கங்கள் செய்து தாமும் நடத்திக் காட்டியதை இவருடைய ஆவியும் உள்ளமும் எவ்வளவோ உணர்ச்சியுடன் வழிபட்டன. சென்னைக்கு 1897–ஆம் ஆண்டில், சுவாமிகள் அமெரிக்காவில் சிம்ம கர்ஜனை செய்து திரும்பியபொழுது, முன்நின்று அவருக்கு உபசாரங்களைச் செய்தவர்களில் இவரும் முக்கியமானவர்.

சுவாமிகள் பல அரிய சொற்பொழிவுகளை ஆற்றியபின், தமது பிரசாரத்தின் பொருட்டுச் சென்னையில் ஒரு பிரசார ஸ்தாபனமான மடத்தை நிறுவுவதற்கும் சிஷ்யர்களிடம் ஒப்படைக்கவும் முயன்றார். அக்காரியத்தில் தாமும் புகுந்துவிட்டார் கிருஷ்ணஸ்வாமி ஐயர். ராமகிருஷ்ண மடத்தைச் சீக்கிரம் நிறுவும் பொறுப்பை மற்ற அரிய நண்பர்களான ராமு (ராமஸ்வாமி ஐயங்காரும்), ராமாநுஜாச்சாரியார் போன்றவர்கள் பின்னால் ஏற்றுக்கொண்டு அதிசயப் பணிகளை ஆற்றியபோதிலும் ஆரம்பத்தில் இவருடைய தூண்டுதலில் ஒத்துழைத்தவர்களில் பலர் இவருடைய உற்சாகத்தையே பயன் படுத்திக் கொண்டார்கள்.

மற்றொரு சுவாமிகள் சென்னைக்கு அமெரிக்காவிலிருந்து வந்து சேர்ந்தார். பாபா பிரேமாநந்த பாரதி என்பது அவருடைய திருநாமம். அவர் அமெரிக்காவில் ஹிந்து மதத்திற்கு நல்ல பிரசாரம் செய்தவர். லாஸ் அன்ஜிலஸ் என்னும் இடத்தில் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவுக்கு ஒரு கோவிலும் கட்ட முனைந்து, பிறந்த நாடு திரும்பி, அதன் செலவு தொகைக்காகப் பிச்சை எடுக்கச் சென்னைக்கு வந்தார். சுவாமிகள் நல்ல ஆஜாநுபாகுவாகத் தோற்றமளிப்பார். ராமகிருஷ்ண மடத்தைச் சார்ந்தவர் அல்ல அவர். ஆயினும் தனி முயற்சியில் எங்கோ கண்காணாத தேசத்தில் சில சீடர்களையும் தம்கூடத் தயார் செய்துகொண்டு ஹிந்து தருமத்தைப் பிரசாரம் செய்த அவருடைய பணியைப் புகழாதிருக்க வகை இல்லை.

சென்னையில் கிருஷ்ணஸ்வாமி ஐயரை அவர் நேரில் காணவும், இவ்விருவருக்கும் நீண்ட நட்பின் தொடக்கம் ஏற்பட்டது. படித்தவர் பிரேமாநந்த பாரதி. ஆங்கிலத்திலும் அழகாக எழுதுவார்; சொற்பொழிவுகளும் ஆற்றுவார். சுவையுடன் பஜனை செய்வார். மெய்ம்மறந்து ஆடிப்பாடிக் கடவுளைச் சரண்புகுவார். உண்மையில் அவரிடம் ஏற்பட்ட நட்பு, கிருஷ்ணஸ்வாமி ஐயரிடம் தனியானதொரு சாந்தியை விளைவித்தது. சுவாமிகள் ஒரு தடவை சென்னை நண்பருக்கு எழுதிய கடிதத்தில் பின்வரும் வரிகள் மறக்கவொண்ணாதவை தாம்:

"உன்னைப் பார்க்கவே என் மனம் ஆசைப்படுகிறது, உன் களங்கமற்ற உண்மையான பார்வையை என் கண்கள் நாடுகின்றன. உன் இதய ஆழத்திலிருந்து கிளம்பும் சொற்களைக் கேட்க என் நெஞ்சு விஞ்சுகிறது.' (கடிதம் 17-1-1910)

1910-ஆம் வருஷமும் பாபா பிரேமாநந்தர் சென்னைக்கு வந்து நண்பருடைய பிட்சையை அங்கீகரித்தார். சிவஸ்வாமி ஐயர் தலைமை தாங்கிய ஒரு பெருங்கூட்டம் விக்டோரியா பப்ளிக் ஹாலில் குழுமியது. சிவஸ்வாமி ஐயர் தமது பிரசங்கத்தில் குறித்த விவரங்களில் ஒன்று, ஸ்வாமிகளுக்கு ஐயாயிரத்துக்குக் குறைவில்லாத சிஷ்யகோடிகள் அமெக்காசேத்தில் மட்டும் இருந்ததாகக் கொடுத்த செய்தியே. கிருஷ்ணஸ்வாமி ஐயர் சுபாவத்தில் நம்பிக்கையைப் பிறரிடம் வைக்கும் தோரணை நினைக்கவேண்டிய ஒரு விசேஷம். ஏனெனில் அவருடைய பாராட்டலுக்குப் பாத்திரமானபின் யாரும் தங்கள் உற்சாகத்தில் குறைந்ததில்லை. சுவாமிகளும் 1911-ஆம் ஆண்டில் தெரிவித்தார்: 'நீ அன்று விடை அளிக்கும் சொற்பொழிவில் கூறியபடியே கிருஷ்ணன் கோயில் நிச்சயம் லாஸ் ஆஞ்செலஸில் எழும்பிவிடும்' என்று.

XI. பொதுப்பணியில் பலவிதச் செயல்கள்

மயிலை வாசிகளில், உத்தியோகம் பெற்றவர்கள், வியாபாரிகள் முதலிய அங்கத்தினர்கள் கொண்ட **'கிளப்'** ஒன்றை 1903-ஆம் ஆண்டில் தொடங்கியதற்கு முக்கிய காரணம் கிருஷ்ணஸ்வாமி ஐயரே. இவர் **காஸ்மாபாலிடன்** கிளப்பில் சேர முயன்று, இவருக்கு அங்கே சேருவதற்குத் தடைகள் உண்டாயின. மானியானதால், உடனே மயிலையிலேயே தாமும், இதர செல்வாக்குள்ள பொறுக்கிய சில நண்பர்களும் கூடி, தமக்கு இல்லம் கட்டுவதற்காக நூருண்டுக் குத்தகைச் சீட்டின்பேரில் கபாலீச்வரன் தேவஸ்தானத்தினின்றும் பெற்றிருந்த நிலத்தைக் கிளப் கட்டடத்திற்காக உபயோகப்படுத்தினர். கிளப் ஏற்படுத்துவதற்காகச் சரி பங்குகள் உள்ள ஐந்தாறு நபர்களின் கூட்டுறவின் பொறுப்பில் நிலத்தைச் சொந்தமாக்கிக் கொண்டு பிற்பாடு கிளப்புக்கான முன் சடங்குகளையும் செய்து நிறுவினர்.

தென்னாட்டு அமரகவியாக இன்று புகழுடன் கருதப்படும் சுப்பிரமணிய பாரதியார் முதல் முதலில் அரசியல் கட்சியில் எதிர்ப் பக்கம் இருந்தவராயினும், இவருடைய உதார குணத்தை அநுபவித் தவர்களில் ஒருவரானர். 'இந்தியா' என்ற தமிழ்ப் பத்திரிகையில் காரசாரமாகப் பாரதியார் அரசியல் சம்பந்தமான கட்டுரைகள் எழுதி வந்திருந்தார். தீவிரவாதத்தில் மிகவும் மனத்தைப் பறிகொடுத்தவர் பாரதியார். காங்கிரஸின் சூரத் பிளவின்போது முக்கியமாகத் திலகர் கட்சியின் நியாயத்தைப் பூர்ணமாக அவர் ஆமோதித்தவர்.

பல காரணங்களால் கிருஷ்ணஸ்வாமி ஐயரும் பாரதியாரும், ஒருவரை ஒருவர் நேரில் சந்திக்காமலேயே மனக்கசப்புடன் ஒருவரை ஒருவர் தாக்கிக்கொண் டிருந்தார்கள். பாரதியாருக்கு ஜி. ஏ. நடேசன் அறிமுகமானவர். ஒருசமயம் பாரதியாரின் தமிழ்த் தேசியப் பாட்டுக்களைப் பிரசுரிப்பதற்கு வேண்டிய பணத்தொகை கையில் இல்லாமல் அவர் சிறிது மனத்தாங்கல் அடைந்திருந்தார். அச்சமயம் நடேசன் அவரிடம் கிருஷ்ணஸ்வாமி ஐயரின் தமிழபி மானத்தையும் தயாளகுணத்தையும் வருணித்து, தாமே பாரதியாரை நேரில் கிருஷ்ணஸ்வாமி ஐயரைக் காணும் சந்தர்ப்பத்தை உண்டாக்கு வதாகவும் கூறினர். பள்ளிகளில் ஆண் பெண் குழந்தைகளுக்கு அழகான தேசியத் தமிழ்ப் பாட்டுக்களைக் கற்றுவைக்க வேண்டு மென்று கிருஷ்ணஸ்வாமி ஐயர் ஒரு நாள் சொல்லுகையில், நடேசன் அதற்கு உதவக்கூடிய ஒரு தமிழ்ப் புலவரைத் தாம் அழைத்து வருவதாக வாக்களித்தார். பாரதியார் எளிதில் இவரைப் பேட்டி காண

ஒப்பவில்லை. தம்மை இன்னுர் என்றே அறிமுகப்படுத்தக்கூடாது என்று நண்பரிடம் உறுதி வாக்கைப் பெற்ருர்.

இருவருமாக 'ஆச்சிரமம்' பங்களாவைச் சாயந்திர வேளையில் அடைந்தார்கள். கிருஷ்ணஸ்வாமி ஐயர் கோர்ட்டு அலுவல்களினின் றும் விடுதலையடைந்து நண்பர்களுடன் அளவளாவும் சமயமும் சாயங்கால வேளைகள்தாம். நடேசன் அழைத்து வந்தவரைத் தெரிந்துகொள்வதன்முன் அவருடைய தேசீய கீதங்களில் சிலவற் றைப் பாடக் கேட்டார் கிருஷ்ணஸ்வாமி ஐயர். **'வந்தேமாதரம் என்போம்'** என்ற பாட்டைத் தாயுமானவரின் ஆனந்தக்களிப்பு மெட்டில் பாரதி யார் பரவசமாகப் பாடக் கேட்டு ஐயர் விம்மிதமடைந்தார். பிறகு **'எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இருந்ததும் இந்நாடே'** என்ற பாட்டை அநுபவித்தார். அதன்பின் பூபாள ராகத்தில் **'மன்னும் இமயமலை எங்கள் மலையே'** என்றதையும் தாகமெடுத்தவரைப்போல் பருகினுர். உணர்ச்சி மேலிட்டதால் பாரதியாரை வாழ்த்தினுர்; அவர் பாடிய மூன்று பாட்டுக் களையும் தாமே அச்சிட்டு வழங்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். மேலும் பாரதியாரை நன்கொடைகளால் கௌரவித்தார். 'இவ்வளவு உண்மைத் தேச பக்தியுள்ளவரா நீங்கள்? நான் தவறிழைத்து விட்டேனே உங்களை அறியாததால்' என்ருர். உயர்வைத் தேடிக் கண்டுபிடிப்பதிலும் தனி ஆர்வம். அதனை வெளியிடும் விதமும் தனி முறையில்தான் இவரிடம். பாரதியார் தாம் யார் என்பதை முதலில் சொல்லாமல் கடைசியில் தெரிவித்துத் தமது சுயமதிப்பை நிறைவேற்றிக்கொண்டார். அன்று பாரதியின் நூல்களில் முதல் மூன்று அச்சு வாகனம் ஏறித் தனிப்பட்ட முறையில் பலர் கைகளுக் குப் போய்ச் சேர்ந்தன. இவையெல்லாம் நடைபெற்ற ஆண்டு 1907.

XII. தரும ரட்சணை

இன்றுள்ள நிலைமையைவிட ஓர் ஐம்பது ஆண்டுகளுக்கு முன், மாறுதல்களின் வேகம் சற்றுக் குறைவென்றே கூறலாம். ஆங்கிலம் பயின்றவர்களின் நோக்கம் வேறு வழிகளில் பூரிப்பைப் பெற்றதே யன்றி, சொந்த நாட்டின் பண்பாட்டிலும் சொந்தச் சமூகத்தின் உயர் விலும் அவர்கள் அவ்வளவாகச் சிரத்தையைக் காட்டவில்லை. திறமையுடன் ஆங்கிலக் கல்வியைப் பெற்ற சிலர் மட்டும், புதிய நாகரிகத்தில் மோகம் ஏற்படாமல் தங்களையும் தங்கள் தேசப் பண்பாட்டையும் காப்பாற்றிக்கொண்டார்கள். பிறர் கண்களையும் அகலவிரிக்கச் செய்வதில் தங்கள் பொறுப்பை உணர்ந்தார்கள். சுவாமி விவேகானந்தர் ஒருவர் மட்டுமே நம்முடைய பழைமை யிலுள்ள அற்புத வளர்ச்சிச் சின்னங்களை இழக்காது தேசம் முன்னேற எவ்வளவோ அருமையான உபதேசங்களை வழங்கினர்.

ஹிந்து மதத்தின் தனிச்சிறப்பை உணராதுதான் சிலர் மதப் பற்றின் விரயத்திற்கு வழி வகுத்தார்கள். கோவில்கள், புராதன மடங்கள், இவைகளின் கண்காணிப்புச் சீர்குலையத் தொடங்கியது. தரும நிர்வாகம் செய்தவர்கள், ஊக்கக் குறைவையே வழிபட்டனர். சில இடங்களில் தரும சொத்து, சொந்தச் சொத்தாகியும், சில சமயம் உருமாறியும் சிதறியது. கோர்ட்டு நடவடிக்கைகளில் இறங்கிப் பல பொதுத் தரும நிலையங்கள் வருவாய்க்குமேல் செலவு அதிகரித்து மடிந்தன. தீராத சண்டையும் புகாரும் மலிந்தனவே அன்றி, கடவுள் வழிபாடு செழிக்கவில்லை.

1863–ஆம் வருஷத்திய தரும சொத்துக்களைப் பரிபாலிக்கும் சட்டம் அமுலிலிருந்து வந்தது என்னவோ உண்மை. சிற்சில தேவஸ்தானங்களின் பக்கம் வக்கீல் தொழிலில் தாம் கட்சியாடியதன் மூலம் வரவரத் தருமங்கள் க்ஷீணமாகி வரும் நிலைமையை இவர் நன்கு அறிந்திருந்தார். இவருடைய தமையனும் நீதிபதி பதவியில் பல ஜில்லாக்களில் தேவாலயங்களுக்கும், மொத்தத்தில் தரும நிலையங்களுக்கும் உண்டான நெருக்கடிகளை நன்கு உணர்ந்திருந்தார். இருவரும் தரும நெறியைக் கடைப்பிடித்தவர்களானமையால் கிளர்ச்சியின் மூலம் எதையாவது சாதிப்பதில் துணிந்தார்கள். மணி ஐயர்தாம் இவர்களுக்கு அக்காலங்களில் நிழல்தரும் மரமாயிருந்தவர்; அக்காலங்களில் சிருங்ககிரி மடத்தின் பீடத்தில் பிரகாசமாக அமர்ந் திருந்த நரசிம்மபாரதி என்ற பெரியாரிடம் சில குறிப்புகளை அனுப்பித் தரும நெறியின் குறைவை விலக்க மடம் செய்யவேண்டிய சில காரியங்களை ஞாபகப்படுத்தினர்கள். ஸ்ரீ முகம் ஒன்று அவ்விட

மிருந்து கிருஷ்ணஸ்வாமி ஐயருக்கு வந்தது.

'நீங்களும் உங்கள் தமையனுன சுவாமிநாதனும் காட்டும் சமயப்பற்றும் மதாபிமானமும் போற்றத்தக்க முறையில் உள்ளன என ஜகத்குரு அவர்கள் மகிழ்கிருர். இங்கு நடைபெறும் ஹிந்துமத சம்பந்தமான சபையின் ஆரம்ப விழாவுக்கு உங்களை வரும்படி கூறுகிருர்.' (கடிதம் 16-1-1903)

அதனை யொட்டி மணி ஐயர் யோசனையின்பேரில் சில நண்பர் கூடி ஆஸ்திகத்தை வளர்ப்பதன் உத்தேசத்துடன் திட்டங்களை வகுத்து உதவும் பொறுப்பை ஒரு குழுவினிடம் ஒப்படைக்க முற்பட்டனர். 'இந்துமதசபை' என அதற்குப் பெயரிட்டு அன்று தொடங்கினுர்கள். மஞூர் ரங்காச்சாரியார் அச்சமயம் ராஜதானிக் கல்லூரியில் சம்ஸ்கிருத பாடத்தைக் கற்பிப்பவராக உத்தியோகம் பார்த்து வந்தார். நல்ல வாக்குவன்மையுள்ளவர். அவர் பேசினுல் பலரும் பரமானந்தமடைவர் என்பது அக்காலங்களில் உலவிய செய்தி. ரங்காச்சாரியாரே முதல் சபையின் பெருங்கூட்டத்தில் தலைமைப் பிரசங்கம் செய்தார் என்று அறியப்படுகிறது.

தொடர்ந்து **தரும ரட்சண சபை** என்று ஒன்றையும் ஆரம்பித்தனர், கிருஷ்ணஸ்வாமி ஐயரும் அவருடன் ஒத்துழைத்த நண்பர்களும். ஆலயங்களில் பூஜைக்கான கட்டளைகள் பல அவ்வப் பொழுது தரும சிந்தனையுள்ளவர்களால் நிறுவப்பட்டு நீண்டகாலமாகச் செய்வகையின்றி மறைந்து வந்தன என்பதைப் பலர் அறிவார்கள். சத்திரங்கள், மடங்கள், பாடசாலைகள், பஜனைக் கூடங்கள் இவை அனைத்தும் ஆஸ்திக தருமத்தை வளரச்செய்யும் பணியில் ஈடுபட்டு வந்தன. ஆங்கில அரசாட்சி நேரில் ஹிந்துமதத்தை நிராகரிக்காவிடினும், இம்மாதிரியுள்ள தொன்மைத் தாபனங்களைக் கவனியாமல் இருந்துவிட்டது.

சில புதிய திட்டங்களை வகுத்துக்கொண்டு தருமப் பாதுகாப்புகளை ஏற்படுத்தும் முயற்சியில் முக்கியமாகத் தரும ரட்சண சபை இறங்கியது. கோவில்களில் இறை வணக்கத்தின்போது மனத்தை நிலைக்கச் செய்வதன் பொருட்டுச் சிலர் உபநிஷத் வாக்கியங்கள் கொண்ட தொகுப்பை அச்சிட்டு வெளியிட உதவினுர்கள். 'ஆரியத் தோத்திரப்பாடல்' என்ற தலைப்பில் இந்தச் சிறு நூல் தொகுப்பு வெளியாகியது. உடனுக்குடனே எதையும் தாமதமின்றி அமுலுக்குக் கொண்டுவரும் ஆற்றல் படைத்தவரானமையால், கிருஷ்ணஸ்வாமி ஐயர் அச்சிறு தொகுப்பைத் தமிழ்நாட்டுத் தேவாலயங்களுக்கெல்லாம் இனமாக வழங்கிக் கடிதம் ஒன்றையும் தமது வேண்டுகோளைத் தாங்கி அனுப்பினுர். கடிதம் சென்றதுடன் சில

இடங்களைத் தவிர எல்லோரும் அந்தத் தோத்திரத் தொகுப்பை உபயோகிததார்களா என்ற விவரம் நமக்குத் தெரியவில்லை. மேலும் கோயில்களில் தொன்று தொட்டுவந்த பழக்கங்கள் சீக்கிரம் மாறுவதை எதிர்பார்ப்பதும் சரியல்ல.

மற்றொரு செய்தி இன்று நமக்கு மிகவும் வணங்கத்தகுந்த காமகோடி பீடாதிபதிகளைப்பற்றியது. 1907–1908–ஆம் ஆண்டுகளில் சுவாமிகள் மிகச் சிறுவராக இருந்தார். ஆதீனத்தில் லௌகிக நிர்வாகத்தைக் கவனிக்கக் காரியஸ்தன் ஒருவனை நியமித்திருந்தார்கள். அவன் நிர்வாகம் அவ்வளவு உவந்ததாகப் பலருக்குக் தோன்றவில்லை. ஏனெனில் மடத்துச் சொத்துக்களைப் பரிபாலிக்கத் தகுந்த திறமை அவனுக்கு இல்லை. ஆகையால் மைனரான பீடாதிபதிகளுக்குச் சட்டரீதியாக வார்ட்ஸ் ஆக் (Wards Act)டின் கீழ் அவருடைய உடைமைகளைக் கண்காணிப்புச் செய்வதற்கு சிலர் சேர்ந்து அரசாங்கத்திற்கு மனுப் போட்டார்கள். கிருஷ்ணஸ்வாமி ஐயரிடம் தெரிவித்தார்கள். ஏற்கனவே இவர் அத்வைத சபைக்கெனப் பண்டிதர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி அச்சமயம் கும்பகோணம் சென்று சில அருமையான வார்த்தைகளைச் சொல்லியிருந்தார். முக்கியமாக மகாமகோபாத்தியாய கணபதி சாஸ்திரிகள் என்ற சாஸ்திர விற்பன்னர் இவரை மிகவும் வருந்தி அழைத்திருந்தார். சகலராலும் போற்றப்பட்ட சுந்தரராமையர் என்ற பேராசிரியரும் அத்வைத சபையின் தூண்களில் ஒருவராக விளங்கிய காலம் அது. கிருஷ்ணஸ்வாமி ஐயரின் முதுமொழிகளைக் கேட்டபின் சுந்தரராமையர் தமக்குச் சுபாவமான உணர்ச்சிப் பெருக்குடன் பின்வருமாறு தெரிவித்துக்கொண்டார்: 'எல்லாவிதப் பொருத்தங்களுடன் கூடிய ஒருவரைந் தெய்வத் தன்மை வாய்ந்தவரெனக் கருதவேண்டுமாயின், அவ்விதம் இருப்பவர் தாங்களே. காலம், இடம், ஏவல் இவைகளுக்கு உகந்த விதம் பாடுபடக்கூடிய மனம் தங்களுடையது.' இவ்வாறெல்லாம் ஆசிரியர் இவரை உண்மை விசுவாசத்துடன் போற்றினர். (கடிதம் 6–9–1908)

காமகோடி பீடாதிபதிகளைப் பள்ளியில் கல்விபயிலும் சமயம் கிருஷ்ணஸ்வாமி ஐயர் ஒருதடவை நேரில் பார்த்தது உண்டு. இளமை மாறுத அந்த வதனத்தின் வசீகரத்தை நினைந்து அவருடைய மடத்தின் மேற்பார்வையில் யாதொரு தவறும் நடவாதபடி ஏற்பாடு செய்ய வேண்டுமென நிதானித்துக்கொண்டு, இவர் சென்னைக் கவர்னருக்கு நேரில் தாமே ஒரு விண்ணப்பக் கடிதம் எழுதினர். அதிலுள்ள சாரமான சில வாக்கியங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

'கும்பகோணம்ஸ்ரீ சங்கராச்சாரியாரின் இளமைப் பருவத்தினுல்

அவருடைய காரியங்களை நிர்வகிக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதைக் கவனர் அவர்கள் கவனிக்கவேண்டும் என்பது எனது தாழ்மையான விண்ணப்பம்.......1902–ஆம் ஆண்டு அமலுக்கு வந்துள்ள சட்டத்தின் கீழ்ப் பகுதி 2–ஆவதின் அடியில் மடத்துச் சொத்துக்களைப் பரிபாலிக்க அதிகாரம் அரசாங்கத்திற்கு உண்டு.......வயசாகாத பீடாதிபதிகளின் படிப்பிற்கும் இதர காரியங்களுக்கும் வேண்டிய பாதுகாப்பும் அவசியம். ஏற்கனவே ஒரு பொதுஜன மனு அரசாங்கத்தாரிடம் இது சம்பந்தமாகச் சமர்ப்பிக்கப் பட்டுள்ளது. அவசியம் கவர்னருடைய மனம் தடையின்றி இவ் விஷயத்தில் செல்லவேண்டும் என்பது எனது வேண்கோள்.' இக் கடிதம் 1909–ஆம் ஆண்டு மே மாதம் ஏழாம் தேதியில் எழுதப் பட்டது. பிற்பாடு இருபத்தொரு வயசு முடியும் வரையில் மைனர்களின் சம்ரக்ஷணைக்கான சட்டத்தின் பார்வையில் சுவாமி களின் மடத்து நிர்வாகம் இருந்ததாக அறியப்படுகிறது.

ஒழுக்கத்திற்கும் மதப்பற்றிற்கும் பரிசுகள் வழங்கும் நியாயத்தைத் தாம் சென்ற பல பள்ளிப் பொதுக்கூட்டங்களில் கிருஷ்ணஸ்வாமி ஐயர் உணர்த்தியுள்ளார். சிறுபையன்கள், பெண்கள் இவர்களுக்காகத் தனிமுறையில் தயாரிக்கப்பட்ட 'தாய்நாட்டுக் குழந்தைகள் (Children of the Motherland)' என்ற புத்தகத்தைத் தாமே விலைக்கு வாங்கி அநேக பள்ளிமாணவர்களுக்கு வழங்கினர். அப்புத்தகத்தின் முதல் பாகம் இந்நாட்டுப் பெருமக்களைப் பற்றியது. பாபு பகவான்தாஸ் என்பவர் ஆங்கிலத்தில் சிறுகச் சிறுகச் சில வரிகளில் தந்துள்ளார். இரண்டாம் பாகம் இந்நாட்டுப் பெண்ணரசிகளைப் பற்றியது, அன்னிபெஸன்ட் அம்மையார் அழகான மொழியில் மனத்தை அள்ளும்விதம் அவைகளைச் சித்திரித்துள்ளார். கல்வி போதனை ஆரம்பமாகும் காலங்களில் தெய்வ வழிபாட்டின் நன்மையை இவரைப்போல் உணர்ந்தவர்களே வேறு அக்காலங்களில் இல்லை எனலாம்.

XIII சட்டசபையும் : கவர்னர் நிர்வாக சபையும்

சிவஸ்வாமிஐயர் 1907-ஆம் ஆண்டு அக்டோபர் வரையில் சென்னைச் சட்டசபையில் சர்வகலாசாலைப் பட்டதாரிகளின் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு அவ்விடம் சட்டங்களை விதிப்பதில் பங்கு கொண்டுவந்தார். அவருக்கு அட்வகேட் ஜெனரல் பதவியை அரசாங்கம் கொடுத்தவுடன் தமது சட்டசபை இடத்தை அவர் காலிசெய்தாகவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டது.

அவ்விடத்திற்குக் கிருஷ்ணஸ்வாமி ஐயர் நின்று தேர்தலில் வெற்றியும் பெற்றார். சட்டசபைக்கு அக்கிராசனம் வகிப்பவர் அக்காலங்களில் கவர்னரே. சர் ஆர்தர் லாலி நல்ல பேச்சுச் சுவையை அறிந்தவர். இவருடைய சொற்பொழிவுகளைக் கேட்டுக் கேட்டு மிக மிகப் பரவசமடைந்தார். முக்கியமாகச் சாகுபடி நிலங்கள், நிலச் சுவான்தார்களுக்கும் சாகுபடி செய்யும் குடியானவர்களுக்குமுள்ள உறவு, உரிமைகள், கடமைகள், இன்னும் எத்தனையோ நில சம்பந்தமான பிரச்சினைகள் அக்காலத்தில் இருந்தன. எல்லாவற்றையும் கவனித்து உருவாக்கிய மசோதா ஒன்று சட்டசபையில் அரசாங்கத்தரால் கொண்டுவரப்பட்டு விவாதிக்கப்பட்டது. அந்த மசோதாவைப் பரிசீலனைசெய்து, அதன் உபயோகங்களையும் அதன் குறைகளையும் அலசிப் பார்த்தவர் கிருஷ்ணஸ்வாமி ஐயர். விவாதங்களில் இவர் கலந்துகொண்டு ஆற்றிய சொற்பொழிவையும் இவருடைய உண்மை உழைப்பையும் மகாகனம் ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகள் தமது தனி அழகுடன் கூறுவதைக் கவனிப்போம் :

"கவர்னருக்கு அவருடைய (கிருஷ்ணஸ்வாமி ஐயருடைய) யோக்கியதையில் அளவு கடந்த மதிப்பு ஏற்பட்டுவிட்டது. எவரைக் கண்டாலும் பின்வருமாறு கவர்னர் சொல்லுகிறார் : 'மற்றவர்களுக்கு எவ்வளவு மேலே கிருஷ்ணஸ்வாமி ஐயர் இருக்கிறார்!' கவர்னர் இவரைத் தனியே காணவும் பேசவும் ஆவலாயுள்ளார். தாம் ஒன்றையும் மறைவின்றிக் கவர்னர் சொல்லாவிட்டாலும், கிருஷ்ணஸ்வாமி ஐயரை அவரது இஷ்டம்போல் பேசவே தடைசெய்யாமல் விட்டுக்கொண்டு வந்தார்." (கடிதம். 14-2-1908.)

மகாகனம் ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகள் அக்காலங்களில் மகாகனமாய் இல்லை. அவர் ஹிந்து உயர்தரப்பள்ளியின் தலைமை உபாத்தியாயராக இருந்தார்; பொதுஜன சேவையில் புகவேண்டிய ஆவலையும் பெற்றார். கல்வி விஷயங்களில் ஊக்கம் இருந்ததைப் போல அவருக்கு அநேக அரசியல் சம்பந்தமான பிரச்சினைகளிலும் பெரும் அக்கறை இருந்துவந்தது. தாமாகவே இந்திய ஊழியர்

சங்கத்தில் (Servants of India Society) சேர்ந்து உழைக்க முன் வந்தார். அவரது தியாகம் பிறர் தூண்டுதலைத் துளியும் எதிர் பாராதது. அவ்விதமிருந்தும், தெரியாத காரணத்தால் பலர் கிருஷ்ண ஸ்வாமி ஐயரின் பிரயத்தனத்தினுல் மட்டும் அவர் கோகலேயின் தாபனத்தில் சேர்ந்தார் என்ற தவருன வதந்தியைக் கிளப்பி விட்டார்கள். வெகுகாலம் வரையில் இதை நம்பியவர்களே அதிகம்.

ஆனுல் நடந்தது என்ன என்று அறிகையில் சில சுவாரஸ்யமான விவரங்கள் வெளியாகின்றன. கிருஷ்ணஸ்வாமி ஐயர், ஜி. ஏ. நடேசன், இருவருமே சாஸ்திரிகளுக்கு அக்காலங்களில் மிகவும் வேண்டியவர்கள். இருவருடைய அறிமுகக்கடிதங்களையும் எடுத்துச் சென்றே முதலில் சாஸ்திரிகள் கோகலேயைப் பேட்டி கண்டார். மற்றப்படி கிருஷ்ணஸ்வாமி ஐயர் தமது சந்தேகங்களை எடுத்துக் கூறி, சாஸ்திரிகளுக்கு ஊழியர் சங்க விதிகளின் கடுமை யைக் காட்டி யோசிக்கும்படியே முதலில் உபதேசிக்க முயன்ருர். இவருடைய மனைவி வாலாம்பாள், ஒரு சமயம், சாஸ்திரிகளின் யோகக்ஷேமத்தில் சிரத்தை கொண்டவராய், ஒருகால் தம் கணவரே சாஸ்திரிகளின் தியாகச்செயலுக்குத் தூண்டுகோலாய் இருந்திருப் பாரோ என்ற சந்தேகத்தில் தனிமையில் இவரை விசாரித்தார்களாம். அதற்கு இவர் தமக்கு யாதொரு பொறுப்பும் அந்தச் செயலில் இல்லை என்றும், ஒன்றுமட்டும் தாம் செய்யவில்லை: அதாவது சாஸ்திரிகளை நியாயத்திற்குமேல் தடுக்கவில்லை என்றும் சொன்னதாகப் பிற் காலங்களில் விவரங்கள் சில வெளிவந்தன.

சாஸ்திரிகள் கிருஷ்ணஸ்வாமி ஐயரிடம் கொண்டிருந்த நிஜமான பெருமையும் அன்புமே காரணம், அன்ருடம் கோகலேப் பெரியாருக் குச் சென்னைத் தகவல்களை எழுதுகையில், நண்பரின் அரிய செயல் களைக் குறிக்காமல் மேலே செல்லமாட்டார். அம்மாதிரி எழுதிய சில கடிதங்களிலிருந்தே இன்று கிருஷ்ணஸ்வாமி ஐயரை மற்றத் தலைவர்கள் எவ்விதம் மனத்தில் ஆராதித்தனர் என்பது தெரிகிறது.

சட்டசபைகள் இன்று அடைந்திருக்கும் வளர்ச்சியையும் யோக்கியதையையும் நினைத்துக்கொண்டு அக்காலங்களில் சட்ட சபை அங்கத்தினர்கள் செய்துள்ள காரியங்களை மதிப்பில் குறைப் பதன் தவற்றை முதலில் எச்சரிக்கக் கடமைப்பட்டுள்ளோம். அந் நாட்களில் சட்டசபையில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் மிகச் சிலரே. அரசாங்க நியமனத்தினுல் சட்டசபையில் அமர்ந்தவர்களே அதிகம். மேலும் சட்டசபையில் விவாதிக்கப்பட்ட மசோதாக்களின் எண்ணிக்கையே குறைவு; அவைகளில் கலந்துகொள்வதற்கான அவகாசமும் அதிகாரமும் இரண்டுமே காலவரைக்குள் அடங்கியவை.

மேலும் வரவுசெலவுத்திட்டங்களை அலசிப்பார்க்கவோ, அங்கீகரிக்கவோ, மறுக்கவோ ஒருவிதமான உரிமையும் சட்டசபை அங்கத்தினர்கள் வசம் இல்லை; அவர்கள் கவனிப்பதான உபசாரச் சொல் மட்டுமே உண்டு.

தங்கள் அபிப்பிராயங்களை வற்புறுத்த அதிகாரமோ உரிமையோ இல்லாதபொழுது அரசாங்க வரவுசெலவுத் திட்டங்களில் (Budjet) அக்கறை காட்டியவர்கள் மிகச் சிலரே. கிருஷ்ணஸ்வாமி ஐயர் தமக்குள்ள பொறுப்பை உபயோகிப்பதில் துணிந்துவிடுவார். ஏற்கனவே கவர்னர், வரவுசெலவுத்திட்டங்கள் சம்பந்தமாக ஒரு சிறு கூட்டத்தைக் கூட்டி அவைகளைப் பார்வையிட்டு, வேண்டிய புதிய திருத்தங்களையும் அதில் செய்ய முனைந்திருந்தார். யோசனைகளை நன்கு தெளிவாக எடுத்துச் சொல்வதில் கிருஷ்ணஸ்வாமி ஐயர் திறமையுள்ளவரானமையால், இவர் பேசுகையில் அதிகார வர்க்கம் தொடர்ந்து கவனிப்பதும் சிறிதுகாலப் பழக்கமாகியது. இரண்டொரு கருத்துக்களைக் கீழே கொடுத்து, அக்காலங்களிலேயே சிலர் மட்டும் நாட்டின் நலத்தை முன்னிட்டு எவ்வளவு ஆழமாகவும் அழுத்தமாகவும் அரசாங்கத்தின் கவனத்தை, மக்கள் முன்னேற்றத்திற்காக வலிய இழுத்துள்ளார்கள் என்பதைப் புலப்படுத்துகிறோம்.

'அரசாங்கம் ஜனங்களின் அவசியங்களுக்கு இணங்கி எதையும் புதியதாகவும் செய்வதில்லை ; உள்ளவைகளை மாற்றுவதும் இல்லை. தானுகவும் திறமையுடன் எதையும் சாதிப்பதில்லை. முதல் தடவை இவ்வருஷம் அமைக்கப்பட்ட வரவு செலவுத்திட்டங்கள் சம்பந்தமான குழுவில் பங்கு கொடுத்தார்கள் எனக்கு. அங்கே செய்வதாக ஒப்புக்கொண்டவைகளைச் செய்வதற்கு இன்னும் சரியான விவரங்களைக்கூட இங்கே கொடுக்கவில்லையே.'

இம்மாதிரி ஆரம்பித்தார் கிருஷ்ணஸ்வாமி ஐயர் தமது பேச்சை. அடுத்தடுத்து யோசனைகளைச் சொல்லிக்கொண்டே போனுர். சர்வ கலாசாலையில் உள்ள உபாத்தியாயர்களுக்கும் உபந்நியாசகர்களுக்கும் சர்வகலாசாலைச் சட்டத்தின் கீழ் அரசாங்கம் கொடுக்க முடிந்த பொருளுதவியை விவரித்தார். நீதி இலாகா சம்பந்தமான சில யோசனைகள், அதன்பின் உயர்நீதிஸ்தலங்களில் நீதிபதிகளை நியமிக்கும் பொறுப்பை அரசாங்கம் எவ்விதம் செய்துகாட்டவேண்டும் என்ற யோசனைகள் ; அடுத்தபடியாக நீதி இலாகா அரசாங்க நிர்வாக இலாகா இவைகளைப் பிரிப்பதன் அவசியம் ; அடுத்தது உயர்தர நீதிஸ்தலத்தில் உள்ள சிறு உத்தியோகஸ்தர்கள், மொழிபெயர்ப்புச் செய்பவர்கள், குட்டைஎழுத்து (சுருக்கெழுத்து) நிபுணர்கள், இன்னும் கீழ்க்குமாஸ்தாக்கள் இவர்களின் சம்பளத்தின் தரத்தைப்

பற்றிய சில குறிப்புகள்; இன்னும் இவ்விதம் இதரச் செலவுகளைப் பற்றியும் இவர் சொன்னவை கேட்டவர்களிடம் பிரமிப்பையும் இவரிடம் நம்பிக்கையையும் வளர்த்தன. ஓர் ஆங்கிலப் பத்திரிகை, இவருடைய வரவு செலவுத் திட்ட சம்பந்தமான பிரசங்கத்தைப் பற்றிப் பின்வருமாறு எழுதியது :

'பிரமாதமான பிரசங்கம் கிருஷ்ணஸ்வாமி ஐயருடையது; இது வரையில் இவ்வளவு குறிப்பாக வரவு செலவைப்பற்றி ஒருவரும் பேசியதில்லை. அழகான சொற்பொழிவுகூட. கருத்துக்களும் பாஷையும் மிக நயமாக வெளிவந்துள்ளன. ஆட்சி செய்பவர்களின் குறைகளைச் சந்தேகமறக் குத்திக்காட்டியது பேச்சு.......இனிச் சட்ட சபையில் திறமைபெற விரும்புகிறவர்கள் இவருடைய வழி பின்பற்றத் தகுந்ததென அறிவார்கள்; கல்விமட்டும் போதாது, நல்ல பகுத்தறிவும் ஊகா போகங்களும் அவசியமாகும்.' (இந்தியன் பேட்ரியட் 7–5–'09)

புகழ் பெருகிவருகையில் பலர் நிதானத்தை விற்றுவிடுவார்கள். சுய ஞாபகமே மேலிட்டவர்களாயும் தோன்றத் தொடங்குவார்கள். கிருஷ்ணஸ்வாமி ஐயருக்கு அவகாசம் போதாத தோஷமே வரவர அதிகமாயிற்று. இவருடைய மனவேகத்தை உணரும் காரியங்களாக உருவாகாதவற்றை இவரால் சகிக்க இயலவில்லை.

XIII. குடும்பமும் குழந்தைகளிடம் பரிவும்

1909-ஆம் ஆண்டு செப்டெம்பர் 28-ஆம் தேதி இவருடைய மனைவி மறைந்ததையும், தமக்கு உயர் நீதிஸ்தலத்தில் உத்தியோகம் உடனே கிட்டியதையும், இரண்டையுமே ஸ்திதப்பிரக்ஞனாய் மனச் சஞ்சலம் ஏதுமின்றி இவர் ஏற்றார். துக்க மேலீட்டையோ புதிய பதவியில் திருப்தியையோ இவர் காட்டிக்கொள்ளவில்லை. எதையும் எதிர்நோக்கியவர் அல்ல; எது வரினும் தமது மனப்பலத்தைக் கொண்டு தாங்க முற்பட்டார்.

தமது குடும்பப் பொறுப்பை இனி யார் வகிக்கக்கூடியவர் என்றே எண்ணமிட்டு வந்தார். தமது தம்பிகளில் உயர்ந்த சுபாவம் படைத்த சந்திரசூடன் என்பவர், தனியாகப் பிரிந்துபோய் வேறு குடித்தனம் செய்யத் தொடங்கிய காலம் அது. மற்றொரு தம்பியான ராமசந்திரன், போலீஸ் இலாகாவில் உத்தியோகமாகி வெளியூர்களுக்கு மாற்றப்பட்டு ஊரிலேயே இருப்பதில்லை. மூத்தமகள் பாலசுந்தரிக்குத் தாய் இறக்கையில் வயது இருபதேதான்? ஆயினும் தந்தைக்குள்ள புத்தி வேகமும் அதிசய ஆற்றலும் அவளுக்கு இருந்ததால் வேறு பெரியவர்களின்றி அவளையே சிறுவர் சிறுமிகளைக் கவனிக்க மனம் இசைந்தார் தந்தை. அவளும் வயதின் குறைவை ஒருவரும் உணராத விதம் பலவிதப் பாரங்களைச் சுமந்ததுமன்றி, தந்தையையே கண்காணிப்பதற்கான சாதுர்யமும் தைரியமும் பெற்றுவிட்டாள்.

அடுத்தவரான பாலசுப்பிரமணியன் கலாசாலைப்படிப்பை முடிக்காதவராயினும். தந்தையாரின் பெயருக்கும் உயர் லட்சியங்களுக்கும் தகுந்தவிதமே தம்மைத் தயார்செய்துகொள்வதில் முனைந்தார். வெற்றியும் கண்டார். ஸம்ஸ்கிருதபாடங்களில் திறமையுடன் இருந்ததுடன், உயர்ந்த வகுப்பிலும் ரசாயன சாஸ்திரப்பரீட்சையில் சென்னைக்கே முதலாயும் பிற்பாடு தேறினார்.

அவருக்கு அடுத்தவளான சுப்புலட்சுமி என்றைக்கும் சூடிகையாயும் சுறுசுறுப்புடனும் திறமையுடனும் நடந்துகொள்வதில் சிறந்தவள். மனைவியாயுள்ளவள் விருந்தாளிகளுடன் பழகும் விதங்களில் எப்படியெல்லாம் வீட்டுக்கு வந்தவர்களை உபசரிப்பாளோ அவ்விதமெல்லாம் சுப்புலட்சுமி தந்தைக்கு வேண்டிய உதவிகளைச் செய்வாள். ஆங்கிலம் கற்றுச் சுலபமாய்ப் பேசக் பழகிக்கொண்டவளானதால், வெள்ளைக்காரர்களுடன் பழகும் வாய்ப்பை அவள் நன்கு உபயோகப்படுத்தி வந்தாள். கற்பனையும் கலைருசியும் உள்ளவளான அவளது அடுத்த தங்கை சாவித்திரியைவிட இரண்டே வயதுதான் பெரியவளான

போதிலும், தன்னை அநேக சமயங்களில் இன்றிமையாதவளாகவே செய்துகொண்டு விடுவாள்.

சாவித்திரி என்றுமே தந்தையின் கௌரவத்துக்குப் பாத்திர மானவள். அவர் இருந்து பார்க்கவில்லையே தவிர, அவளுடைய அறிவு பலமானது; பிழையின்றியுள்ளது; மேலும் ஆழம் கண்டது. தந்தை உயிருடன் இருக்கையிலேயே அவளுடைய அறிவின் தெளிவை எழுத்திலும் வடித்துக்காட்டியவள். மகளின் திடமான அறிவின் போக்கை உணர்ந்த தந்தை அவளுடைய ஆரம்ப எழுத்துக்களைக் கண்டே மனம் பூரித்தார்.

அடுத்தவளான சரஸ்வதி இளமையிலேயே மிகவும் நுட்பமான பார்வையும் பிறரிடம் துளியும் கோணலாக நடந்துகொள்ளாத சுபாவமும் படைத்தவளாய் வளர்ந்தாள். மற்றச் சகோதரிகள் மூவரைப்போல் அவளுக்கும் கல்யாணம் செய்வித்து மகிழாமல் தந்தையார் இறந்த குறையுடன், சீக்கிரம் இரு பெற்றோர்களையும் இழந்ததால் சம்ரட்சணைக்கான சலுகைகள் எதுவும் இன்றித் தானே தனது குணங்களை வளர்த்து வந்தவள் அவள். பிற்காலங்களில் அவளிடம் தோன்றிய சக்திகளெல்லாம் அவளிடம் இருந்தமைக்கான அறிகுறிகள் இளமையிலேயே தெரியாததால் அவளைக் குழந்தை யாகவே, அதிலும் உடல் நலம் போதாதவளாகவே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் எல்லோரும் கருதியதை நினைத்தால், இன்னும் புதிர் போல் காண்கிறது.

கடைசி மகன் சந்திரசேகரன் (இப்புத்தகத்தின் ஆசிரியன்) ஐந்து வயதில் தாயையும் எட்டு முடிவதற்குள் தந்தையையும் பறிகொடுத்த வனானதால், தந்தை வாழ்ந்த காலத்தில் நடந்தவற்றை அறிவதற்கான எவ்வித வளர்ச்சியையும் பெறாத அபாக்கியவானாகவே இருந்தான். தந்தையாரிடம் பயமும் பாசமும் உண்டே தவிர, அவரிடம் காணப் பட்ட எந்த யோக்கியதையையும் பெறாத குறை அவனிடம் இருந்தே வந்தது.

மொத்தத்தில் செல்வர்களாக வாழ்க்கையில் வளர்ந்தவர் களாயினும், சலுகைகளின்றியே வளர்க்கப்பட்டதால், இதர சம அந்தஸ்தில் உள்ள குடும்பங்களிலுள்ள விதம் இக்குழந்தைகள் பரிபாலிக்கப்படவில்லை. ரோஷமும் பண்புள்ள நடத்தையும் ஆறு பேர்களுக்கும் சொந்தமானவைதாம். ஒருவருக்கொருவர் குணங்களில் ஏற்றத்தாழ்வுகளின் வித்தியாசங்கள் இலலாதவர்கள் என்று முடிவுகட்ட இயலாதபோதிலும், சேர்ந்து பார்க்கையில் அவர்களைப் புத்திவன்மை படைத்தவர்கள் என்றே கருத இட முண்டு. பெரியவர்களிடம் மரியாதையும் தங்களைவிட அந்துஸ்துக்

குறைவானவர்களிடம் அனுதாபமும் பிறரிடம் காணப்படும் யோக்கியதைகளில் மதிப்பும் பாராட்டும் உற்சாகமும், எல்லாவற்றையும் விடச் சுயநலத்தில் ஆசையென்பதே தெரியாதவர்களாயும் அவர்கள் இருந்ததற்கு ஒரே ஒரு காரணம் சொல்லலாம்: மிகச் சிறுவயதில் தந்தைதாயை இழந்தவர்கள் புத்தி சக்தியும் பண்புகளும் படைத்தவர்களாக உள்ளதை உலகெங்கும் பார்க்கலாம். மேலே நாட்டு இலக்கிய சக்கரவர்த்தியான ஷேக்ஸ்பியருடைய நாடகங்களில் அநேக நாயக நாயகிகள் நல்ல அறிவுடன் இருப்பதற்குத் தாய் தந்தையற்றவர்களாய்ப் படைத்திருக்கப்பட்டிருப்பதை சில ரசிகர்கள் காரணங் கூறுவர். பெற்றோர்களின் பாதுகாப்பு இல்லாத குறையுடன் இளமையில் வளர்கிறவர்கள் பிற்பாடு தங்களுடைய பண்புகளையே நம்பி வாழப் பார்ப்பார்கள். மற்றவர்களைவிட அவர்களுக்கு நுட்பமான உட்பார்வை ஏற்படுவது சகஜம். பண்பாடும் அவர்களிடம் செழிக்கும்.

கிருஷ்ணஸ்வாமி ஐயருக்கு மனைவி இறக்கையில் வயசு நாற்பத்தாறு முடிந்திருந்தது. ஆனால் மறுவிவாகம் செய்துகொள்ளும் யோசனையே இவரிடம் தலைதூக்கவில்லை. ஆகையால், பெண்களிடம் பூண்ட அன்பை, அவர்களுடன் நெருங்கிப்பழகும் வாய்ப்பு ஏற்பட்ட கடைசி இரண்டு வருஷங்களில் பயன்படச் செய்துவிட்டார்.

சிறியவர்கள்தாமே என்று ஒரு சமயமும் பெரிய விஷயங்களை அவர்களுடன் அளவளாவாது இருந்தவரல்ல. பாலசுந்தரியின் பொறுப்பேற்கும் சுபாவத்தையும் சுப்புலட்சுமியின் புத்திவேகத்தையும் சாவித்திரியின் அறிவுத்திறனையும் சரஸ்வதியின் மிருதுவான பண்பாட்டையும் இவர் தமது சிறுபழக்கத்திலேயே நன்கு நிர்ணயித்து விட்டார்.

கோடைக்கானல் மலையில் தமக்கொரு பங்களாவை வாங்கி அதில் தாம் நீதிபதியாக இருந்த வருஷம் தங்கினர். விடுமுறை நாட்களில் மலைவாசம் இவருடைய நீரிழிவுநோய்க்கு நன்மை அளிக்க வல்லதெனக் கருதியே அவ்விடம் சிறிதுகாலம் தங்கினர். மாப்பிள்ளைகளில் மூத்தவரான நாராயணசுவாமியினிடம் பட்சபாதம் இவருக்கு அதிகம். தம்மிடம் அவருக்கு ஏற்பட்ட உறவை அவர் உயர்வாய்க் கருதிய விதத்தை அறிந்து அவருடைய சுபாவத்தைப் பெரிதும் மதித்திருந்தார். தமக்கு வேண்டியதான கவனிப்புகளுக்கு நாராயணசுவாமியையே சிற்சில வேளைகளில் பொறுப்பாளியாக்குவார். கலகலப்பும் வாய்வெடிகளும் நிறைய உடையவர்களிடம் இவருக்கு என்றைக்குமே தனியான விருப்பமுண்டானதால், வயசாகாதவர்களாயினும் சரி, தமக்குச் சரிசமானமான பதவியில் இல்லாதவர்க

ளாயினும் சரி, அவர்களுடன் தொடர்பை வைத்துக்கொள்வார். கணக்கில் அடங்காத அம்மாதிரி நண்பர்கள் இவருக்கு ஏற்பட்டிருந்தார்கள். எல்லோரையும் வீட்டில் விருந்தினராக உபசரிப்பதில் இவருக்குப் பரமதிருப்தி. மாப்பிள்ளை நாராயணசுவாமி இக்காரியங்களில் முக்கியப் பங்கு கொள்வது சகஜமாகியது.

பிற்காலங்களில் கவர்னர் நிர்வாக சபை அங்கத்தினர் என்ற பதவியைக் கிருஷ்ணஸ்வாமி ஐயர் பெற்றிருக்கையில், உதகமண்டல வாழ்க்கை ஆறுமாத காலம் இவருக்கு ஏற்பட்டது. அக்காலத்தில் எவ்வளவோ நண்பர்களின் பழக்கம் இவருக்கு உண்டாகியது. வெள்ளைக்காரர்களில் வைட்ஹெட் (Whitehead) தம்பதிகள் இவருக்கு உற்ற நண்பர்கள் ஆனார்கள். ஒரு சமயம் வைட்ஹெட்டின் மனைவி ஒரு சொற்பொழிவில் தமிழர்களின் 'சும்மா' என்ற சொல் அவர்களுடைய சோம்பலைக் குறிப்பதெனக் குற்றம்சாட்டிப் பேசினாள். அன்று அக்கிராசனம் வகித்த கிருஷ்ணஸ்வாமி ஐயர் அவளுடைய வாய்த்துடுக்கை அடக்கியதுமல்லாமல் தமிழர்களின் பழைமையையும், பண்பாட்டின் அருமையையும் சும்மா என்ற சொல்லின் ஆன்மிக உட்கருத்தையும் விளக்கினார். பேச்சைக் கேட்டுமட்டும் பிரமித்தவள் அல்ல அவள். இவருடைய வாக்கின் உண்மை யொளியை அவள் கவனித்துவிட்டாள். இவரிடம் மரியாதையை அவளும் அவளது புருஷனை பிஷப் வைட்ஹெட்டும் கடைசிவரையில் போஷித்துவந்த விவரம் ஆச்சரியமானது.

மலைவாசம் குடும்பத்தினருக்குத் தகப்பனாருடன் ஒன்றிவாழும் வாய்ப்பை அளித்தது. ஒரு வருஷம் நெருங்கிய பழக்கமே கூட அவர்களில் ஒவ்வொருவரிடமும் தந்தையைத் தெய்வ அம்சம் பெற்றவர் என்று எண்ணவைத்தது. ஆம், உலகம்முழுவதும் சுற்றினவர்களும் இவரைப்போன்ற அறம், அறிவு, ஆற்றல் நிறைந்த வேறு ஒருவரைப் பார்த்ததாகக் கருதுவதில்லை. பிறர் எவ்விதம் கருதினார்களோ, வயது ஆக ஆகச் சுய அநுபவங்கள் ஏற்பட ஏற்பட இவருடைய மக்களில் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் அந்தரங்கங்களில் தங்களுக்கு ஏற்பட்ட பிறவி விசேஷத்தை மறந்ததில்லை. தகப்பனார் எவ்விதமானவர் என்பதை நேரில் கண்டதையும், பிற்காலங்களில் சரியான அளவில் கேள்விப்பட்ட விவரங்களின் வாயிலாக அறிந்தும், இவருடைய உயர்ந்த அம்சங்களை நினைக்க முற்பட்டனர்.

XIV. அதிசயமான சில பண்புகள்

தாம் நீதிபதி பதவியில் இருந்தபொழுது தம்மால் காங்கிரஸ் காரியங்களில் முன்போல் பங்குகொள்ள இயலாததைக் கிருஷ்ண ஸ்வாமி ஐயர் மனதாற வெறுத்தார். ஆயினும் காங்கிரஸ் காரியங் களில் சிக்கல்கள் தோன்றியதும், இவரை யோசனை கேட்பது இதரத் தலைவர்களுக்குப் பழக்கம். 1910-ஆம் ஆண்டு காங்கிரஸ் அலகா பாத்தில் நடைபெற்றது. அதற்குக் கிருஷ்ணஸ்வாமி ஐயர் அழைக்கப் பட்டார். அரசாங்க உத்தியோகஸ்தர்களும் மேடையில் அமர்ந்து காங்கிரஸ் பிரசங்கங்களைக் கேட்பது அக்காலங்களில் உண்டு. பிரேரேபிக்கும் தீர்மானங்களில் கலந்துகொள்வதுமட்டும் முறை இல்லை என்று ஒதுக்கப்பட்டதே அல்லாது, பழைய காங்கிரஸ் பிரமுகர்கள் அரசாங்கத்தில் வேலை பார்க்கிறவர்களானல், அவர்களை மரியாதையுடன் அழைத்து உபசரிப்பது உண்டு. கவர்னர் உள்பட இம் மரியாதையைப் பெற்றவர்கள்தாம். அலகாபாத் காங்கிரஸுக்குச் செல்லத் தயாரானவர், தமது குடும்பத்துடன் கல்கத்தா, காசி, பிரயாகை முதலிய இடங்களுக்கும் செல்வதை விரும்பினர். அரிய நண்பர்கள் படை ஒன்றும் இவரைச் சூழ்ந்தது. ரயிலில் மூன்று நான்கு நாட்கள் பிரயாணம் என்ருல், ரயில் நிலையங்களில் இவரைக் காண வருபவரும், இவருக்கும் குடும்பத்தினருக்கும் உணவு உண்டிகள் கொணர்பவர்களுமாகப் பலரைக் காணப் பலவித அநுபவங்கள் ஏற்பட்டன. பூமாலைகளும் தின்பண்டங்களும் சிதறிக்கிடக்கும் காட்சியை ரயில்பெட்டியில் காண நேர்ந்தது. பரபரப்பும் பேச்சுமாகப் பிரயாணம் துரிதமாக நடைபெற்றது.

கல்கத்தாவில் இருந்த நண்பர் என்.ஆர். ஐயர் பழைய சிநேகிதர். அவரிடம் சிறுபிராய விளையாட்டுகளும் சல்லாபங்களும் நிறைய நிகழ்த்தியபின் காசியில் பகவான்தாஸ் என்ற பெரியவருடைய விருந்தாளியாக இருக்கவேண்டி வந்தது. பகவான்தாஸ் சமீபத்தில் சென்னைக்கவர்னராக இருந்த ஸ்ரீபிரகாசாவின் தந்தையார். சமீ பத்தில் தொண்ணூற்று ஆறு வயசில் அவர் காலமானது பலருக்கு நினைவில் இருக்கலாம். அவரே கிருஷ்ணஸ்வாமி ஐயரின் ஆப்தர்.

அலகாபாத்தில் தங்கிய நாட்களில் மாளவியாஜியும் அவருடைய புதல்வர்களும் இவருடைய குடும்பத்தாருக்கும் இவருக்கும் செய்துள்ள பல சகாயங்கள் விவரிக்கவொண்ணுதவை.

அலகாபாத் காங்கிரஸ் கொட்டகையில் இவரும் மேடையில் வீற்றிருந்தார். பிற்பாடும் வெட்டர்பர்ன் துரை இவரைத் தனிமையில் சிற்சில முக்கிய யோசனைகளுக்காக விரும்பவே, இவர் தமது குடும்பத்

துடன் மறுபடியும் கல்கத்தா திரும்ப இயலவில்லை. அலகாபாத் காங்கிரஸுடன் சேர்ந்தே 'ஏகலிபி' மகாநாடு ஒன்றைக் கூட்டினர் சிலர். அதன் தலைமைக்கு இவரையே வருந்தி அழைத்தனர். இவரும் சிலகாலமாக இந்தப் பாரததேசம் ஒன்றுபடுவதற்கு முக்கியமாயுள்ள சாதனங்களில் ஒரே எழுத்துருவம் அட்சரங்களுக்கு இருக்க வேண்டியதை அதிகம் விரும்பினார். தமது உரையிலும் இவர் அதைச் சொன்னார் :

"ஒரு பாஷையும் ஒரு லிபியும் நம்முடைய நாடு ஒன்று படுவதற்கு இன்றியமையாத் சாதனங்கள்,...பல பாஷைகளைப் பேசு கிறவர்கள்,தங்கள் மொழியைக் கற்கும்பொழுதே மற்றோர் இந்திய மொழியைக் கற்பது கஷ்டமாகாது அல்லவா! அதேமாதிரி இதர எழுத்துக்களை எழுதிப் பழக்கம் செய்கையில் இந்தியா முழுவதும் உணரக்கூடிய ஒரே லிபியைச் சேர்ந்தே தெரிந்துகொள்வதும் சிரமமாகாது.

"எல்லோருக்கும் பொதுவான லிபியை எண்ணுகையில் நம் கண் முன் எவ்வளவோ லிபிகள் எழுகின்றன. ரோமன் லிபியைப் பொறுத்தவரையில் சில சௌகரியங்கள் உண்டு. பல மேலைநாட்டுப் பாஷைகள் அதில் வரையப்பட்டிருப்பதுதான் முக்கிய காரணம். தென்னிந்தியாவில் தமிழர்களைத்தவிர மற்றப் பாஷைகளைப் பயிலு கிறவர்கள் தேவநாகரியை நிராகரிக்கமாட்டார்கள். அரசாங்கத்தை யோசனை கேட்பதை விட்டு நாமாகவே ஒரு லிபியை ஏற்கத் தீர்மானிப்பது அவசியம்."

இவருடைய சொற்பொழிவை முற்றும் அச்சிட்ட **'இந்தியன் ரேவியு'** என்ற பத்திரிகையின் 1911-ஆம் ஆண்டு ஜனவரிப் பிரதியைப் பார்த்தால் தெரியும், வாதரீதியில் அடுத்தடுத்துக் கிருஷ்ணஸ்வாமி ஐயர் காட்டிய **ஏகலிபியின்** அவசியம்.

இவைகளெல்லாம் ஒருபுறம் இருக்க, மகாத்மா காந்தியை நேரில் பாராமலேயே கிருஷ்ணஸ்வாமி ஐயருக்கு அவரிடம் ஏற்பட்ட மதிப் பையும் பாராட்டையும் இன்று அறிகையில் ஆச்சரியமாக இருக்கிறது. இவர் நீதிபதி பதவியில் இருக்கையில் ஒருநாள் எச். எல். எஸ். **போலக்** என்பவர் இவரைக் காண ஆபிசு அறையில் நுழைந்தார். இடுப்பில் வேஷ்டி அணிந்து மேலே பூணூல் தரித்து இவர் உட்கார்ந்திருப்பதை அவர் பார்த்தார். முகத்தில் காம்பீர்யமும் மேன்மையும் தாண்டவமாடியதை அவர் நன்கு கவனித்துக் கொண்டார். சட்டை அணியாது வெள்ளைக்காரனை போலக்கை வரவேற்கவும் ஆசனத்தைவிட்டு எழுந்துவிட்டார். சொல்லவும் சொன்னார் : "உங்களிடம் மன்னிப்புக் கேட்கப் போவதில்லை நான்,

சக்கரவர்த்தியே எங்களைப் பேட்டி காண்பதாயினும் மேலே வேஷ்டி இன்றித்தான் நாங்கள் வரவேற்பது எங்கள் நாட்டு நாகரிகத்தின் சின்னம்'' என்றார். பலகாலம் பழகிய பரிச்சயமும் பாராட்டும் நண்பர்களிடையே வளர்ந்தன. ஏற்கனவே காந்தியின் வரலாறு ஒன்று டோக் என்பவரால் எழுதப்பெற்றதை இவர் வாசித்துப் பரவசமடைந்திருந்தார். அதோடு காந்தி தென் ஆப்பிரிகாவில் செய்துவரும் அரிய சேவையையும் அறிந்தவுடன், மகாத்மா காந்தியினிடம் பிறரிடம் காணாத உத்தமப் பண்புகளை இவர் கண்டு கொண்டார். மேலும் போலக் 'காந்தியே, டிரான்ஸ்வால் இந்தியர்களின் தலைவர்' என்ற தலைப்பில் திருவல்லிக்கேணியிலுள்ள கெல்லெட் ஹாலில் ஒரு சொற்பொழிவு ஆற்றினார். அன்று அதற்குத் தலைமை தாங்கினவர் கிருஷ்ணஸ்வாமி ஐயரே. போலக்கின் பேச்சினால் ஏற்பட்ட உணர்ச்சியை அடக்க முடியாமல் தலைவருடைய பிரசங்கம் பரிமளிக்கத் தொடங்கிவிட்டது. அன்று இவர் காந்தியின் சத்திய வேட்கையை வாய்கொண்டமட்டும் வருணித்தார். காந்தியின் அரிய தியாகச் செயல்களே எல்லோருக்கும் அறிமுகமாகாத காலம் அது. இருப்பினும் இவர் காந்தியைப் பெரிய தேசபக்தர் என்றுமட்டும் நினைப்பதற்கில்லை; சமய நெறியின் தீவிர உணர்ச்சியுடன் உழைக்கும் சிறந்த ஆன்மிக வரம் பெற்றவர் என்று கருதவேண்டும் என்றார். கடைசி வார்த்தைகளில் தொனித்த இவருடைய முன்னோக்கின் வலிவு இச்சமயம் எழுத்தில் பார்க்கையிலும் அதிசயிக்கவே நம்மைத் தூண்டும்: "காந்தி தென் ஆப்பிரிக்காவில் தாம் நடத்தும் போரில் வெற்றிபெற்றாலும் பெருவிட்டாலும், ஒன்றுமட்டும் நிச்சயம். இத் தேசத்தில் இனிவரும் சந்ததிகளுக்கு என்றும் மறக்க இயலாத பெரும்புகழுடன் கூடிய தமது திருநாமத்தை அவர் அளிப்பார்.''

இவ்வார்த்தைகளை இவர் 1910–ஆம் ஆண்டில் ஏப்ரல் 28–ஆம் தேதி சொன்னார். காந்தியை இந்தியாவில் வெகு சிலரே அச்சமயம் நன்கு அறிந்திருந்தார்கள். மேதா, கோகலே, இன்னும் இரண்டொருவரே அவரைப்பற்றிய முழு வரலாற்று விவரங்களையும் நன்கு உணர்ந்திருந்தார்கள். அவ்வித நிலையில் கிருஷ்ணஸ்வாமி ஐயர் போலக்கின் பேச்சிலிருந்து பெரிதும் காந்தியைப் போற்றியதுடன் நில்லாமல், வரும் காலத்தைப்பற்றிய ஓர் உண்மையை அன்றே கண்டு கொண்டார் என்பது, இவருடைய தீர்க்கதரிசனத்தின் சிறப்பை மிக நன்றாக விளக்குகிறது.

XV. கவர்னர் நிர்வாக சபை அங்கத்தினர்

மார்லி–மின்டோ சீர்திருத்தங்களின் விளைவாக ஒவ்வொரு மகாணத்திலும் கவர்னர் சபைக்கு ஓர் இந்தியரையாவது நியமிப்பது என்ற தீர்மானத்திற்கு அரசாங்கம் வந்தது. உடனேயே 1910–ஆம் ஆண்டில் பொப்பிலி மகாராஜாவான ரங்கராவ்பகதூர் என்பவரை நியமித்தார், சர். ஆர்தர்லாலி என்ற கவர்னர். தமது சபை அங்கத்தினராக, கல்வி அறிவற்ற ஒருவரைப் புதிய அநுபவங்கள் ஏற்படும் பதவியில் இருத்தியதைக் கண்டு பலர் பரிதவித்தனர். மகாராஜாவும் பதவியிலிருந்து விலகிக்கொள்ளத் தயாராகவே இருந்தார். பார்த்தார் லாலி; இதற்கு வழி செய்வதில் முனைந்தார். கிருஷ்ணஸ்வாமி ஐயரையே கேட்டார், யோசனை. இவர் சொல்வதென்ன இருக்கும்? ஆயினும் ஜஸ்டிஸ் சங்கரன் நாயரின் பெயரையே இவர் குறித்தார். கவர்னர் இவரையே விரும்பினர். தாம் நீதிபதி பதவியை விட நேர்ந்தால் அதில் பி. ஆர். சுந்தர ஐயரை அவர் நியமிப்பதாயின் தமது நிர்வாகப் பொறுப்பின் பங்கைச் சரியாக நிறைவேற்றியதாகும் என்று கவர்னருக்கு எடுத்துரைத்தார்.

பிறகு இவரைக் கவர்னர் நிர்வாக சபையின் அங்கத்தினராயும், இவர் காலிசெய்த இடத்தில் ஜட்ஜ் பதவிக்கு சுந்தர ஐயரையும், நியமித்துவிட்டார் கவர்னர். நீதிபதி பதவியிலுள்ள ஒருவருக்கு மேல் உத்தியோகம் தருவதன் விளைவு நாளடைவில் விரும்பத்தகாத பழக்கமாகும் என்று பத்திரிகைகளும் பிரபலத் தலைவர்களில் சிலரும் கூக்குரலிட்டனர். 1911-ஆம் ஆண்டு ஜனவரி 17-ஆம் தேதி இவருக்குப் புது உத்தியோகம் சித்தித்தது. 'ஹிந்து' அக்காலங்களில் கிருஷ்ணஸ்வாமி ஐயரை எடைபோட்டுப் பார்த்து அவரிடம் உள்ள குறைகளை அம்பலமாக்கி வந்தது.

இவருடன் நிர்வாகத்தில் ஒத்துழைக்க இருந்த இரண்டு வெள்ளைக்காரர்களான ஸர் மர்ரே ஹாமிக் என்பவனும் சர் சார்லஸ் அட்கின்சன் என்பவனும், தங்களுடன் சேரப்போகிறவரின் குணதிசயங்களைச் சீக்கிரமே உணர்ந்தனர். வேலையில் இவர் காட்டிய ஊக்கமும் குறிப்புக்களும் தஸ்தாவேஜுகளை இவர் பார்வைபிட்ட சுறுசுறுப்பும் இதர இரு அங்கத்தினர்களைப் பிரமிக்க வைத்தன.

கவர்னருக்கு ஆச்சிரம பங்களாவில் மார்ச்சு மாதம் ஓர் அழகான சிற்றுண்டி விருந்து தயாரிக்கப்பட்டது. பலர் கூடி அன்று பெருமிதம் கொண்டனர். விரோதிகளும், பொருமைப்பேயின் வசம் விழுந்தவர்களும் அதிகரித்தனர். இவரைக் குறைசொல்வதையே அவர்கள் செய்தார்கள்.

பிற்பாடு உதகமண்டலம் சென்றவரைப்பற்றிய சில ரசமான குறிப்புகள் உள்ளன. ஸ்ரீநிவாஸ சாஸ்திகளின் கடிதங்களில் இரண்டொன்றை இங்கே கொடுப்பதும் அவசியம். “ஒருவிதத்தில் இந்திய அங்கத்தினர் கவர்னர் சபையில் மாறுதலையே செய்திருக்கிறார். இது அவருடைய காலதாமதம். வேலையை நடத்தும் முறையில் அல்ல; அதில்தான் மற்றெல்லோரையும்விட இவர் மேலே போய்விட்டாரே! குறித்த நிமிஷத்தில் கவர்னர் ஆலோசனை சபை வாசலில் இவர் நிற்பதில்லையாம்! புகாருக்கு இடம் தந்துவிட்டதை நினைந்து வருந்துகிறாராம். ‘இந்த இழவு சராய் அங்கிகள் மாட்டிக்கொள்வதால் எப்படியோ காலதாமதம் ஆகிவிடுகிறது!’ என்று நொந்து கொள்ளுகிறார்”.

அக்காலங்களில் கவர்னர் சபை அங்கத்தினருக்கெனத் தனி உடுப்புகள் உண்டு. குறிப்பிட்ட சில சமயங்களில் அவைகளையே அணியவேண்டும். மாட்சிமை தங்கிய ஐந்தாம் ஜார்ஜ் சக்கரவர்த்தியின் பிறந்தநாள் ஜூன்மாதம் 3–ஆம் தேதி விமரிசையாகக் கொண்டாடப் பட்டது. அச்சமயம் மாதாகோவிலில் அரசருக்காகச் சில பிரார்த்தனைகள் நடைபெற்றன. அதற்கு உத்தியோகஸ்தர்கள் வர வேண்டும். தனிப்பட்ட ஜரிகை வேலைப்பாடுகள் கொண்ட உடைகள் போட்டுக்கொண்டவரைப் பார்த்து வெள்ளைக்காரர்களும் ஒரு நிமிஷம் சந்தோஷமே பட்டனர். ஜிலுஜிலுவென்று சரிகை வேலைப்பாடுகள் கண்களைக் கவர்ந்தன.

நிர்வாக அங்கத்தினருக்கு முள்ளுப்படுக்கையைத் தயாரித்தனர் சிலர். ‘பாலக்காட்டு ஊழல்’ என்று பிரபரலமாக வளர்ந்த ஒரு சம்பவம் கவர்னர்சபை அங்கத்தினரை மிகவும் தூற்றவே செய்து விட்டது. அவருடைய நிஜத்தன்மையை உணராதவர்கள், நல்ல சாக்குக் கிடைத்தது என்று எண்ணி அச்சம்பவத்தைப் பெரிதுபடுத்தி விட்டனர். பலகாலம் கடந்தபின் அதன் விவரங்கள் தெரிவதில் இன்று ஒன்றும் தவறிவிடப் போவதில்லை. ஆயினும் அன்றுள்ள அத்தாட்சிகளில் ஒன்றைக் குறித்துவிட்டு மேலே செல்வோம்:

‘கிருஷ்ணஸ்வாமி ஐயர் தம்மால் முடிந்த அளவில் மிகவும் நன்மையையே செய்தார். முனிசிபல் சபையை முழுவதும் ஒழித்து விடக் கருதிக் கலெக்டராயுள்ள ஒருவரை நிர்வாக அதிகாரியாக நியமித்துவிடுவது என்று அதிகாரிகள் எண்ணினார்கள். ஆனால் உள்ளுக்குள்ளே இருந்துகொண்டு அதைத் தடுத்தவர் கிருஷ்ணஸ்வாமி ஐயர். முனிசிபல் சபையையே கொஞ்சகாலம் நிறுத்திவிட அதிகாரிகள் நினைத்தபோது, அதற்கும் உள்ளே இருந்துகொண்டே தடைகளைக் கிளப்பியவர் கிருஷ்ணஸ்வாமி ஐயர். இம்மாதிரியே வேறு பல சந்தர்ப்பங்களிலும் தடைகளை அதிகாரிகளின் போக்கில் விடாமல்

கிளப்பிவருபவர் இவர்தாம். இருப்பினும் தம் வழியே மற்றவர்களையும் இழுத்துச்செல்வது என்றைக்கும் சாத்தியமில்லையல்லவா? கடைசி யாக அரசாங்கம் தீர்மானித்த முடிவுக்கும் இவர் கையொப்பமிடாமல் இருக்க இயலுமா? ஊரில் வசைமொழிகளுக்கு இவரையே இலக்காகச் செய்துவந்ததுதான் புரியவில்லை. அதிர்ஷ்டம் எவ் விடத்தில் பொங்குகிறதோ அதே இடத்தில்தான் விதியும் தனது விளையாட்டைச் செய்கின்றது.'

இந்த விவரம் ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகள் 1911-ஆம் வருஷம் ஜூலை மாதத்தில் தமது தலைவரான கோகலேக்கு அனுப்பிய செய்திகளில் சேர்ந்துள்ளது. முனிசிபாலிடியில் அங்கத்தினராக உள்ளவர்களில் தேர்தல் மூலம் இடம் பெறுகிறவர்களின் எண்ணிக்கையைக் குறைக்கவே கடைசி உத்தரவும் ஏற்பட்டது. அரசியல் வாதிகள் எப்படியும் இவ்விதமான உத்தரவை எதிர்த்தார்கள். பாலக்காட்டுக் கலாசாலையின் தலைமை ஆசிரியரின் நியமனத்தை முன்னிட்டு உண்டான புயற்காற்று ஓய்ந்தபாடில்லை.

வீட்டிலும் குடும்பத்தவர்களில் சிலர் மனமுடைந்து விட்டார்கள். தங்கள் குடும்பத்தலைவரை ஊரில் கட்சிகள் வலுத்து எதிர்ப்பதைச் சும்மா விழுங்குவதென்பது சாத்தியமாக இருக்கவில்லை. கிருஷ்ண ஸ்வாமி ஐயரின் பெண்களில் மூத்தவர்கள் இருவரும் எதனால் அவ் வளவு பொல்லாப்பும் இவர் தலையிலே விழுந்தன என்று தந்தையிடம் வினவியபோது வெளிவந்த இவருடைய பதில் சிறிது வியப்பையே அளிக்கும்: "அசடுகளே! மணி ஐயரை நாளைக்குப் பீச்சில் கூட்டங் கூடி நிந்திப்பார்கள் என்று அறிந்தவுடன், அதிலும் உற்சாகம் கொண்ட வர்கள் பலர் இருப்பார்கள். அதேபோல்தான், என்னைப்பற்றியும் குறைகளை ஒருவர் காரசாரமாக எழுதினால் மற்றவர்கள் கவனம் இவைகளில் செல்லுகிறது. உலக இயல்பு கீழேதள்ளி ஒருவர்பேரில் மண்ணைவாரி இறைப்பதில்தான் பிரவேசிக்கும். அது கிடக்கட்டும், என்னைப்பற்றிச் சதா புகழ்மாலைகள் வந்து குவிந்தால் மட்டும் ஏன் உங்களுக்கெல்லாம் அதில் சலிப்போ மன ஆயாசமோ ஏற்படுவ தில்லை? கொஞ்சம் இப்படியும்தான் எனக்கு ஏற்படட்டுமே!" என்றார் கிருஷ்ணஸ்வாமி ஐயர்.

சிறியவர்களுக்கு அச்சமயம் இவருடைய பற்றற்ற நிலையை உணரப் போதுமான புத்திவளர்ச்சி இல்லை. ஆனால், அரசியலில் வெகு சகஜம் ஒருவரைச் சிலகாலம் ஏற்றுவதும் சிலகாலம் தூற்று வதும்; இரண்டையும் ஒருங்கே மதிப்பதற்கு ஏற்ற நிதானமும் திட அறிவும் பெறுவது மட்டும் என்றைக்கும் பாராட்டப்பட வேண்டிய குணங்கள்தாம் என்பது இன்று கலக்கமில்லாமல் கவனிக்கையில் தான் விளங்குகின்றது.

XVI. இலக்கியருசியும் கலை அபிமானமும்

சிறுபிராயம் முதற்கொண்டு உயர்நீதிகளில் மனம் சென்றவரான மையால், கிருஷ்ணஸ்வாமி ஐயருக்கு இலக்கியங்களில், அதிலும் நம் புராதன இலக்கியங்களாகிய வால்மீகி ராமாயணம், மகாபாரதம், ஸ்ரீமத்பாகவதம் இவைகளில் இடையருத பற்று உண்டு. இளமையிலேயே அண்ணன் தம்பி இருவரும் கும்பகோணத்தில் தங்களது வீட்டில் ராமாயண பாராயணம் செய்வதைக் கேட்டவர்கள் இவ்வளவு சிறிய பிராயத்தில் அருமைக் கிரந்தங்களில் ஆசை இருப்பது வரும் காலத் தன்மையின் முழக்கம் என்றே கருதுவார்களாம்.

பிற்காலங்களில் மேலைநாட்டுக் காவியங்களிலும் மில்டன், ஷேக்ஸ்பியர், முதலியவர்களின் அமர நூல்களைப் பயின்றதன் விளைவாக இன்னும் இலக்கிய ருசி மேம்பட்டது இவருக்கு. இவர் மில்டனுடைய 'பாரடைஸ் லாஸ்டு' என்னும் உயர்ந்த காவியத்தை மனப்பாடம் செய்தவர். பாராமல் ஒப்பித்ததற்காகப் பரிசுகளும் பள்ளியில் வாங்கியவர் கிருஷ்ணஸ்வாமி ஐயர்.

சிறு வயதுப் பழக்கமே வயசு ஏறஏற இலக்கிய அபிருசிகளை வளர்க்கவைத்தது. இவருடைய சித்தாந்தம், 'உயர்ந்த இலக்கியமாயின் உயர்ந்த உணர்ச்சிகளைப் புகட்டவேண்டும். மற்றப்படி மனத்தை விநோதப்படுத்துவதற்காக அது இருந்தால்மட்டும்போதாது' என்பதாம். ஒருசமயம் வாய்விட்டே தமது அபிப்பிராயத்தைச் சொல்லிவிட்டார்:

'உயர்ந்த கருத்தைப் புகட்டாத எந்த இலக்கியமும் வீண்தான். மனத்தை மேன்மைப்படுத்துவதாலேயே அது இலக்கியமாகின்றது; ஒழுக்கம் வளரச் செய்வதில்தான் அதன் பிரதிப்பிரயோசனமும்.' ஸம்ஸ்கிருத இலக்கியத்திலும், மேலே குறிப்பிட்ட மூன்று மகா காவியங்களே இதர நூல்கள் அவ்வளவிற்கும் ஆதாரம் என்பதையும் உணர்த்துவார். தருமம், சமயம், இவைகளை உணர்த்தாவிட்டால் உலகில் எழுத்துக்கு மதிப்பேது என்றே இவர் வினவுவார்.

இலக்கியம் என்றதும் ஆங்கிலம், ஸம்ஸ்கிருதம், இவை இரண்டுடன் இவர் நிறுத்திக்கொள்ளவில்லை. தம்முடைய ஆவலைத் தமிழில் உள்ள பல இலக்கியக் களஞ்சியங்களிலும் செலுத்தினர். அவைகளையும் இவர் சதா வாசித்து அநுபவிப்பார். ஒன்று மறக்காமல் சொல்லுவார். மகாமகோபாத்தியாய சாமிநாத ஐயர் நேரில் தாம் கேட்டதை 'நினைவு மஞ்சரி' என்ற தமது நூலில் குறித்துள்ளார். கிருஷ்ணஸ்வாமி ஐயர் ஒரு பெரிய ஸம்ஸ்கிருத பண்டிதர் என்பதுடன் தமிழ்ப்பண்டிதரும்கூட என்று ஒரு சமயம் சொன்னாராம்!

'பக்திரஸம் தேவாரத்தில் இருப்பதுபோல் வேறு எதிலும் காண வில்லை. நானும் ஸம்ஸ்கிருதத் தோத்திரத்திரட்டுகளை வாசித்துள்ளேன். உயர்ந்த உட்பொருள் அடங்கியவைதாம் அவைகளும்; ஆனல் பாடின மாத்திரத்தில் மனத்தைக் கௌவிக்கொண்டு உருக்குவதில் தேவார திருவாசகங்களுக்கு நிகராக எதுவும் இல்லை. ஒன்று இரண்டு இருக்கலாம்; ஆனல் இந்த உருக்கம் அவைகளிலும் இல்லை' என்று அழுத்தமாக இவர் கூறிவிட்டார்.

பண்டித லக்ஷ்மணசூரி என்பவர் அக்காலங்களில் அநேக ஸம்ஸ் கிருத நூல்களை இயற்றியவர். அதேவிதம் ராதாமங்கலம் நாராயண சாஸ்திரிகளும் கவிதை வரம் பெற்று, வேண்டிய கவிதைகளைப் புனைந்துள்ளார். இருவரிடமும், தமக்குள்ள அபிமானத்தை வெவ் வேறு விதமாகக் காட்டியவர் இவர்; வள்ளலாய்க் கொடைகளும் வழங்கியவர்.

இலக்கியம் பிடித்திருக்கலாம், ஆனல் கலைகளை ஒதுக்கலாம் ஒரு வர். இசை இன்பத்தைப் பருகியவர் என்று இவரைக் கூற இயலாது. ஆயினும் அழகாகப் பாடினல் மனம் கனிந்து உருகிவிடுவார். நந்தன் சரித்திரக் கீர்த்தனைகளை உணர்ச்சியுடன் பாடிவிட்டால் கேட்க வேண்டியதில்லை. இவருடைய உள்ளம் நெகிழ்ந்து இவருடைய ஆன்மா எங்கோ சென்றுவிடும். அமைதியில் திளைப்பதற்கு, 'சாந்தமுலேக சௌக்கியமுலேது' என்ற தியாகராஜருடைய உருப்படியை அடிக்கடி கேட்டு இன்புறுவார்; கண் இமைகளை மூடி, மனத்தில் அமைதியின் திவலைகளை ருசித்துக்கொண் டிருப்பார்.

தமிழ் நாடகம் சீர்கெட்டநிலையில் இருந்தது அக்காலத்தில். தமிழ் நாடகமேடையை உயிர்ப்பிக்க மிகப் பிரயாசை எடுத்தவர் பம்மல் சம்பந்த முதலியார். அவருடைய நடிப்புத்திறனை மெச்சியவர்களுள் கிருஷ்ணஸ்வாமி ஐயரும் ஒருவர். மேலும் சுகுணவிலாச சபை என்று நாடக முன்னேற்றத்தின் பொருட்டு ஏற்படுத்திய ஸ்தாபனத்திற்குத் தலைவராகவும் சிலகாலம் இருந்தார். அங்கே பல பணிகள் ஆற்றினர். நல்ல நடிப்பைப் புகழ்வார். அருமையான புதிய நாடகங்களை வரவேற்பார். நாடகக்கலையை எவ்விதமேனும் முன்னுக்குக் கொண்டுவர உதவியவர்களில் இவரும் ஒருவர் என்பது பம்மல் சம்பந்த முதலியாரின் முடிவான அபிப்பிராயம். தமது கலைவளர்ச் சிக்கும் இவரே முதல் தூண்டுகோல்களில் ஒருவர் என்பார் சம்பந்த முதலியார். வி.வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் முதலியவர்களும் கிருஷ்ண ஸ்வாமி ஐயரின் பெரிய குணத்தை நாடகமேடை சம்பந்தமாய் அநுபவித்தவர்கள். சுகுணவிலாச சபையார் இவரிடம் காட்டிய பேரன்பும் கௌரவமும் சாமான்யமல்ல என்பதற்கு அறிகுறிபோல்

இவர் இறந்ததும் பெரிய உருவப்படம் ஒன்றை விரைவிலேயே இவர் ஞாபகார்த்தமாகத் திறந்துவைத்தார்கள். வி. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார், தமது முழுப் பிரேமையையும் வடித்துக்காட்டி உருக்க மான செய்யுட்கள் இவரைப்பற்றி எழுதி அச்சமயம் வாசித்தார். அதிலிருந்து ஒரு துளியை இங்கு தருவோம்:

'அவருடைய (கிருஷ்ணஸ்வாமி ஐயருடைய) தோற்றத்தின் கீழ் மறைந்திருந்த அருமையான குணத்தை அறியாதவரும் உண்டோ? அவரை நெருங்கிமட்டும் எல்லோரும் பழகி இருந்தால், இன்னும் எவ்வளவோ பிரேமைக்குப் பாத்திரமாகத் தோன்றி யிருப்பார்.'

சம்பந்தமுதலியார் ஆங்கிலக் கட்டுரை ஒன்றில் தமது பழைய நினைவுகளைக் குறிக்கையில், கிருஷ்ணஸ்வாமி ஐயரைப் பற்றிய ஒரு கருத்தை வெளியிட்டார். அதில் இவருடைய பயத்தை விளைவிக்கும் வெளித்தோற்றத்தையும் ஆனல் உள்ளே ஒழுகும் கனிவையும், பலாப்பழத்தின் சொரசொரப்பான மேல்தோலுக்கும் உள்ளே உள்ள தேனினும் இனிப்புக் கசியும் சுளைகளுக்கும் உவமை காட்டியிருந்தார். அருமையான குணங்கள் சேர்ந்திருப்பவர்களைத்தான் உலகில் உத்தமர்களெனக் கொண்டாடுகிருர்கள். காளிதாஸன் ரகுவம்சத்தில் உதித்த திலீபனை 'பீமகாந்தை: நிருப குணை:' என்பதால் அவ னுடைய சுபாவம் சிலசமயம் பிறருக்குப் பயத்தைத் தருவதாயும், இதர சமயங்களில் பிறருக்குக் கனிவைக் காட்டும் விதமாயும் அமைந் திருந்ததாகக் கூறுகிருன். கிருஷ்ணஸ்வாமி ஐயரிடமும் இவையே காணப்பட்டன.

XVII. முடிவும், மக்கள் துயரமும்

கவர்னர் நிர்வாக சபையின் காரியங்கள் இன்னவிதம் இருக்கும், இருக்காது என்பதெல்லாம் நன்கு விளங்காத நாட்கள் அவை. ஒரு மனிதனின் சுய யோக்கியதையைப் பொறுத்தே அரசாங்கம் இந்தியர்களிடம் நம்பிக்கைவைத்து அதிகாரங்களையும் கொடுக்கும். மற்றப்படி ஒரு பதவிக்கென இக்காலங்களில் உள்ளது போன்ற திட்டமான அதிகாரங்களும் கடமைகளும் அக்காலங்களில் நிர்வாகம் செய்பவர்களுக்கு ஏற்படவில்லை. ஆயினும் கிருஷ்ணஸ்வாமி ஐயர், தாம் இந்த நாட்டு மனிதன், தமக்கு மக்கள் தொடர்பு இருப்பது மிக்க அவசியம். அவர்களுடன் எவ்வளவுக்கெவ்வளவு சுலபமாகப் பழக முயலுவோமோ அவ்வளவுக்கு அவர்களுடைய சிரமங்களையும் குறைகளையும் நீக்குவதற்கு வழிதேட இயலும், என்ற கொள்கைகளைக் கடைப்பிடித்தவர். ஆகையால் உதகமண்டலத்திலிருந்து சென்னை மாகாணம் முழுவதும் சுற்றிவர ஒரு திட்டம் வகுத்துக்கொண்டார்.

நீலகிரியிலிருந்து அக்டோபர் மாதம் சுற்றுப்பிரயாணத்தைத் தொடங்கித் திருச்சிராப்பள்ளியை அடைந்தார். முனிசிபால்டிகளைப் பார்வையிடும் பொறுப்பு இவரிடம் பிரத்தியேகமாகத் தரப்பட்டிருந்த காரணத்தால் அவைகளை முக்கியமாகக் கவனித்து வந்தார். வரவேற்புகளும் புஷ்பமாலைகளும் இக்காலத்தில் அமைச்சர்களுக்கு உள்ளவை போல் சகஜமாகத் தயாரிக்கப்படாவிட்டாலும், இவருக்கிருந்த பெயரினால் பல இடங்களில் உபசாரங்கள் விதரணையுடன் ஏற்பாடாகி இருந்தன. காவேரியின் கல்லணையைப் பார்வை இட்டபின், தஞ்சாவூருக்கு வந்தார். ரயில் நிலையத்திலேயே தஞ்சாவூர்க் கலெக்டர் இவரைப் பார்க்க வரவில்லை. நிர்வாக அங்கத்தினருக்குக் காட்டவேண்டிய மரியாதைகளை அவர் கருசனையுடன் செய்யவில்லை. கிருஷ்ணஸ்வாமி ஐயர் வெள்ளைக்காரனுடைய மமதையைப் பதம் பார்த்துவிட்டார். அரசாங்கப் பிரதமக் காரியதரிசிக்கு விசாரணை செய்யும்படி தாக்கீது பறந்தது. தமக்கென விரும்பாவிடினும், இந்தியன் ஒருவன் ஸ்தானத்தில் இருப்பதை வெள்ளைக்காரன் அலட்சியம் செய்வது தகாதல்லவா?

பிறகு கும்பகோணமும் தமது பிறப்பிடமான திருவிடைமருதூரும் இவர் தங்கும் இடங்களாயின. மின்னல் பிரயாணமாக முடிந்தது இவருடைய முதல் சுற்றுப்பிரயாணம்.

அடுத்த திட்டத்தில், ராமேசுவரம், மதுரை, ராமநாதபுரம் முதலிய இடங்களுக்குச் சென்றார். எங்கும் நல்ல வரவேற்பும்

நண்பர்கள் கூட்டமும் விளைந்தன. பாம்பன் பாலம் கட்டி முடியாத காலம் அது. அதையும் பார்வையிட்டார். பிறகு கோடிக்கரையில் சமுத்திர ஸ்நானம் செய்துவிட்டுத் திரும்பினார்.

ஏற்கனவே சர்வகலாசாலைப் பட்டமளிப்பு விழாவின் பொழுது பட்டம் பெறும் மாணவர்களுக்கு நல்லுபதேசம் செய்யும் வழக்கத்தை யொட்டி அவ்வருஷம் பேசும்படி கவர்னர், கிருஷ்ணஸ்வாமி ஐயரிடம் விண்ணப்பித்திருந்தார். அதை ஒப்புக்கொண்டு பிரசங்கத்தைச் சர்வகலாசாலை வழக்கத்தையொட்டி முன்கூட்டியே அச்சிட்டுத் தயாராக வைத்திருந்தார்.

இவருடைய வாழ்க்கையின் சாரம் எது என்பதைப் பிறர் அறிய விரும்பினால் எதைக் கொண்டு உணருவது என்போருக்கு ஓரளவு இவருடைய கான்வகேஷன் பிரசங்கமே அவ்வித விருப் பத்தைப் பூர்த்தி செய்யும் எனலாம். உயர்ந்த தேசபக்தியும், புராதன மரபுகளில் நம்பிக்கையும், இதர நாடுகளின் தொடர்பைக் கொண்டு வளரும் விஞ்ஞான அறிவும், ஆராய்ச்சி மனப்பாங்கும், நம்மிடம் இனி இடம் பெறத்தக்க புதிய அறிவுகளும், சரித்திர சம்பந்தமான ஆராய்ச்சிகளும், இன்னும் அறிஞர்கள் ஆற்றவேண்டிய பொது நன்மைகளும் அந்த அரிய சொற்பொழிவின் அச்சுப்பிரதியில் பிரதிபலிப்பதை இன்று வாசிப்பவர்களும் உணர்வார்கள்.

இரண்டாயிரத்துக்குக் குறையாத அறிவாளிகளின் மத்தியில் வெங்கலமணி நாதக்குரலில் அன்று பேச்சு எழும்பியது. முந்திய தினம் செனெட் பெரிய கட்டடத்தில் மேடையினின்றும் பேசிப் பார்த்து ஒத்திகை செய்துகொண்டார். தம்முடைய குரல் கடைசி வரையில் சுத்தமாகக் கேட்கின்றதா என்று அறிய ஆவல் இருந்ததே அதற்குக் காரணம். அக்காலங்களில் ஒலிபரப்பி வசதிகளே கிடையா என்பதையும் ஞாபகப்படுத்திக்கொள்ள வேண்டும். ஸர். ஆர்தர் லாலி விடைபெற்றுச் சுயநாடு சென்றுவிட்ட தால், லார்டு கார்மைக்கெல் என்பவர் அன்று சர்வகலாசாலையின் ‘ சான்ஸெலர் ’ என்ற ஹோதாவில் பீடத்தில் அமர்ந்திருந்தார். அவர் முதலில் இவருடைய அரிய சொற்பொழிவைப் பொதுமேடையில் அன்றுதான் கேட்டார். அவருடைய ஆச்சரியத்திற்கும் ஆர்வத் துடன் எழுந்த பாராட்டிற்கும் இவர் இலக்கானார் என்றே கூற வேண்டும், அந்நிகழ்ச்சியைப் பொறுத்தமட்டில்.

எவ்வளவோ முதுமொழிகள் அந்தச் சொற்றொடரில் இடம் பெற்றிருப்பினும் பொறுக்கிய இரண்டொரு கருத்தை இங்கு விளக்கலாம்:

“இன்று ஏற்பட்டுள்ள வாழ்க்கை நெருக்கடியினால் குறுகிய

எண்ணங்கள் மலிந்து, வறுமையிலும் ஆன்மிக வழியே சிறந்ததென நினைக்கும் பண்டைக் கருத்தை விலக்கவே மனம் தூண்டும். அதற்காகப் பழமையில் தோய்ந்த நாம் உயர்லட்சியங்களைக் கைவிடலாகாது. மன்னர்களின் மகுடங்களும் மண்ணில் பதிந்தனவே ஒரு காலத்தில்! வாழ்வின் மர்மத்தைக் கண்டுபிடிக்க அல்லவா அவ்வாறு அரசர்களும் பிரயாசைப்பட்டனர்!"

இவ்வாறு பேசியவர் இன்னும் அழகான சில சொற்றொடர்களையும் வாரி இறைத்தார். காசியின் மகிமையை எடுத்துக்காட்டி, நம் நாட்டில் பெரியார்களின் குலம் வற்றிவிடாது என்ற நம்பிக்கையையும் ஊட்டினர்.

'ஒரு நாள் வளம்பட ஓடிய ஜீவநதி, கோடையின் கொடுமையால் வற்றி இருக்கலாம்; ஆயினும் பெரும் உள்ளங்களை உண்டாக்கக்கூடிய வெள்ளம் பெருகி வராமல் இராது என்பதற்கான சின்னங்கள் காணுகின்றனவே!' என்றார்.

மகாத்மா காந்தியையும் பண்டித ஜவாஹர்லாலையும், ராஜாஜியையும் கொடுத்த நாடு வளம்பெருத பூமி என்று இனி யார் மறுப்பார்கள்? ஆயினும் கிருஷ்ணஸ்வாமி ஐயருடைய உள்ளம் துளியும் சந்தேகமின்றிக் கூறிய சொற்களே இன்று பிறரிடம் காணுத இயல்புகளை நினைப்பு மூட்டுகின்றன.

கடைசியில் இவருடைய குரல் எழும்பி, 'ஓம்: சாந்தி: சாந்தி: சாந்தி!: என்று கூறி அமைதியடைந்ததுமே பிரம்மாண்டமான செனெட் ஹாலில் மழை பெய்தாற்போல் கரகோஷம் சில விநாடிகள் ஒலித்துப் பிறகே ஓய்ந்தது.

மணிஐயரிடம் தமக்குள்ள பரம பக்திக்குச் சின்னமாக ஒரு பெரும் தொகையைச் சர்வகலாசாலைக்கெனத் தாம் ஒதுக்கிவைத்தார். சரித்திர ஆராய்ச்சியாளர்களுக்கு அறிவு வளர்க்கும் விஷயங்களைச் சேகரித்து வழங்கினல் கணிசமான ஒரு தொகையை அதன் வருவாயிலிருந்து சர்வகலாசாலை திட்டமிடலாம் என இவர் ஏற்படுத்தினர்.

மகானுன மணி ஐயர் எவ்வளவு விநயமுள்ளவர் என்பதைப் பிரசங்கத்தை வாசித்தபின் அவருடைய கடிதமே நம்மிடம் பதிய வைக்கும்:

'எனது தாழ்மையான அபிப்பிராயத்தில், இந்நாட்டிலேயே வேறெங்கும் கேட்காத உயர்தரச் சொற்பொழிவு உங்களுடையது. பல தலைமுறைகள் இதனை வாசித்துப் பயன்படவேண்டும். விஷயம் உயர்ந்ததா என்றால், இல்லை; பாஷையும் நயத்துடன் இலக்கியமாக உருவாகியுள்ளது.'

பத்திரிகைகள் ஒன்றோடொன்று போட்டியிட்டுப் பிரசங்கத்தைப் புகழ்ந்து, பேசியவரையும் வாழ்த்தின. பிரசங்கத்தைத் தயாரிக்கையிலேயே ஆங்கிலத்தில் தேர்ச்சிபெற்ற நண்பர் ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகளிடமே காட்டி அதில் பிழைகள் இருக்குமாயின் அவைகளைத் திருத்தும்படியும் விரும்பினார். எழுதும் பழக்கத்தில் உள்ளவர்கள் என்றும் கையாளவேண்டிய முறையும் இதுவோ என்றுதான் நாம் வியக்கின்றோம்.

எவ்வளவு பேரும் புகழும் குவிந்தபோதிலும் உடல் நலம் மட்டும் இவருக்குக் குன்றி வந்துகொண் டிருந்தது. உதகமண்டத்தில் இவரை டாக்டர் பரீட்சை செய்ததில் நீரில் சர்க்கரையின் மிகுதி கவலைக்கு இடமாக இருப்பது தெரிந்தது. அவ்விடத்திலேயே தமது கடைசி உயிலையும் இவர் எழுதிவைத்துவிட்டார். பிற்பாடு சென்னைத் துறைமுகத்தை ஒரு நாள் பார்வையிடச் சென்றவர், வீடு திரும்பியதும் சிறிது மயக்கமாக விழுந்தார். நண்பர்களும், குடும்பத்தினர்களில் இவர் சகோதரர் சந்திரசூடரும் மூத்த புதல்வி பாலசுந்தரியும் திகிலடைந்து விட்டார்கள். குடும்ப வைத்தியரான டாக்டர் நஞ்சுண்டராவும் சிறிது சிறிதாக மனக்கவலைக்கு இடமாயுள்ள தேகநிலையைக் கண்டு சிகிச்சைகள் செய்ய முற்பட்டார்.

1911, டிசம்பர் மாதம் பன்னிரண்டாம் தேதியில், டில்லியில் புதிய ஜார்ஜ் சக்கரவர்த்தியும் அவரது மாட்சிமைதங்கிய அரசியும் பட்டாபிஷேகம் செய்துகொள்ளும் வைபவத்துக்கு இவரும் அழைக்கப்பட்டுச் சென்றார். செல்லும் தறுவாயில் வீட்டில் மூன்று மாப்பிள்ளைகளும் நோய்வாய்ப்பட்டிருந்தார்கள். தம்முடன் மாப்பிள்ளை நாராயணசுவாமியை அழைத்துச்செல்ல இருந்த ஏற்பாட்டை மாற்றித் தமது தம்பி சந்திரசூடனைக் கூட வரும்படி சொல்ல நேர்ந்தது.

டிசம்பர் மூன்றும் தேதி பட்டணத்தைவிட்டுத் தனி 'சலூனி'ல் பயணமானார். சில சிநேகிதர்களும் தர்பாருக்கு அழைப்பிதழ்கள் பெற்றுச் சென்றார்கள். டில்லிக் குளிர் பெயர்போனது; அதுவும் டிசம்பர் மாதக் குளிர். ஆனால் ரத்தம் குறைந்த இவருடைய தேகத்தில் குளிர் உறைக்கவில்லை. தனிக் கூடாரங்கள் விருந்தினர்களுக்கு ஏற்பாடாகி இருந்தது. இவருடன் சல்லாபம் செய்ய சி. ஒய். சிந்தாமணி, டி.வி. சேஷகிரி ஐயர், ஜி. ஏ. நடேசன் முதலியவர்கள் அடிக்கடி வருவார்கள். பல மாகாணங்களிலிருந்து வந்த அதிகாரிகளின் கூட்டமொன்று குழுமியது. பேசிக்கொண் டிருந்தவர், சாப்பிட நேரமில்லாமலே அக்கூட்டத்திற்கு மணி பதினொன்றுக்குக் கிளம்பி விட்டார். அருகில் நின்றிருந்த சிந்தாமணியிடம், 'தேச சேவையை எவ்விதம் குறைவின்றிச் செய்வதென்பதே என் முக்கிய விசாரம்'

என்றூர்ம். மறுநாளும், அதாவது டிசம்பர் 9–ஆம் தேதியும் எஸ். ஸ்ரீநிவாஸையங்காரும் இதர சில சிநேகிதர்களும் அருகில் இருந்தனர். கோகலேயும் வந்திருந்தார். அவரும் கிருஷ்ணஸ்வாமி ஐயரும் பேசிக்கொண்டிருப்பதைக் கவனிக்க இளைஞர்களான நடேசன், ஸ்ரீநிவாஸையங்கார் முதலியவர்களுக்கு மிக்க அவா. போதாதற்குப் பண்டித மதன்மோகன மாளவியாவும் அங்கு வந்து பேச்சில் கலந்துகொண்டார். பத்திரிகைகளின் உரிமையைப்பற்றிச் சிந்தாமணி பரிந்து சொன்னதற்காக அவரைக் கடிந்துகொண்டு கிருஷ்ணஸ்வாமி ஐயர் ஒரு சிறு பிரசங்கமே செய்துவிட்டார். சிந்தாமணி திண்டாடிவிட்டார். சிந்தாமணியின் கட்சியை ஒவ்வொரு சமயம் ஸ்ரீநிவாஸையங்காராவது சிறிது ஆமோதிப்பார். நடேசன் ஒரு சமயமும் வலுத்த கையை விட்டு நகரவேமாட்டார். பத்திரிகைத் தொழிலின் பட்சபாதம்கூட நடேசனைப் பெரியவர்களை விரோதித்துக் கொள்ளச் செய்யவில்லை.

மறுநாள் தர்பாரில் வரவேண்டியவர்களின் வரிசை எவ்விதம் நடந்துகொள்வதென்பதற்காக ஒத்திகை யொன்றை முன்கூட்டி நடத்தினர். அதற்குக் கிருஷ்ணஸ்வாமி ஐயரும் அழைக்கப்பட்டதால் அங்கிகளை இவர் மாட்டிக்கொண்டார். இடுப்பில் சராயை நழுவாது செய்வதற்காகச் சுற்றியுள்ள பட்டுத்துணியின் முனையிலுள்ள நூல்கள் திரிந்து உட்பக்கம் இவருடைய தொடைச்சதையை வழட்டி விட்டன. அதனுல் வலி உண்டாகி டிசம்பர் 10–ஆம் தேதி ஒத்திகைக்குப் போக இயலவில்லை. வரமுடியாததற்குத் தனி முறையில் தமது வருத்தத்தையும் லார்டு கார்மைகேலுக்கு அறிவித்தார்.

டிசம்பர் 11–ஆம் தேதி நண்பரைக் காண வந்த சேஷகிரி ஐயர் இடிந்து போனுர். ஏனெனில் இவர் உடல்நிலை மிகவும் மோசமாகி விட்டிருந்தது. தொடையில் சிராய்த்த இடத்தில் சீழ் சேர்ந்து கொண்டது. ஜுரமும் உடலில் வெளியாகி இருந்தது. சேஷகிரி ஐயரிடம் தமக்கு டாக்டர் நஞ்சுண்டராவின் உதவி அவசியமென்றும், தமது மூத்த புதல்வி பாலசுந்தரியின் கவனிப்பில் இருக்க வேண்டி வந்துவிட்டதென்றும் சொன்னுர்.

தர்பாருக்கு இவர் போக முடியவில்லை. சி. எஸ். ஐ. என்ற கௌரவ பிருதை இவருக்கு அரசாங்கம் அளித்ததை வெளியிட்ட பத்திரிகைகள், இவருடைய தேகநிலையின் அசௌகரியத்தினுல் தர்பாருக்கு இவர் வர இயலாததையும் பகிரங்கப்படுத்தின. சென்னையிலுள்ள குடும்பத்தவர்களுக்கும், இவருடைய பிராண சிநேகிதரான ஏ. கிருஷ்ணஸ்வாமி ஐயருக்கும், வரப்போகும் விபத்தின் அறிகுறிகள் தோன்றத் தொடங்கின. உடனே பால

சுந்தரியின் வற்புறுத்தலினுல் ஏ. கிருஷ்ணஸ்வாமி ஐயரும், பால சுப்பிரமணியனும் சேர்ந்து ரயிலில் புறப்பட்டனர். பாலசுந்தரியும் கூடவே கிளம்பிவிட்டாள். அவள் இதயம் இரண்டாகிவிட்டது. பயப்பட்டதற்கு ஏற்ருற்போல் தந்தையின் உடல் அழிந்துவிடுமோ என்றே அவள் ஏங்கினுள். அதிகமாகக் கவலைப்பட்டதனுல் சில விநாடிகள் மனக்கலக்கம் பெற்றுப் பிறரைக் கவலைக்கிடமாக்கியும் விட்டாள். தந்தி ஒன்று தம்பி சுந்திரசூடனிடமிருந்து வந்தது. கிருஷ்ணஸ்வாமி ஐயர் பம்பாய் வழியாக வருவதாகத் தெரிந்தது. ஏற்கனவே டாக்டர் நஞ்சுண்டராவ் ஒருவருக்கும் தகவல் தராமல் வியாதியஸ்தரைக் காணப் புறப்பட்டுச் சென்றிருந்தார். எல்லாம் ஒரே கலக்கமும் கிலேசமுமாக மாறியது. சென்னையிலிருந்து புறப்பட்ட வர்கள், எதிர் வரும் ரயிலில் ராயச்சூரில் கிருஷ்ணஸ்வாமி ஐயரைச் சந்தித்தனர். இவருடன் டாக்டர் நஞ்சுண்டராவும் சந்திரசூடனும் இருப்பதைப் பார்த்தார்கள். நோயாளியின் உடலில் துளித் திடங் கூடக் காணப்படவில்லை. பட்டணம் திரும்பிய செய்தி அறிந்ததும் ஆச்சிரம பங்களாவில் கூடிய வேண்டியவர்களின் கூட்டம் சாமான்யம் அல்ல. சி. எஸ். ஐ. பிருதுக்காக வந்த பாராட்டுச் செய்திகளுக் கெல்லாம் பதிலைத் தமது தம்பியிடமே குறித்துக்கொள்ளும்படி அவ்வப்பொழுது சொல்லிவந்தார். 'பிழைத்துக்கொள்வோம்' என்றே மனப்பால் குடித்தது பதிலெழுதிய கடிதங்களிலிருந்து தெரிகிறது.

பெரிய வெள்ளைக்கார டாக்டரான, மேஜர் கிப்பர்ட் என் பவர் ரணத்தைக் கீறிச் சீழ் வெளிப்படுவதற்கான ஏற்பாடுகளைச் செய்தார். 23-ஆம் தேதி காலையில் 'ஆப்பரேஷன்' செய்வதற்காகப் பங்களாவின் நடுக்கூடத்தில் வெளிச்சம் இருப்பதனுல், அவ்விடம் நோயாளியைக் கட்டிலுடன் எடுத்துச் சென்றனர். சிகிச்சைக்குச் சிறிது முன், குழந்தைள் எல்லோரையும் பார்க்கவேண்டுமென ஆசைப்பட்டார். மூண்டுவரும் அபாயத்தைத் தெரிந்தும் தெரியாதது மான சிறுவர்கள் அவர்கள். ஆயினும் மனம் கலங்காமல் தந்தை யைச் சுற்றிப் பயத்துடன் நின்றிருந்தனர். தமது பக்கத்தில் சில ஆப்த நண்பர்களுடன் ஏதேதோ அழுத்தமான குரலில் சொல்லிக் கொண் டிருந்தார்.

'ஆப்பரேஷன்' செய்தார்கள். அக்காலத்து முறையிலேயே அவ்வளவு சுத்தமான செயலாகப் பிற்பாடு பலர் கருதவில்லை அதை. ஏற்கனவே பலவீனப்பட்டிருந்த உடலில், ரத்தமும் நிறையக் கொட்டி விடவே, நோயாளியின் நிலை இன்னும் கலவரத்திற்கு இடமாகியது. அடிக்கடி ஞாபகமும் இழப்பதற்குத் தொடங்கிவிட்டது. திகிலும்,

தவிப்பும் வாட்டுகையில் பாலசுந்தரி மூர்ச்சையானாள்; இதர சகோதரிகள் மனமுடைந்து திக்கற்று நின்றனர்.

22–ஆம் தேதி தேக நிலையில் சிறிது மாறுதல் கண்டது: புத்தி தெளிவாகியது. உடனே இவருக்குச் சந்நியாசம் கொடுப்பதற்காகச் சில நெருங்கியவர்கள் முயன்றனர். ஆனால் அது நிறைவேறவில்லை. ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகளே அக்காட்சியை வருணித்துள்ளார் :

“என் கடைசி உயிலையும் போன அக்டோபர் மாதமே எழுதி விட்டேன். டில்லி போகுமுன் அதிலுள்ளவை அவ்வளவும் சரியாக இருக்கின்றனவா என்றும் மறுமுறை கவனித்துவிட்டேன். இன்னும் சில மாறுதல்களையும் செய்யலாம் எனக் கருதுகிறேன். இப்பொழுது நான் உயிலைத் தொட்டால் என் குழந்தைகள்—முக்கியமாகப் பெண்கள்–பயந்துவிடுவார்கள். இன்னும் மூன்று நாட்களில் உடலில் குணமேற்பட்டால் செய்யலாம் என எண்ணுகிறேன். இச்சமயம் நீங்களும் உயிலைப் பாருங்கள், எல்லாம் சரியாகவே உள்ளனவா என்று கூறுங்கள்....ஆனால் இனி முடியாது......”

சாஸ்திரிகளிடம் நம்பிக்கையினால் தமது கடைசி உயிலை அவர் பார்வையிட இவர் விரும்பினார். பிற்பாடு தம் சொந்த அநுபவத்தைக் கொண்டு சில வார்த்தைகள் அவரிடம் வெளிவந்தன. மறக்க வொண்ணாதவைதாம் அவை. ஒவ்வொரு மானிடனும் உயர் பணியில் ஈடுபட்டால் இம்மாதிரியே தன்னை ஆக்கிக்கொள்ள வேண்டும். அதற்கு இவ்வார்த்தைகள் பயன்படலாம்:

“என் வாழ்க்கை வரலாற்றின் அடிப்படைத் தத்துவத்தைப் பிறருக்குச் சொல்லவேண்டுமானால் இம்மாதிரி கூறுங்கள் : ஒருவன் மேல்பதவிகளை அடைய அதிகாரிகளிடம் பவ்யமாயிருப்பது, கோள் சொல்லிவருவது, தொடை நடுங்குவது, மேலுள்ளவர்களைச் சதா அடிமையைப்போல் தொழுவது—இவை போன்ற செயல்களைச் செய்தாகவேண்டும் என்பதில்லை என்று காண்பியுங்கள்.”

தமது வாழ்க்கையின் லட்சியங்களைக் கண் மூடுமுன்னும் தெள்ளெனக் கண்டவரானதால் நண்பரிடம் ஒளிவு மறைவின்றிச் சொல்லிவிட்டார் போலும். எவ்வளவு நம்பிக்கையும் திடசித்தமும் இருந்தால் ஒருவருக்குச் சாகும் தறுவாயிலும் உண்மையைக் கூறுவதில் உறுதியும் உத்வேகமும் இருந்திருக்கும்! ஆம், சாஸ்திரிகள் படம் பிடித்தே அன்று நடைபெற்றவைகளை நண்பர் கோகலேக்கு வரைந்திருந்தார்.

கடைசியில் ஒரு நிறைவேறாத ஆசை; அதையும் சாஸ்திரிகள் விடவில்லை குறிப்பில் :

‘இன்னும் தொண்டுகள் பல தேசத்திற்குப் பாக்கியாய் இருக்

கின்றன. என்னை ஆண்டவன் தம் திருவடிகளுக்கு அதற்குள் அழைத்துவிட்டால்...'

மேலும் நண்பரைப் பார்த்து:

"நீங்கள் கல்கத்தாவுக்குப் போகவில்லையா? என் உடல் நிலையை உத்தேசித்துக் காங்கிரஸ் காரியங்களைக் கவனியாதிருக்க வேண்டாம். தேசமேதான் மற்றவை அவ்வளவையும்விட மேலாக உங்கள் எண்ணத்தில் இருக்கவேண்டும்..."

சாஸ்திரிகளே இதை எழுதுகையில், தாம் தாமாக இல்லையாம். பேனா எழுதியது; துக்கம் கண்ணை மறைத்ததாம்.

இரண்டு மூன்று நாட்களுக்குப் பின் வரவர இவர் தேகநிலை க்ஷீணம் அடைந்துவிட்டது. இவருடைய நிலை இவ்விதம் இருக்கையில் சாஸ்திரிகளால் சென்னையைவிட்டுக் காங்கிரஸுக்குப் போக மனம் எழவில்லை. வருத்தத்துடன் தாம் சென்னையைவிட்டு நகர இயலாததை எழுதியதோடு பிறகு கோகலேக்கு நேரிலும் தெரிவித்தார்.

27-ஆம் தேதி காலையிலிருந்து மாலைக்குள் இன்னும் உடல்நிலை பயங்கரமான குறிகளைக் காட்டியது. விக்கல் சதா தொந்தரவு கொடுத்தது. படுக்கையில் இருந்தவரிடம் தம்பி சந்திரசூடன் சிறு கோடுகளால் வரையப்பட்ட ஒரு **காளீய மர்த்தன கிருஷ்ணனுடைய** வடிவத்தைக் காட்டினார். படம் ரவிவர்மா எழுதிய அழகான வண்ணச் சித்திரத்தின் நகல். ஏதோ சிறுவன் கடைக்குட்டி சந்திரசேகரன் வரைந்த கோடுகள்தாம் அவை. தமது மூக்குக்கண்ணாடியைப் போட்டுக்கொண்டு படத்தை உற்று உற்றுப் பார்த்தார் நோயாளி. என்ன தோன்றியதோ உள்ளத்தில்? தனது மகனை அழைத்துவரச் சொன்னார். சிறுவனுக்கு முதலில் வீட்டில் உள்ளவர்களின் கவலை தெரிந்திருந்தது. ஆனால் தந்தையின் படுக்கை அண்டை நெருங்க முடியாத கூச்சமும் பயமும் கலந்து அவனை வெருட்டின. என்ன செய்வான்? சிற்றப்பா சந்திரசூடன் கரகரவென்று அவனை இழுத்து வந்து தந்தையின் படுக்கையின் பக்கம் நிறுத்தினார். கண்களில் ஒளியுடன் தந்தை மகனைப் பார்த்தார். கிட்டவரும்படி ஜாடை செய்தார். தமது வலது கன்னத்தைக் காட்டி அழுத்தமான குரலில்: "இங்கே, எனக்கு ஒரு முத்தம் கொடு" என்றார். பாவம், குழந்தை ஒன்றும் அறியாமல் புனிதமான செயலை என்ன செய்கிறோம் என்றே அறியாதபடி செய்துவிட்டு அவ்விடம் விட்டு ஓடினான். அவன் தந்தையை உயிருடன் பார்த்தது அதுதான் கடைசித்தடவை.

மறு நாள் 28-ஆம் தேதி குருவாரம் விடியுமுன்னே கிருஷ்ணஸ்வாமி ஐயரின் ஆவி உடலைவிட்டு நீங்கியது. அநேக பாடசாலை வித்தியார்த்திகளும் சாஸ்திர விற்பன்னர்களும் கூடிக் கர்ண

மந்திரங்கள் ஜபித்தனர். இவருடைய ஆத்மா நல்ல பேற்றைப் பெறவே அவர்கள் அவ்விதம் செய்தனர். புனிதமான வாழ்க்கையை நெடுகச் செய்தவருக்குக் கர்ண மந்திரங்களும் தேவைதாமா!

அன்று மயிலையில் வீடுகளில் இருந்தவர்கள் குறைவே. பலரும் ஆச்சிரமத்தில் திரளாய்க் கூடி வருந்தினர். கிருஷ்ணஸ்வாமி ஐயரின் தேகத்தை இடுகாட்டில் சிதையின் மேல் வைக்கவும் மணி ஐயர் பிறர் காது கேட்க, 'ஐயோ, எனக்குத் தீயிடவேண்டிய மகன் போன்றவனுக்குச் கொள்ளிவைக்கும் கோலத்தை என் கண்கள் காண வேண்டுமா!' என்று கதறினராம்.

ஊரில் எங்கும் களையே போய்விட்டது; ஆச்சிரமப் பங்களா தனிமையில் ஒளி இழந்து நின்றது. அரசாங்கம் மணியான ஒரு நிர்வாக அங்கத்தினரை இழந்து அறிக்கை இட்டது:

'கவர்னரும் அவருடைய சபையினரும் தங்களுக்கு ஏற்பட்ட பெருந்துயரையும், நாட்டின் தவிர்க்க இயலாத நஷ்டத்தையும் கருதி, கிருஷ்ணஸ்வாமி ஐயரின் அசாதாரண மேதையையும், பக்குவப்பட்ட அறிவையும் வெகு சீக்கிரத்தில் முடிவடைந்த வாழ்க்கையில் காட்டியதற்காக என்றென்றும் அவருக்குக் கடமைப்பட்டுள்ளார்கள்.'

கோட்டையின் மேல் பறக்கும் கொடியைப் பாதியில் தொங்கவிடக் கட்டளையிட்டனர்.

காலையில் இவருடைய தேகம் அடக்கம் செய்யப்பட்டதிலிருந்து சாயங்காலம் சூரியன் சாயும் நேரம் வரையில் நாழிகைக்கு ஒன்றாகப் பதினைந்து குண்டுகள் கோட்டை மதிற்சுவரிலிருந்து போடப்பட்டன.

கதிரவன் மேற்குக்கடலில் மறைந்தான். நிலைத்த ஆன்ம வெளியில் கிருஷ்ணஸ்வாமி ஐயரின் பரந்த உள்ளம் கலந்து லயித்து விட்டது.

'இந்தியாவிலேயே எங்கே தேடினும் ஈடு இணை இல்லாத ஒரு பரோபகாரி மாண்டுவிட்டார்' என்று எஸ். ஸ்ரீநிவாஸ ஐயங்கார் மிகவும் வருந்தினர்: (கடிதம் 28-12-11).

இவரைச் சிலர் தெய்வ அம்சமெனவே கருதினர். வேறு சிலர் தருமம் வடிவெடுத்து வந்து மறைந்தும் விட்டதென முடிவு கட்டினர். மற்றும் சிலர் இனி இவருடைய கருத்துக்களைப் பின் வருபவர்கள் தொடர்ந்து செய்யவேண்டுமெனத் தீர்மானித்துக்கொண்டனர். எல்லோரும் ஒரு முகமாய் விரும்பியது, கிருஷ்ணஸ்வாமி ஐயரின் நிமிர்ந்த வதனமும், களங்கமில்லாத பார்வையும் மறையாதபடி சிலை வடிவம் ஒன்று செய்யப்பட்டால் அவர் ஞாபகத்தை என்றென்றும் அது வரும் சந்ததிகளின் இதயங்களில் வளர்க்க உதவும் என்பதே.

அக்காலங்களில் கவர்னர் தாமாக ஒரு பெருங்கூட்டம் கூட்டி

இசையும் இடம், பெரிய விருந்தோம்பும் கட்டடம்: இன்று ரா மண்டபமாய் விளங்கும் இடமே. சென்னை ஷெரிப் அழைப்பின் திரளான ஜனங்கள் கூடினர் 1912, ஜனவரி 15–ஆம் தேதி மண்டபத்தில்.

கவர்னர் தமது சொற்பொழிவில், நிலைக்கும் ஞாபகச் சின் ஒன்று கிருஷ்ணஸ்வாமி ஐயருக்கு நிறுவவேண்டுமெனக் குறித்

சிலர் உடனே சிலையைவிட வேறு உபயோகமான சின்ன தாம் இவருடைய வாழ்க்கையின் உயர்வை நன்கு வெளி என்று சொல்ல ஆரம்பித்தனர்.

ஆனால் மேடையில் அமர்ந்திருந்த மணி ஐயர் எழுந்து ஆவேச துடன் பேசலானார். கிருஷ்ணஸ்வாமி ஐயருடைய தயாள சுபா தையும் பரோபகாரத் தன்மையையும் நினைத்து அவருக்கு ஒரு வைப்பதே சரி என்றும், அச்சிலையை எந்தச் செனெட் மண்டபத்தில் இவருடைய உபதேசங்களைக் கடைசியில் வாரி வழங்கினாரோ, இடத்தில் நிலைநாட்ட வேண்டுமென்றும், மேலும் இவருடைய உ வாக்கின் ஏதாவது ஒரு சொற்றொடரை சிலையின் கீழுள்ள க பொறிக்கவேண்டுமென்றும் அழுத்தமாய்க் கூறினார். எதிர் பேசியவர்களைக் கவனிக்கவேண்டாமெனக் கரகோஷத்தினிடை சொல்லி முடித்தார்.

ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகள்தாம் கடைசிப் பேச்சாளர் அன்று. ஒன்றே கிருஷ்ணஸ்வாமி ஐயரை மேலே தூக்கியது. தாம் மின்றி, மற்றவர்களும் மலை உச்சியின் தூய்மையான காற் சுவாசிக்க வேண்டுமென்றுதான் வாழ்க்கை முழுவதும் உழைத்தார் என்றார். உபதேசமும் நடத்தையும் மாலையிட்டு ம பந்தல் கிருஷ்ணஸ்வாமி ஐயரின் உள்ளமான கல்யாண மண் தான் என்று வெகு அழகாய் வருணித்தார்.

சிலைக்கான தீர்மானம் நன்கு நிறைவேறியது. தாமதமின்றி அவ்விடத்திலேயே 19,377 ரூபாய்களுக்குள்ள கையொப்பங்கள் ஜாபிதாவில் விழுந்தன.

கடலலைகள் மடிந்து மடிந்து விழும் சமுத்திரக்கரையை நோக்கி வண்ணம் இவர் சிலை செனெட் மண்டபத்தைச் சுற்றியுள்ள இடத்தில் நிலைத்துவிட்டதை இன்றும் காண்கிறோம். மக்கள் மாறிச் சென்றாலும் தருமமும் சேவையும் என்றென்றும் நிலைக்க வேண்டும் என்பதற்கு அறிகுறியாக இவர் உருவம் விளங்குகிறது.